www.tamilarangam.net

# களத்தில்

> உண்மையில் எமது மக்களின் பாரிய உயிரிழப்பிற்கும் அவர்களின் உடைமை நாசத்திற்கும் சிங்கள ஆளும் வர்க்கத்தின் இனவெறி பிடித்த தலைவர்களே பொறுப்பு ஏற்க வேண்டும்.
>
> - தமிழீழத் தேசியத் தலைவர்

திருவள்ளுவர் ஆண்டு 2028 (11.02. 1998) தாயகத்தின் உண்மை நிகழ்வுகளைத் தாங்கி வரும் செய்தித் தாள் (154) அன்பளிப்பு: 60 p

# கிளிநொச்சி மீட்பு-மக்கள் மகிழ்ச்சி

## ✳ ஆனையிறவுக் கோபுரம் முறிப்பு ✳ தொலைத் தொடர்பு அறுப்பு ✳ படைகள் ஓடஓட விரட்டியடிப்பு

இம்மாதம் 1ஆம் திகதி தொடக்கம் இருநாட்களாக விடுதலைப் புலிகள் மேற்கொண்ட பலம்பொருந்திய தாக்குதல்களால் கிளிநொச்சி மீண்டும் மீட்கப்பட்டது. கிளிநொச்சி சிங்களப் படைத்தளத்தின் காவலரண்கள் சிறிய முகாம்களை மின்னல் வேகத்தில் தாக்கியழித்துக் கொண்டு முன்னேறிய விடுதலைப் புலிகள், பல கிலோமீற்றர் நீளமான காவலரண்களையும் சிறிய முகாம்களையும் துடைத்தழித்துக் கொண்டு சென்று கிளிநொச்சியின் மையப்பகுதியை வெற்றிகரமாகத் தமது பூரண கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தனர். இந்தச் சண்டையின்போது விடுதலைப் புலிகளின் ஆட்டிலறி அணிக்கு முகங்கொடுக்க முடியாத சிங்களப் படைகள், முந்நூறுக்கும் மேற்பட்ட படையினரை இழந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. முதல்நாள் தாக்குதலில் தமிழீழ விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்ட சிறீலங்காப் படையினரின் சடலங்களில் சிதைந்த நிலையில் உள்ளனவற்றைத் தவிர்த்து 41 இராணுவத்தினரின் சடலங்களை சர்வதேச போர் விதிகளுக்கு ஏற்ப செஞ்சிலுவைச் சங்கத்தின் மூலம் சிறீலங்காப் படையினரிடம் ஒப்படைத்தனர். ஆயினும் இச் சடலங்களை அவர்களது குடும்பத்தினரிடம் ஒப்படைக்காது சிறிலங்காப் படையினர் தாமே எரித்து விட்டதாகத் தெரிகிறது. சிறீலங்கா அரசு, உண்மைக்கு மாறான தனது புள்ளிவிபரங்கள் வெளியே தெரியாதபடி

தொடர்ச்சி 12 ம் பக்கம்...

## எழுச்சிப் பேரணிகள் - விழிப்புப் போராட்டங்களில் இனமான உணர்வுடன் பெருந்திரளான மக்கள்

### ✳ கனடாவில் 20,000க்கு மேல்
### ✳ லண்டனில் 12,000க்கும் அதிகம்
### ✳ பொன்விழாப் பரப்புரைக்கும் பேரிடி

**"இன்று சர்வதேசக் காற்றிலாடும் எங்கள் கொடியை நாளை ஐக்கிய நாடுகள் சபையிலாட வைப்போம்"**

என்ற சூளுரையுடன் எழுச்சிப் பேரணிகளையும் விழிப்புப் போராட்டங்களையும் நடாத்தி, சிறீலங்காவின் சுதந்திரப் பொன் விழாவை கறுப்பு நாளாக உலகுக்கு எடுத்துக் காட்டியுள்ளனர் புலம்பெயர் தமிழர்கள்.

சிறீலங்கா அரசாங்கம், இலங்கைத் தீவிலிருந்து பிரித்தானிய காலனித்துவம் விலகிய 50வது ஆண்டைச் சுதந்திரப் பொன் விழாவாக பெப்ரவரி 04இல் கொண்டாடத் திட்டமிட்டது. அதேவேளை அதனைச் சாட்டாக வைத்து, சிங்களப் பெரும்பான்மை அரசாங்கம் நடாத்திய நவகாலனித்துவ ஆட்சியிலும் (1948–1972 மே வரை) அதன்பின் நடாத்திய – நடாத்திக் கொண்டிருக்கின்ற ஆக்கிரமிப்பு ஆட்சியிலும் (1972–இன்று வரை) சுதந்திரம் மறுக்கப்பட்டு – ஜனநாயகப் பங்களிப்பு நிராகரிக்கப்பட்டு துன்புறும் மக்களும் சிறீலங்கா அரசில் இணைந்து ஜனநாயக நல்லாட்சியில் இடம் பெறுவது போன்ற ஒரு மாயையை

தொடர்ச்சி 10 ம் பக்கம்...

## தம்பலகாமத்தில் எட்டு தமிழ் மக்களை படையினர் துடிக்கத் துடிக்கக் கொன்றனர்

### ✳ சர்வதேச மன்னிப்புச் சபை கண்டனம்
### ✳ நீதி விசாரணைக்கு வற்புறுத்தல்

தம்பலகாமம் பொக்குறுணிக் கிராமத்தில் புதுவீடு குடிபுகு விழாவில் மகிழ்ந்திருந்த ஆறு அப்பாவித் தமிழ்ப் பொது மக்களை சுற்றிவளைத்த இருபது சிறீலங்காப் பொலிசார் இரு சிறுவர்கள் உட்பட அந்த ஆறு தமிழர்களையும் வீட்டு வளவொன்றுக்குள் இழுத்துச் சென்று சுட்டுக் கொன்றுள்ளனர். இதையடுத்து அப் பகுதியில் உள்ள ஒவ்வொரு

தொடர்ச்சி 10ம் பக்கம்...




இலண்டன் பேரணியில்........

## புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எட்டாவது மாதமாக ஜயசிக்குறுய் தொடர்கின்றது
# பேரினவாதத்தின் ஆசை ஈடேறுமா!

"கானகத்து ஆவிகள்" என்ற தலைப்பில் வன்னிச்சமரை - அமெரிக்காவில் இருந்து வெளிவரும் 'நியூஸ்வீக்' சஞ்சிகை (08-12-97) மதிப்பீடு செய்துள்ளது. வியட்நாமின் காடுகளுக்குள் புகுந்து, வியட்கொங் போராளிகளிடம் சிக்கி, அமெரிக்க இராணுவம் சீரழிந்ததுபோல, வன்னிக்காடுகளுக்குள் நுழைந்து - புலிகளிடம் சிக்கி - சிங்களப் படைகள் அவதிப்படுகின்றன என்று அது விபரித்துள்ளது.

நியூஸ்வீக் சஞ்சிகையின் வன்னிக் கள விவரணம் யதார்த்தமானதே. ஜயசிக்குறுய் நடவடிக்கை தொடர்பாக அரசாங்கத்தின் விருப்பமும் – வன்னிக்கள யதார்த்தமும் முட்டி மோதுகின்றன. இதனால், ஜயசிக்குறுய் தலைமையும் – சிங்கள இராணுவத் தலைமையும் கருத்துமோதலில் ஈடு படுகின்றன. இதனாலேயே, ஜயசிக்குறுய் தலைமைகள் அடிக்கடி மாற்றப் படுகின்றன. இது காரணமாகவும் – பெரும் இழப்புகள் காரணமாகவும் படையினரின் மத்திய மற்றும் கீழ்நிலை அதிகாரிகள் – சிப்பாய்கள் குழப்பத்தில் மூழ்கியுள்ளனர்.

கடந்த 8 மாதகாலமாக நடைபெறும் தீவிர சமரில் சிங்களத்தின் சிறப்புக் கொமாண்டோ அணிகள் பலத்த அடிவாங்கி – சிதைந்துபோய் உள்ளன. அதேவேளை, படையினரின் நகர்வு முயற்சிகளை புலிகள் கடுமையாகத் தாக்குவதால், முன் முனையில் சமராடும் சிங்களத்தின் சிறந்த அணிகளும் கடுமையான சேதங்களைச் சந்தித்து ள்ளன. இவை காரணமாக, சிங்கள இராணுவத்தின் முன்னணிப்படை அழிந்தபடி உள்ளது.

இதேசமயம், ஜயசிக்குறுய் படையினர் மீதான தாக்குதல்களின்போது பெருமளவு வாகனங்கள் – களஞ்சியங்கள் அழிந்து வருகின்றன. அத்துடன், புலிகளின் ஆட்டிலறி – எறிகணை வீச்சுக்களாலும் நாள்தோறும், படைவாகனங்கள் சேதமாகின்றன. இதனால், ஜயசிக்குறுயின் பின்புலவேலைகள் பெரும் சிரமத்தைச் சந்தித்துள்ளன. இந்த சிரமத்தை பருவமழையின் தீவிரம் மேலும் கடுமையாக்கியுள்ளது. ஜயசிக்குறுய் படைகள் களத்தை விரிவாக்கம் செய்யச் செய்ய, அதன் விநியோகத் தொப் புள்கொடி பலவீனமடைந்து வரு கின்றது.

இதேவேளை, சிங்களப்படையின் ஆயுதங்களும் – சக்திமிக்க இராணுவ உபகரணங்களும், புலிகளின் திடீர்த் தாக்குதல்களால் கைமாறி புலிகளிடம் போய்ச் சேருகின்றன. இதனால், படையினர் மீதான தாக்குதலின்போது புலிகள் அதிகளவு படைக்கல சக்தியை குறி தவறாது பயன்படுத்தி, சிங்களச் சிப்பாய்களைக் கிலிகொள்ளச் செய்கின்றனர். இவ்விதம் படையினரின் சண்டைவலு, ஜயசிக்குறுயில் கடுமை யாகச் சேதப்பட்டுள்ளது.

அத்துடன், ஆட்பற்றாக்குறை என்ற நெருக்கடியையும் சிங்களப் படை எதிர்கொள்கின்றது. இந்த எட்டுமாதச் சமரில் மட்டும் 3,000 படையினர் பலியாகிவிட்டனர். 7,000இற்கு மேற்பட்டோர் காயமடைந்து விட்டனர். அதாவது பத்தாயிரம் பேரை ஜயசிக்குறுய் சமரால், சிங்களப்படை இழந்துள்ளது. இந்த இழப்பை ஈடுசெய்ய படைத்தலைமை பெரும் சிரமப்படுகின்றது. ஜயசிக்குறுயை வெற்றிகரமாக முடித்துவிட்டு – அந்த வெற்றித் திளைப்பில் சிங்கள மக்கள் மூழ்கியிருக்கும்போது – புதிதாக படைக்கு ஆட்சேர்க்கலாம் என்றிருந்த அரசின் திட்டமும் தவிடு பொடியாகியுள்ளது.

எனினும், நடவடிக்கையை நிறுத்தும் எண்ணம் இராணுவத் தலைமைக்கு இல்லை. ஜயசிக்குறுய் விரைவில் முடியும் என்று அடிக்கடி காலக்கெடுக்களை விதித்து படை யினரையும் உற்சாகப்படுத்தி – சிங்கள மக்களையும் திருப்திப்படுத்த ரத்வத்த முயல்கின்றார். இப்போது, பெப். 04இற்கு முன்னர் பாதை அமைப்பு பூர்த்தியாகும் என்று, அவர் புதிய காலக்கெடுவை விதித்துள்ளார்.

கடந்த 225 நாட்களாக முக்கி – முனகியும் முடிவு பெறாத இராணுவ நடவடிக்கையை – வருகின்ற ஒரு மாதத்திற்குள் முடித்து விடுவதாக அவர் கூறுவதை நம்ப எவரும் தயாராக இல்லை.

முட்டாள்த்தனமாக படையினரை முன்தள்ளி பாதையை அமைத்தாலும் கூட, அதை எப்படி பாதுகாத்து வைத்திருப்பது? என்ற நியாயமான கேள்வியை சில சிங்கள இராணுவ ஆய்வாளர்களே எழுப்பியுள்ளனர். பாதையின் இருமருங்கும் பத்து கிலோ மீற்றர்கள் தூரத்தைக் கைப்பற்றி வைத்திருந்து பாதையை பாதுகாக்க முடியும்! என்று ரத்வத்த, கேள்விக்கு பதிலளித்துள்ளார். ஆட்பற்றாக்குறையால் அவதிப்படும் ஒரு படைத் தலைவரின் பொறுப்புணர்ச்சியற்ற பதிலாகவே அது உள்ளது.

சிங்களப்படையைப் பொறுத்தவகையில் ஜயசிக்குறுய், ஒரு நீண்ட இராணுவப்பயணம். இந்தப் பயணத்தில் அது பேரிழப்புக்களையும் – பெரும் நெருக்கடிகளையுமே இதுவரை சந்தித்துள்ளது. அரைப்பங்கைக் கூட எட்டாத நிலையில், ஜயசிக்குறுய் படை சந்தித்த இந்த இழப்பு, எதிர்காலத்தில் அது சந்திக்க இருக்கும் அனர்த்தத்தை எடுத்துக் கூறப்போதுமானது.

**சிங்களப்படையைப் பொறுத்தவகையில் ஜயசிக்குறுய், ஒரு நீண்ட இராணுவப்பயணம். இந்தப் பயணத்தில் அது பேரிழப்புக்களையும் – பெரும் நெருக்கடிகளையுமே இதுவரை சந்தித்துள்ளது. அரைப்பங்கைக் கூட எட்டாத நிலையில், ஜயசிக்குறுய் படை சந்தித்த இந்த இழப்பு, எதிர்காலத்தில் அது சந்திக்க இருக்கும் அனர்த்தத்தை எடுத்துக் கூறப்போதுமானது.**

**(டிசம்பர் 97 'விடுதலைப் புலிகள்' செய்தித்தாளில் வெளிவந்த கட்டுரையே இது.)**

## ஜயசுக்குறுயின் கடிவாளம்.......

கைப்பற்றப்பட்ட இடங்களுடன் சேர்த்து, பாதையையும் பாதுகாக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக, பத்திரிகையாளரின் கேள்வி ஒன்றுக்கு ரத்வத்த பதிலளித்திருந்தார். இது படையினரின் பாதுகாப்புப் பிரச்சனையைத் தீர்த்து வைக்கும் அருமருந்தாக அமைந்துவிட்டது.

ஜயசிக்குறுய் படையினரைப் பொறுத்த வகையில் ஒருவகைப் பிரச்சனையைத் தீர்க்க, அது இன்னொரு வகைச் சிக்கலை அவர்களுக்கு உண்டுபண்ணுகின்றது. இராணுவத் தலைமைப்பீடமும் – சிங்களத்துப் பத்திரிகைகளும் ஜயசிக் குறுயின் முடிவு பற்றி சிங்கள மக்களுக்கும் – இராணுவத்திற்கும் நம்பிக்கை யூட்டுகின்றன.

தமிழீழ விடுதலைப் போராட்ட வரலாற்றில், ஜயசிக்குறுய் சமர், ஒரு பிரத்தியேக இடத்தைப் பிடித்துவிட்டது. சமர் முடிவுறாத இன்றைய நிலையிலும் கூட ஜயசிக்குறுய் ஒரு பாரிய சமராகவே விளங்குகின்றன. சமர் நீளும்காலம் – சமரின் இராணுவப் பரிமாணம் என்பவற்றைக் கருத்தில் எடுத்தால், உலகின் பிரபலமான சமர்களுடன் ஒப்புநோக்கக் கூடிய அளவுக்குச் சர்வதேச முக்கியத்துவம் இதற்கு வழங்கப்படும்.

9 மாதகாலமாக இடைவிடாது – தீவிரமான முறையில் ஜயசிக்குறுய் சமர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இது நவீன இராணுவ வரலாற்றில் அரிதான ஒரு சம்பவம்.

இரண்டாம் உலகப் போரில், சோவியத் யூனியனைக் கைப்பற்ற ஜேர்மனியப் படைகள் நடாத்திய ஒரு சமர் பிரபல்யமானது.

'ஒப்பரேசன் பார்பறோசா' என்பது அதன்பெயர். இது இரண்டு வருடங்கள் இடைவிடாது தீவிரமான முறையில் தொடர்ந்து நடந்து – இறுதியில் தோற்றது. இந்தச் சமர்த் தோல்வியுடன்தான் ஜேர்மனியின் வீழ்ச்சி ஆரம்பமாகி – இறுதியில் போரில் தோற்றது. இரண்டாம் உலகப் போர் தொடர்ச்சியாக 6 வருடங்கள் நடந்தது. ஆனால், அந்தப் போருக்கு உட்பட்ட நிலையில் நடந்த சமர்கள், மாதக்கணக்காக நீள்வது என்பது வெகு அபூர்வம். இரண்டாம் உலகப் போர் கண்ட பாரிய சமர் 'ஒப்பறேசன் பார்பறோசா.'

ஒப்பறேசன் பார்பறோசாவுக்கும், ஒப்பறேசன் ஜயசிக்குறுயிக்கும் இடையே பல்வேறு ஒற்றுமைகள் உண்டு. அவற்றின் முடிவுகளுக்கு இடையேயும் ஒற்றுமை காணப்படுமா! என்பது ஆர்வமான ஒரு விடயமாகும். ✷

## படைத்தளத்தின் உள்ளேயும் பொன்விழாவை கொண்டாட முடியவில்லை

மட்டக்களப்பு படைத்தளத்திலே சிங்களக் கொடியேற்றி சுதந்திரப் பொன்விழா கொண்டாட என அணி அணியாகப் படையினரும் சிறிலங்காப் படை அதிகாரிகளும் ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். அவ்வேளையில் வானைக் கிழித்துக்கொண்டு வந்து விழுந்த ஆட்டிலறி எறிகணைகளுக்கு அஞ்சி உயிரைப் பாதுகாக்க பதுங்கு குழிக்குள் பாய்ந்தனர் படைஅதிகாரிகள். இதனால் சிங்களக் கொடியினை தமிழீழ மண்ணில் ஏற்றுகின்ற ஆக்கிரமிப்புப் கொண்டாட்டம் கைவிடப்பட்டது. அன்று காலை 8 மணிக்கு புலிகள் நடத்திய இந்த ஆட்டிலறித் தாக்குதலில் 20 இராணுவத்தினர் காயமடைந்ததாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன. இதற்கிடையில் மட்டக்களப்புச் செயல கத்தில் சிறிலங்காப் பிரதியமைச்சரும் இராணுவ அதிகாரிகளும் 'பொன்விழா' கொடியையேற்ற ஆயத்தமாக இருந்த வேளையில் அங்கும் விடுதலைப் புலிகளின் ஆட்டிலறி எறிகணைகள் விழத் தொடங்கியதெனவும் இதனால் நிலைகுலைந்துபோன சிறிலங்கா பிரதியமைச்சரும் இராணுவ அதி காரிகளும் தலைதப்பினால் போதுமென கொடியேற்ற வைபவத்தைக் கைவிட்டு ஓடி மறைந்துள்ளனர். அன்றைய தினம் மட்டக்களப்பு விமானப் படைத்தளமும் விடுதலைப் புலிகளின் ஆட்டிலறித் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளது. இதில் அறு சிறிலங்கா விமானப்படையினர் காயமடைந்ததாகக் கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

இவ்வாறு சிறிலங்கா படைத்தளத்தின் உள்ளே கூட சுதந்திரப் பொன்விழாக் கொடியையேற்ற முடியாமல் தத்தளித்த நேரம் விடுதலைப் புலிகள் கிளி நொச்சியினை மீட்டு அங்கே தமிழீழத் தேசக் கொடியைக் கம்பீரமாக ஏற்றி வைத்ததாக கொழும்புப் பத்திரிகை யொன்று வர்ணித்துள்ளது. ✷

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## அர்த்தமுள்ள கூற்றுக்கள்

இலண்டன் மாநகரில் 1-2-98 இல் நடைபெற்ற தமிழர் எழுச்சிப் பேரணி மூன்று உண்மைகளை உலகுக்குத் தெளிவுபடுத்தியது. முதலாவது, தமிழரின் சுதந்திரப் போராட்டம் முற்றுப் பெறவில்லை என்பது. இரண்டாவது, தமிழ் மக்களின் விருப்பும் அரசியல் பணிவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கே உரியது. மூன்றாவது, தமிழரின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டாலே தீர்வு ஏற்படும்.

இந்த மூன்று உண்மைகளும் மக்கள் வெள்ளமெனத் திரண்டெழுந்த தமிழீழ புலம்பெயர் மக்களால் மட்டுமல்ல, சர்வதேச மக்களாலும் அங்கீகரிக்கப்பட்டு வருகின்றன என்பதை, சர்வதேச மக்களின் குரலாக எழுச்சிப் பேரணி இறுதிக்கூட்ட மேடையிலே பேசிய பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களின் குரல்கள் எடுத்துக் காட்டின.

தமிழரின் சுதந்திரப் போராட்டம் முற்றுப் பெறவில்லை என்பதனை பிரித்தானியப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. சைமன் கியூஸ் அவர்கள் தெளிவாக எடுத்துரைத்தார். அத்துடன், 1833இல் தமிழர்களதும் சிங்களவர்களதும் அரசுகளை ஒருங்கிணைத்து அதன் வழி இன்றைய பிரச்சனைகளுக்கு வித்திட்ட பிரித்தானியாவுக்கு, தமிழர்களுக்குப் பாதுகாப்பான அமைதி ஏற்படக்கூடிய வகையில் தமிழர் பிரச்சனையை தீர்த்து வைக்கும் பெரும் பொறுப்பு உண்டு என்பதனையும் சுட்டிக்காட்டினார்.

மேலும் சைமன் கியூஸ் அவர்கள் தமதுரையில், தமிழ்மக்களின் வாழ்வின் மீதும் சுதந்திரத்தின் மீதும் சமூக ஒற்றுமை மீதும் ஏற்படுத்தப்பட்டுள்ள ஆக்கிரமிப்பை விலக்க அவர்கள் நடாத்தும் போராட்டத்துடன் உலக மக்கள் தோளோடு தோள் நிற்கிறார்கள் என்னும் இந்தச் செய்தி, அந்த மக்களுக்கு அறிவிக்கப்படுதல் முக்கியமானது எனவும் கூறினார். சிறீலங்கா அரசின் பரப்புரைகள் உலகின் மனச்சாட்சியினை மழுங்கடிக்காது என்பதற்கு உதாரணமாக அமைந்தது அவரின் பேச்சு. தமிழர்களின் சுதந்திரப் போராட்டத்தை ஒடுக்குவதற்கு மனித் உரிமை மீறல்களை சிறீலங்கா ஆயுதமாகப் பயன்படுத்தி மனிதாய உணர்வின்றி தமிழர்களை இனக்கொலைகள், சித்திரவதைகள், பாலியல் வன்முறைகள் என்பனவற்றுக்குத் தொடர்ச்சியாக உள்ளாக்கி வருவதையும் திரு. சைமன் கியூஸ் அவர்களின் உரை தெளிவாக வெளிப்படுத்தியது.

சிறீலங்கா ஆக்கிரமிப்புப் படைகளை தமிழர் தாயகத்திலிருந்து வெளியேறச் செய்வதன் மூலமே, தமிழர்களின் மனித உரிமைகளைப் பேண முடியும். இது நடைபெறாதவரை தமிழர்கள் மேலான மனித உரிமைத் துன்புறுத்தல்கள் ஒரு தொடர்கதையாகவே நீண்டு செல்லும். ஆயுத அழுத்தங்களாலும் படைகளின் இனக்கொலைகள் – பயமுறுத்தல் களாலும் தமிழர்களிடையே இனங்காணக் கூடிய அச்சத்தை தோற்றுவித்து, அவர்களது அரசியல் பணிவை வலுக்கட்டாயமாகப் பெறுதலே சிறீலங்காவின் உள்நோக்காக உள்ளது. இவ் அரச பயங்கர வாதத்திற்கு அஞ்சியே தமிழர்கள் வெளிநாடுகளில் அகதிகளாக அரசியல் தஞ்சமடையும் சூழ்நிலை தோன்றி வளர்ந்து வருகிறது. இது குறித்து கேள்வி எழுப்பிய மற்றொரு பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினரான ஜெரமி கோபின் அவர்கள், தமிழர்கள் ஏன் அகதிகளாக இங்கு வருகிறார்கள் என்பதனை எண்ணிப் பார்க்க வேண்டிய பொறுப்பு பிரித்தானிய அரசிற்கு உண்டெனக் கூறினார். அத்துடன், பயங்கரவாதிகள் எனத் தடை செய்வது ஒரு நாளும் பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது என்பதனையும் அது சிறீலங்கா அரசினை திருப்திபடுத்தவே உதவும் எனவும் எடுத்துக்கூறி, தமிழர்களுடைய பிரச்சினைக்குத் தீர்வு அவர்களின் "சுயநிர்ணய உரிமையை" அங்கீகரித்து அதன் அடிப்படையிலான அரசியல் தீர்வை முன்னெடுப்பதேயாகும் என அவர் மிக உறுதியாகக் கூறினார். வோல்தம் பொரஸ்ட் பாராளுமன்ற உறுப்பினர் நீல் ஜெராட் அவர்கள் தனதுரையில், "ஒரு தனிமனித குற்றச் செயலைக் கூட தண்டிக்க முடியாத சிறீலங்காவின் மனித உரிமை ஆணைக்குழு நிறுவப்பட்டிருக்கத்தான் வேண்டுமா?" என நியாயமான கேள்வியினை எழுப்பினார். அத்துடன், தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தலே பிரச்சினைக்குத் தீர்வு ஏற்பட வழி சமைக்கும் என்பதையும் அழகாக எடுத்துக்கூறி, போரில் சிறிலங்காவால் வெல்ல முடியாது என்ற உண்மையையும் இடித்துக் கூறினார்.

பாராளுமன்ற உறுப்பினர்களின் இக்கூற்றுக்கள் எல்லாம் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை வெளிப்படையாக அங்கீகரித்ததுடன், சர்வதேச மக்கள் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையினை ஏற்கத் தொடங்கிவிட்டமையையும் தெளிவாகக் காட்டியது. அதேவேளை இத்தனை கொடுமைகளுக்கும் அச்சுறுத்தல்களுக்கும் பின்னரும் தமிழீழ மக்களின் சுயமான விரும்பும் அரசியற் பணிவும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கே உரியது என்பதற்கு, பல்லாயிரக்கணக்கில் கடுங்குளிரிடையும் திரண்டெழுந்த மக்களே சாட்சி பகன்றனர்.

தமிழீழ விடுதலை புலிகள் தமிழீழ மக்களினது, தமிழீழத் தேசத்தினது தேசிய பாதுகாப்புக்காக இயங்கும் மக்கள் படை. 1982ஆம் ஆண்டில் இருந்து 31.12.97 வரை 15 ஆண்டுகளில் 92 ஆண் கரும்புலிகள், 23 பெண் கரும்புலிகள், 1594 பெண் போராளிகள் உட்பட பதினோராயிரத்து ஐநூற்றிபத்து போராளிகள் மாவீரர் ஆகினர். அம்மாவீரர்களின் உயிர்த்தியாகத்தால் தமிழீழ விடுதலை முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. அவர்களது தியாக வாழ்வின் உறுதியினால் தமிழீழத் தேசம் விடுதலை காணும் நாள் நெருங்கி வருகிறது. திரு. சைமன் கியூஸ் பா.உ கூறியது போல், தமிழர்கள் அழுவதற்கும் ஒப்பாரி வைப்பதற்கும் கூட்டங்கள் நடாத்தும் காலம் 1998இல் மறைந்து, அவர்கள் விடுதலை மகிழ்சியையும் தமிழீழச் சுதந்திரத்தையும் கொண்டாடும் காலம் உருவாகும்.

இது விரைவுபடுவது புலம்பெயர் தமிழர்களாகிய நாம் சர்வதேச பணிமனைகளின் பணிகளில் எவ்வளவு துரிதமாக பணிகளை பொறுப்பேற்று, உதவிகளை அளித்து உழைக்கிறோமோ அதிலேயே தங்கியுள்ளது என்பதனை நாம் இந்நேரத்தில் எடுத்துக்கூற விரும்புகிறோம். இலண்டன் 'டிரவல்கர்' சதுக்கத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன் ஏற்றப்பட்ட தமிழீழத் தேசியக் கொடி, ஐக்கிய நாடுகள் சபையிலும் பட்டொளி வீசிப் பறக்கும் காலத்தை நாமே உருவாக்க வேண்டும். உருவாக்குவோம்! ✳

# தமக்குத் தாமே போட்ட கட்டு

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் இலங்கை அரசியலை மேலும் நெருக்கடியில் தள்ளியுள்ளது. விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ததன் மூலம் இம் முட்டுக்கட்டையை ஏற்படுத்தியு ள்ளது. சந்திரிகா அரசின் இவ் நடவடிக்கையானது, நிச்சயமாக ஒரு அரசியல் விவேகமற்ற கையாலாகாத் தனத்தின் வெளிப்பாடு என்றே கூறவேண்டும். விடுதலைப் புலிகள் இயக்கம் மீது சிறிலங்கா அரசாங்கம் தடைவிதிப்பதானது, தற்போது அரசியல் இராணுவ சூழ்நிலையில் புலிகள் மீது எந்தவித பாதிப்பையும் திணித்துவிடப் போவதில்லை. ஏனெனில், இது வரையிலான நடைமுறைகூட புலிகள் இயக்கம் மீது அரசாங்கம் தடைவிதித்தது போலேயே இருந்தது. அத்தோடு பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலில் இருக்கும் வரையில் இத்தடைவிதிப்பானது எந்தவித அச்சுறுத்தலையும் விசேடமாகக் கொண்டதாக இருந்துவிடப் போவதில்லை. மேலும், இத் தடைவிதிப்பானது அரசாங்கத்தைப் பொறுத்து ஒரு கடினமான காரியமாக என்றுமே இருந்ததில்லை. ஆனால், இத்தடையானது, விடுதலைப் புலிகளை விட அரசையே பெருமளவில் பாதிக்கக் கூடியதாகும். ஏனெனில், யுத்தமும் பேச்சுவார்த்தையும் என்று தனது அரசியல் இலாப நோக்கிற்காக காய் நகர்த்திக் கொண்டிருப்பவர்கள் அவர்களே. இதனை இலங்கையின் கடந்தகால அரசியல் வரலாறே தெளிவாக உணர்த்தி உள்ளது. ஒருபுறம் இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமற்றது என்பதும் விடுதலைப் புலிகள் இன்றி இனப்பிரச்சனைக்குத் தீர்வு கண்டுவிட முடியாது என்பதும் வரலாறே தெளிவுபடுத்தியுள்ளது. மறுபுறம் விடுதலைப் புலிகள் இயக்கம் மீது கடந்த காலத்தில் விதிக்கப்பட்ட தடையினால் புலிகள் தரப்பில் பாதிப்பு எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. அரசாங்கமே அதை மீளப் பெறவேண்டிய நிலையும் இருந்தது. அத்தோடு, சந்திரிகா அரசாங்கம் தற்போது மேற்கொள்ளும் இனப் பிரச்சனை தீர்வுக்கான அணுகுமுறை ஏற்கனவே இந்திய இராணுவத்தால் கடைப்பிடிக்கப்பட்ட ஒன்றே. அதாவது புலிகள் இயக்கத்தை இராணுவ ரீதியில் தோற்கடித்து அரசியல் ரீதியில் ஓரங்கட்டிவிடுவது என்பதாகும். ஆனால், இம் முயற்சியானது பலன ளிக்காதது மட்டுமல்ல, இந்தியாவுக்கு அவமானத்தைத் தேடிக்கொடுத்தது ஒன்றாகியும் விட்டது. இவ்வாறு இருந்தும், சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கமானது விடுதலைப் புலிகள் இயக்கம் மீது விதித்த தடையானது முன்யோசனையற்ற, அரசியல் விவேகமற்ற செயல் ஒன்றாகவே நிச்சயம் இருக்கும். ஏனெனில், விடுதலைப் புலிகளுடனான அரசியல் உறவை மேம்படுத்திக் கொள்ளக் கூடியதாக இருந்த ஒரே வழியையும் சந்திரிகா அரசாங்கம் அடைத்து விட்டது எனலாம். சந்திரிகா குமாரதுங்கா அரசாங்கத்தின் ஆத்திரத்தின் வெளிப்பாடாகவே இவ்வறிவிப்பு வெளிவந்துள்ளது. ஒருவகையில் அதன் கையாலாகாத் தனத்தின் வெளிப்பாடு என்றே கூறுதல் வேண்டும். அதாவது தலதா மாளிகையின் அருகில் நடந்த குண்டு வெடிப்பினால் அரசாங்கத்தின் மீது எழுந்துள்ள சிங்களவர்களின் சீற்றத்துக்கு வேறுவழி தெரியாத நிலையில் இவ் அறிவிப்பின் மூலம் அரசாங்கம் அவர்களைத் திசைதிருப்ப முனைந்துள்ளது எனலாம். சந்திரிகா அரசு செய்துள்ள இவ் முன் யோசனையற்ற செயலானது, ஒட்டு மொத்தத்தில் விடுதலைப் புலிகளுடன் அரசாங்கம் அரசியல் நடத்துவதையும் அன்றி இனப்பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான சந்தர்ப்பத்தையும் நெருக்கடிக்குள்ளாக்கியுள்ளது. மாறாக, நீண்டகாலப் போருக்கு அது வழிவகுத்துள்ளது. ஆனால், இவ் யுத்தமானது அரசாங்கத்துக்குச் சாதகமாக இருக்கப் போவதில்லை என்பதும் ஏற்கனவே உறுதி செய்யப்பட்டதாக உள்ளது. அதாவது, அரசின் யுத்தத்தில் வெற்றி பெறவோ அன்றி யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரவோ இயலப்போவதில்லை. இந்த நிலையில், புலிகள் மீதான சந்திரிகா அரசின் தடையானது, இனப்பிரச்சனை குறித்த விடயத்தில் தமக்குத் தாமே போட்ட கால்கட்டாகவே நிச்சயம் இருக்கும்.

**புலிகள் மீதான சந்திரிகா அரசின் தடையானது, இனப்பிரச்சனை குறித்த விடயத்தில் தமக்குத் தாமே போட்ட கால்கட்டாகவே நிச்சயம் இருக்கும்.**

நன்றி–ஈழநாதம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு வெல்ல முடியாத அணுகுமுறை

யாழ் குடாநாட்டிற்கான தரைவழிப் பாதையைத் திறக்கும் நோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை, ஒன்பதாவது மாதத்திலும் தொடர்ந்து கொண்டு இருக்கின்றது. இதன் விளைவாக இப்படை நடவடிக்கை பற்றி

> பெப்ரவரி 4ஆம் திகதி முடிந்த பின்னரும் அதாவது சுதந்திரப் பொன்விழா கொண்டாட்டத்தின் பின்னர்கூட வவுனியா – கிளிநொச்சி தரைவழிப் பாதையைத் திறப்பது சாத்தியமாகவில்லை. மாறாக, விடுதலைப் புலிகளின் படையணிகள் 03 – 02 – 98 இல் கிளிநொச்சியின் தெற்குப் பகுதியையும் அதன் மையப்பகுதியையும் கைப்பற்றி சிறீலங்காவின் சுதந்திரப் பொன்விழாவன்று கிளிநொச்சி நகரில் தமிழீழத் தேசியக்கொடியை ஏற்றி பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தவின் வீறாப்பை தவிடுபொடி ஆக்கியுள்ளனர். இது சிறீலங்கா அரசியல் தலைமைப்பீடத்திற்குப் பெருத்த ஏமாற்றத்தையும் இராணுவ தலைமைப் பீடத்திற்கு ஒரு தலைக்குனிவையும் ஏற்படுத்திய விடயம் என்பதை எவருமே மறக்க முடியாது.

உற்சாகத்துடனும் பெருமிதத்துடனும் பேசிய சிறீலங்கா அரச தரப்பினர், இன்று சற்று அடக்கி வாசிக்கத் தொடங்கியுள்ளனர். விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரைத் தலைமை தாங்கி நடத்துபவரும் அதன் மூலம் தன்னைச் சிங்கள தேசத்தின் "ஹீரோ"வாகக் காட்டத் துடிப்பவருமான பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, "யாழ் குடாநாட்டிற்கான தரைவழிப் பாதையைத் திறப்பதற்கு நாம் பெப்ரவரி 4ஆம் திகதியைக் கால எல்லையாக அறிவித்திருக்கின்றோம்" என முதலில் கூறியிருந்தார். ஆனால், நாள் நெருங்க நெருங்க "காலக்கெடுக்கள் சூழ்நிலைகளால் மாற்றத்திற்குள்ளாகலாம்" எனவும் ஒரு போடுபோட்டார். இவ்வாறு கூறியதன்மூலம், ஜெயசிக்குறுவை மற்றொரு கால எல்லைக்கு மாற்றலாம் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தார்.

சிறீலங்காவின் 'கோபெல்ஸ்' /என அழைக்கப்படும் இராணுவப் பேச்சாளர் சரத் முனசிங்கவோ, இராணுவச் சாவடியில் கூட வெளியில் செல்லாது பாதுகாப்பிற்குக் குந்தகம் விளைவிக்கும் என ஜெயசிக்குறுய் பற்றிப் பேசுவதைத் தவிர்க்கின்றார், அதாவது ஜெயசிக்குறுய் படையினர் அண்மையில் ஏற்படுத்திய சாதனைகள் குறித்து, பாதுகாப்புக் காரணங்களுக்காக வெளியிட முடியாது என்கிறார். இதில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சரின் காரணங்களோ அன்றி இராணுவப் பேச்சாளரின் விளக்கங்களோ எவ்வாறு இருப்பினும், பெப்ரவரி 4ஆம் திகதி முடிந்த பின்னரும் அதாவது சுதந்திரப் பொன்விழா கொண்டாட்டத்தின் பின்னர்கூட வவுனியா – கிளிநொச்சி தரைவழிப் பாதையைத் திறப்பது சாத்தியமாகவில்லை. மாறாக, விடுதலைப் புலிகளின் படையணிகள் 03-02-98இல் கிளிநொச்சியின் தெற்குப் பகுதியையும் அதன் மையப்பகுதியையும் கைப்பற்றி சிறீலங்காவின் சுதந்திரப் பொன்விழாவன்று கிளிநொச்சி நகரில் தமிழீழத் தேசியக் கொடியை ஏற்றி பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தவின் வீறாப்பை தவிடுபொடி ஆக்கியுள்ளனர். இது சிறீலங்கா அரசியல் தலைமைப்பீடத்திற்குப் பெருத்த ஏமாற்றத்தையும் இராணுவ தலைமைப் பீடத்திற்கு ஒரு தலைக்குனிவையும் ஏற்படுத்திய விடயம் என்பதை எவருமே மறக்க முடியாது.

பெப்ரவரி 4ஆம் திகதிக்குள் தரைவழிப் பாதையானது திறக்கப்படும் என்ற பிரதிப் பாதுகாப்பு அமைச்சரின் அறிவிப்பானது, முன்னேற்பாடுகள் செய்யாத் தயாரிப்புக்கள் அற்ற ஒரு பேச்சல்ல. அதனை அவர் பொதுக்கூட்டமொன்றிலோ அன்றி சாதாரண வேளையிலோ கூறவில்லை. வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுக்கு வழங்கப்பட்ட ஒரு விருந்துபசாரத்தில் வைத்தே கூறியுள்ளார். இதற்கு முன்னராக ஜெயசிக்குறுய் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு சுமார் 6 மாதங்கள் கடந்துவிட்ட நிலையிலும் இதே நிலைமையே இருந்தது. அதாவது அரசதரப்பினர் கூற்றுப்படி ஜெசிக்குறுமின் இரண்டு கட்டங்களும் முடிந்தது மட்டுமல்ல, மூன்றாவது கட்டமும் ஆரம்பிக்கப்பட்டு இருந்தது. ஆகையினால் அமைச்சர் ரத்வத்தவின் கூற்றுக்கள் ஓர் அரசியல்வாதியின் வழமையான பேச்சுக்களாகிவிடக்கூடியதாக இருக்கவில்லை. ஏனெனில், ஜெயசிக்குறுய் படை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்த போது சிறீலங்கா இராணுவத் தரப்புக் கொண்டிருந்த பல மதிப்பீடுகளை ஜெயசிக்குறுயின் ஆரம்பகாலமே பொய்ப்பித்திருந்தது. ஜெயசிக்குறுய் படை நடவடிக்கையில் இராணுவத்தரப்பு ஆரம்பத்தில் திட்டமிட்டிருந்த முறையிலோ அன்றித் திட்டமிட்ட காலப்பகுதிக்குள்ளோ நடத்திமுடிக்க இயலவில்லை. இப்படை நடவடிக்கையின் திட்டமானது, பலமுறை மாற்றி அமைக்கப்பட்டதாகவும் பல மாற்றப்பட்ட கால நிர்ணயங்களைக் கொண்டதாகவும் இருந்தது. குறிப்பாக இப்படைநடவடிக்கையானது, ஆரம்பத்தில் திட்டமிடப்பட்ட போது 6–8 வாரங்களுக்குள் முடிவுக்குக் கொண்டுவரப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், அக்காலப் பகுதிக்குள் அதன் முதலாவது கட்டமே பூர்த்தி செய்யப்பட முடியாத ஒன்றாக இருந்தது. அதன் பின்னர் இப்படைநடவடிக்கையின் முதலாம் கட்டம் முடிக்கப்பட்டதாக இராணுவத்தரப்பு அறிவித்தபோது ஒரு மாதமாகவும், இரண்டாம் கட்டம் முடிந்ததாக அறிவிக்கப்பட்டபோது 6வது மாதத்திலும் நடவடிக்கையைத் தொடர்ந்து கொண்டிருந்தது. இதேசமயம் இப்படை நடவடிக்கையின் இரண்டாம் கட்டம் நிறைவுற்றதாக இராணுவத் தரப்பு அறிவித்தபோது, யாழ் குடாநாட்டிற்கான தரைவழிப்பாதையாக வவுனியா – கிளிநொச்சி நெடுஞ்சாலையா அன்றி பழைய கண்டி வீதியா என்ற குழப்பத்தை இராணுவ ஆய்வாளர் மத்தியில் ஏற்படுத்துமளவிற்கு களநிலை அமைந்திருந்தது. ஏனெனில், வவுனியா – கிளிநொச்சிப் பாதையில் பெரும்பகுதி அதாவது புளியங்குளத்தில் இருந்து கிளிநொச்சி வரையிலான நெடுஞ்சாலை புலிகளின் வசமே அப்பொழுதும் இருந்தது. இந்த நிலையில்தான் மூன்றாம் கட்ட நடவடிக்கை பற்றியும் 1997 ஆண்டின் இறுதிக்குள் யுத்தம் முடிவுக்குவரும் என்ற அறிவிப்பும் முதலில் வெளிவந்தது. இவ்வறிவிப்பு வெளியான வேளையில் ஜெயசிக்குறுயில் பெற்றுக்கொண்ட அனுபவத்தின் அடிப்படையில் தந்திரோபாயங்களும் ஜெயசிக்குறுய் துருப்புக்களுக்கு நம்பிக்கையூட்டும் வகையில் இராணுவ கட்டளைப் பீடத்தில் மாற்றங்களும் செய்யப்பட்டது.

சிறீலங்கா இராணுவத் தளபதிகள் மட்டத்தில் இரண்டாமிடத்தில் இருந்த மேஜர் ஜெனரல் சிறீலால் வீரசூரியாவே ஜெயசிக்குறுயின் நடவடிக்கையின் கட்டளைத் தளபதியாக நியமிக்கப்பட்டார். இம்மாற்றத்திற்கு முன்னைய தளபதிகள் களைப்படைந்து உள்ளதாகத் தெரிவித்த பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, மூன்றாம் கட்ட நடவடிக்கையில் புதிய போர் முறை யுக்திகள் கையாளப்படும் எனவும் தெரிவித்தார். இப் போர்முறை யுக்தியானது, இராணுவ ஆளணியில் பெரும் இழப்பினைத் தவிர்த்துக் கொள்வதாக இருக்கும் என இராணுவத்தரப்பு ஊர்ஜிதம் செய்தது. ஜெயசிக்குறுய் முதலாம், இரண்டாம் கட்டங்களில் இரா்ணுவம் பேரிழப்பைச் சந்தித்ததன் விளைவே இவ்வாறான தந்திரோபாயம் குறித்துப் பேசுவதற்குக் காரணமாகியது. ஆனால், மூன்றாம் கட்ட நடவடிக்கை என்ற ரீதியில் டிசெம்பர் நாலாம் திகதி மேற்கொள்ளப்பட்ட பெரும் நகர்வு ஒன்று புலிகளின் பதிலடியினால் பெரும் தோல்வியைச் சந்தித்தது. அமெரிக்கா 'கிறீன் பெரேட்' குழுவினால் விசேடமாக பயிற்றுவிக்கப்பட்ட சிறீலங்காவின் விசேட கொமாண்டோ படையணி அதன் வரலாற்றில் இவ்வாறு பெரிய அளவில் இழப்பினைச் சந்தித்தது. இந்த நிலையில் மூன்றாம் கட்டத்தின் முதல் நகர்வு பலத்த அடி வாங்கியது என்பது மட்டுமல்ல, இதற்கென வகுக்கப்பட்ட புதிய தந்திரோபாயத்தையும் கேள்விக்குள்ளாக்கியது. அவ்வாறு



இருந்தும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர், தரைவழிப்பாதை திறப்பதற்கான காலக்கெடுவை பெப்ரவரி 4ம் திகதிக்குப் பிற்போட்டார். இதனைத் தனது இறுதிக் காலக்கெடு போன்று வலியுறுத்தியும் பேசத் தொடங்கினார். இதற்கென 53வது படைப்பிரிவின் கட்டளை அதிகாரியாக மேஜர் ஜெனரல் நீல்டயசும் நியமிக்கப்பட்டார். ஆனால், இவ்வேளையில் ஜெயசிக்குறுய் நடவடிக்கை கடந்து வந்த பாதையை அவதானித்து வந்த இராணுவ ஆய்வாளர்களின் ஒரு பகுதியினர், இப்படை நடவடிக்கை முற்றுப் பெறுமா என்ற கேள்வியை எழுப்பத் தொடங்கினர்.

சில இராணுவ ஆய்வாளர்கள், ஜெயசிக்குறுய் நடவடிக்கை சிறீலங்கா இராணுவத்தின் "வாட்டலூ" ஆக மாற வாய்ப்புண்டு எனவும் சில விமர்சகர்கள் அமெரிக்காவிற்கு வியட்னாம் போன்று, சிறீலங்கா இராணுவத்திற்கு வன்னிப் பெருநிலப்பரப்பும் மாறலாம் என்றும் கூறியிருந்தனர்.

ஆனால், பொது முடிவாக பெப்ரவரி 4ஆம் திகதிக்குள் இப்பாதை திறப்பது சாத்தியமாகப் போவதில்லை என்பதை அவர்கள் உறுதியாகவே நம்பினர். கொழும்பிலுள்ள இராணுவ ஆய்வாளர் ஒருவர், பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த பெப்ரவரி 4ஆம் திகதிக்குள் எவ்வாறு தரைவழிப் பாதையைத் திறப்பாரோ தெரியவில்லை எனத் தெரிவித்தார்.

ஆனால், இதிலுள்ள முக்கியமான விடயம், காலக்கெடுவிற்குள் தரைவழிப் பாதையைத் திறப்பது சாத்தியமற்றுப் போனதுமட்டுமல்ல. சந்திரிகா குமாரதுங்கா அரசின், இப்பிரச்சினைக்கு இராணுவத் தீர்வு என்ற அணுகுமுறை தோல்வி கண்டுவிட்டது என்பதையும் உறுதி செய்வதாக உள்ளது. அதாவது ஜெயசிக்குறுய் படை நடவடிக்கையானது, சிறீலங்கா அரசின் பார்வையில் தனியாக தரைவழிப் பாதையைத் திறப்பதற்கான நடவடிக்கை மட்டுமல்ல, விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிப்பதற்கான இறுதி யுத்தமும் கூட. இந்த நடவடிக்கை முடிவடைந்ததும் யுத்தம் முடிவடைந்துவிட்டதாக அரசாங்கம் அறிவிக்கும் நிலையிலேயே இருந்ததாக அது யுத்தத்தின் வெற்றி குறித்து வெளியிட்டு வந்த வீதாசாரமே புலப்படுத்துவதாக இருந்து வந்தது. ஆனால், ஜெயசிக்குறுய் நடவடிக்கை மூலம் தரைவழிப்பாதை திறக்கப்பட்டால்கூட இது இராணுவத்தின் இறுதி வெற்றியாகவோ அன்றி இனப்பிரச்சனைக்கு இராணுவத்தீர்வு காணப்பட்டதாகவோ அமையப் போவதில்லை.

அதாவது ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை, இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு சாத்தியமாகாது என்பதையும் சிறீலங்கா இராணுவத்தின் இறுதி வெற்றியை உறுதிசெய்யும் நடவடிக்கையாக ஜெயசிக்குறுய் இராணுவ நடவடிக்கை இருக்கப்போவதில்லை என்பதையும் தெளிவுபடுத்தி உள்ளது. ✱

www.tamilarangam.net



# புலிகளின் அரசியல் நிலைப்பாடு

சந்திரிகா அரசாங்கத்தின் தீர்வுப்பொதி தமிழரின் தேசிய அபிலாசைகளைத் தொட்டு நிற்கவில்லை என்று கூறி– அதன் தீர்வுத் திட்டத்தைத் தலைவர் பிரபாகரன், தனது மாவீரர் நாள் செய்தியில் நிராகரித்திருந்தார்.

அதேவேளை, "தமிழரின் இனப் பிரச்சனைக்கான நிரந்தரத் தீர்வுத் திட்டம் என்பது, தமிழர்தேசியம் – தமிழர் தாயகம் – தமிழர் தன்னாட்சி என்ற அரசியல் அடிப்படைகளை அங்கீகரித்து –ஏற்றுக்கொண்ட ஒரு உருப்படியான தீர்வு யோசனையாக அமைய வேண்டும்" என்றும் தலைவர் வலியுறுத்தியுள்ளார்.

தமிழரின் இனப்பிரச்சனை ஒரு தேசியப் பிரச்சனை. இதனைச் சந்திரிகா அரசு புரிந்துகொள்ள வேண்டும். சிங்கள அரசு கூறவிரும்புவது போல, இது ஒரு சிறுபான்மையினரின் பிரச்சனை அல்ல. தமிழீழ மக்கள் ஒரு தேசிய இனம். ஒரு தேசிய இனத்திற்குரித்தான அனைத்துத் தகுதிகளையும் ஈழத்தமிழினம் கொண்டுள்ளது. சிங்கள தேசத்தால் ஒடுக்கப்பட்டு –ஆளப்படுவதை விரும்பாத நிலையிலேயே தமிழரின் உரிமைப் போராட்டம் ஆரம்பமானது. தனியரசொன்றை அமைக்கமுயலும் ஈழத் தமிழர்களின் விடுதலைப் போராட்டத்திற்கு தமிழர்தேசியம்தான் அடிப்படை.

இந்தத் தேசிய உணர்வு காரணமாகவே தமிழ்மக்கள் – விடுதலைப் போராட்டத்தில் பங்குபற்றி, போர்ப் பளுவையும் நீண்ட காலமாகத்தாங்கி போராட்டத்தை உயிர்த்துடிப்புடன் வைத்திருக்கவும் உதவுகின்றனர். உலகெங்கும் பரந்து வாழும் ஈழத்தமிழர்கள் தனியரசிற்கான எமது போராட்டத்தை ஆதரித்து – உதவுவதற்கும் இந்தத் தேசியப் பிரக்ஞையே பிரதான காரணம்.

ஆகவே, இந்தப் போராட்ட உணர்வுக்கு தேசியப் பிரக்ஞைக்கு ஆதார சக்தியாகவுள்ள தமிழர் தேசியத்தை சிங்கள அரசு அங்கீகரிக்க வேண்டும்.

இதேவேளை, இனப்பிரச்சனைத் தீர்வுக்காக முன் வைக்கப்படும் எந்த ஒரு அரசியல் தீர்வுத் திட்டமும் தமிழர் தாயகக் கோட்பாட்டை அங்கீகரித்து– ஏற்றுக்கொள்வது அவசியமாகின்றது. வட–கிழக்கு இணைந்த நிலப் பரப்பும்– அதற்குச் சொந்தமான நீர்ப்பரப்புமே தமிழரின் தாயக பூமியாகும். வரலாற்றுக்காலம் தொடக்கம் தமிழர்கள் தம் தாயக பூமியில் வேர்கொண்டு வாழ்கின்றனர். தமிழ் மக்களின் வாழ்க்கையும் வரலாறும் இந்த மண்ணுடன் இரண்டறக் கலந்துள்ளது. தமிழ் மக்களின் பாதுகாப்பான வாழ்க்கைக்கும் – கௌரவமான எதிர் காலத்திற்கும் தாயக நிலம் ஆதாரமானது. அதாவது, தமிழர் தாயக நிலம் என்பது தமிழ் மக்களின் அரசியல் வாழ்விலிருந்து பிரிக்கப்படமுடியாதது. ஆகவே, தமிழரின் தாயகக் கோட்பாட்டை சந்திரிகா அரசாங்கம்,



அங்கீகரித்து – ஏற்றுக்கொள்ள வேண்டும். முன்னைய சிங்கள அரசாங்கங்கள் தமிழர் தரப்புடன் செய்திருந்த பல உடன்பாடுகளில் தமிழரின் தாயகம் ஓரளவிற்கேனும் ஏற்றுக்கொள்ளப்பட்டிருந்தது குறிப் பிடத்தக்கது.

இதேவேளை, ஐரோப்பியர் இலங்கைத் தீவைக் கைப்பற்றும் வரை தமிழர் தாயகத்தில் – மிக நீண்டகாலமாக – தமிழரின் ஆட்சி நடைபெற்று வந்துள்ளது. இராச்சியம் என்றும் வன்னிமைகள் என்றும் பல பெயர்களில் சிற்றரசுகளும் தமிழர் நிலத்தை தமது ஆளுகைக்குள் வைத்திருந்தன. ஆனால், இலங்கைத் தீவைவிட்டு பிரித்தானியா வெளியேறியபோது சிங்களவர் கைகளில் ஆட்சியதிகாரத்தைக் கொடுத்திருந்தனர். அன்றிலிருந்து கடந்த 50 வருடகாலமாக தமிழர் நிலத்தின் ஆட்சியதிகாரத்தை சிங்கள இனம் தனது கைகளில் வைத்திருந்து – தமிழர்களை இன ரீதியாக அடக்கி யாள்கின்றது. அதன் உச்சக்கட்டமாக சிங்களத்தின் படைகள் தமிழ் மக்களை இன அழிப்புச் செய்து வருகின்றன.

இன அழிப்புச் செயற்பாட்டிலிருந்து தன்னை தற்காத்து – தமிழரின் தேசிய அடையாளங்களைப் பாதுகாக்கவே புலிகள் இயக்கம் ஆயுதப் போராட்டத்தை நாடியது. எனவே, தமிழ் மக்கள் தங்கள் தாயக பூமியில் பாதுகாப்பாகவும் – கௌரவமாகவும் – சுதந்திரமாகவும் வாழ்வதற்கு தமிழர் நிலத்தின் ஆட்சியதிகாரம் தமிழ் மக்களின் கைகளிலேயே இருக்க வேண்டும். ஒரு தேசிய இனம் என்ற வகையில் இந்த தன்னாட்சி உரிமைக்குத் தமிழ் மக்கள் உரித்துடையவர்கள். அதேவேளை, இந்த தன்னாட்சி உரிமைக்கான மக்கள் அங்கீகாரத்தை, 1977 பொதுத்தேர்தலின் போது ஈழத்தமிழர்கள் வழங்கியிருந்தனர் என்பது சுட்டிக்காட்டத்தக்கது. ஆகவே, தமிழரின் தன்னாட்சி உரிமையை சந்திரிகா அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும்.

இவ்விதம், தமிழர் தேசியம் – தமிழர் தாயகம் – தமிழரின் தன்னாட்சி என்ற அரசியல் அடிப்படைகளை ஏற்றுக் கொண்டு அதன் அடிப்படையில் ஒரு தீர்வுத் திட்டத்தை சந்திரிகா அரசாங்கம் உருவாக்க வேண்டும் என்பதே புலிகளின் விருப்பமாகும்.

ஆனால், இவற்றை அங்கீகரிக்க மறுப்பதுடன் – அவற்றைத் திட்டமிட்ட வகையில் அழித்துச் சிதைப்பதிலுமேயே சிங்கள அரசாங்கங்கள் அக்கறை காட்டுகின்றன.

தமிழீழம் – சிறிலங்கா என்ற இரண்டு தேசங்களைக் கொண்ட ஒரு தீவுதான் இலங்கை என்பது தமிழர் தரப்பு நியாயம்.

சிங்களவர்க்கே இலங்கைத் தீவு சொந்தம் என்பது பேரினவாதிகளின் வெளிப்படையான நிலைப்பாடு.

சந்திரிகா அம்மையாரோ இலங்கை ஒரு பல்லினநாடு என்று சாதுரியமாகப் பேரினவாதம் பேசுகின்றார். இந்தக் கூற்று கற்பனையானது. அத்துடன் உள் நோக்கம் கொண்டது.

பௌத்தத்தை அரச மதமாகவும் – சிங்கள மொழியை ஆட்சிமொழியாகவும் –நாடாளுமன்றத்தை சிங்களவரின் ஏகபோக அதிகார பீடமாகவும் ஏற்றுக்கொண்டுள்ள அரசியல் அமைப்பை சிறீலங்கா கொண்டுள்ளது. அதேவேளை, தமிழினத்தை இனரீதியாக ஒழிப்பதை இலட்சியமாகக் கொண்ட ஆட்சிப்பீடமே சிறீலங்கா அரசாகும். இவ்விதம் சிங்கள பௌத்த இனவெறிச் சித்தாந்தத்தை அரசியல் அமைப் பாகக்கொண்டு ஆளப்படும் ஒரு நாட்டை, பல்லினநாடு என்று அழைக்கும் கேலிக்கூத்தை அம்மையார் நடத்துகின்றார்.

இவ்விதம், அம்மையார் அழைப்பதன் மூலம் இனங்களுக்கு அப்பாற்பட்ட ஒரு சமத்துவ ஆட்சியாளராக – உலகத்திற்குத் தன்னைக் காட்டிக் கொள்ள விரும்புகின்றார். அத்துடன், பல்லினவாத கோசப்போர்வையால் தமிழர் தேசியத்தைப் போர்த்து மறைத்து – அழிக்கவும் முயற்சிக்கின்றார்.

போலியாகப் பெருமைபேசி, தமிழரின் தேசிய தனித்துவத்தை சாதுரியமாக மறுதலிக்க முயற்சிக்கின்றார்.

இதேபோன்று, தமிழ் மக்களின் தாயகக் கோட்பாட்டையும் தன்னாட்சி உரிமையையும் செல்லாக் காசாக்க – தனது தீர்வுப் பொதி மூலம் – அம்மையார் முயல்கின்றார்.

ஏற்கனவே, சிங்களக் குடியேற்றங்களால் கணிசமான தமிழர் நிலம் அபகரிக்கப்பட்டு – தாயக நிலத்தொடர்பும் ஆபத்திற்குள்ளாக்கப் பட்டுள்ளது. இப்போது, அதிகாரப் பரவலாக்கலுக்கான நிர்வாக அலகுகள் என்ற போர்வையில் தமிழர் நிலத்தைக் கூறுகளாக்கித் துண்டு போட்டு தமிழரின் தாயகக் கோட்பாட்டை நிரந்தமாக அழிக்க சந்திரிகா அரசாங்கம் முயல்கின்றது.

இதேபோன்று, தமிழர் நிலத்தின் நிர்வாக அதிகாரம் ஒரு குடையின் கீழ் வந்து, தமிழ் மக்களுக்கென்று ஓர் பிரத்தியேகமான ஆட்சி மையம் உருவாவதை அனுமதிக்கக் கூடாது என்பதிலும் அம்மையார் அவதானமாக இருக்கின்றார். அவரின் தீர்வுப்பொதி இதை துலாம்பரமாக வெளிப் படுத்துகின்றது.

தமிழர் இனப்பிரச்சனையைக் குணப் படுத்த சந்திரிகா அரசாங்கம் வைத்திருக்கும் மருந்து இராணுவத் தீர்வுதான்.

போர் மூலம் தமிழர் நிலத்தின் ஒரு பகுதியை சிங்களப்படை ஆக்கிர மிக்கலாம். அது தற்காலிக ஆக்கிரமிப்பாகவே இருக்கும். இந்த நில ஆக்கிரமிப்பு தமிழரின் தேசிய அபிலாசைகளை வீரியமிழக்கச் செய்யமாட்டாது என்பதை சந்திரிகா அம்மையார் உணர்ந்துகொள்ள வேண்டும். அதை உணர்ந்தபடி – தமிழரின் தேசிய அபிலாசைகளை நிறைவேற்றி – இரத்தக்களரிக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்து, இலங்கைத்தீவில நிரந்தர சமாதானம் நிலவச் செய்ய சந்திரிகா அரசாங்கம் முயற்சிக்குமா?

சந்திரிகா அரசாங்கத்தின் இராணுவ அரசியல் அணுகுமுறைகளை ஆழமாக அலசிப்பார்க்கும்போது தமிழ்மக்களிடம் சமாதானத்திற்கான நம்பிக்கை வேர் அறுந்துவிழும் நிலையிலேயே உள்ளது.✱

"தமிழரின் இனப்பிரச்சனைக்கான நிரந்தரத் தீர்வுத் திட்டம் என்பது, தமிழர்தேசியம் – தமிழர் தாயகம் – தமிழர் தன்னாட்சி என்ற அரசியல் அடிப்படைகளை அங்கீகரித்து –ஏற்றுக்கொண்ட ஒரு உருப்படியான தீர்வு யோசனையாக அமைய வேண்டும்"

*– தமிழீழத் தேசியத் தலைவர்.*

**இன அழிப்புச் செயற்பாட்டிலிருந்து தன்னை தற்காத்து – தமிழரின் தேசிய அடையாளங்களைப் பாதுகாக்கவே புலிகள் இயக்கம் ஆயுதப் போராட்டத்தை நாடியது. எனவே, தமிழ் மக்கள் தங்கள் தாயக பூமியில் பாதுகாப்பாகவும் – கௌரவமாகவும் – சுதந்திரமாகவும் வாழ்வதற்கு தமிழர் நிலத்தின் ஆட்சியதிகாரம் தமிழ் மக்களின் கைகளிலேயே இருக்க வேண்டும். ஒரு தேசிய இனம் என்ற வகையில் இந்த தன்னாட்சி உரிமைக்குத் தமிழ் மக்கள் உரித்துடையவர்கள்.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எந்தக் கண்ணாடியிலும் எங்கள் சொந்த முகங்களே தெரியட்டும்

■ இராணுவக் கெடுபிடிக்குள் வாழ்ந்துகொண்டு இயல்பு நிலை உள்ளதாகக் கதை பண்ணும் படைப்பாளிகள்

■ மரநிழலில் வாழ்ந்தபடி வானம்பாடி ஊடாக பிறந்த நாள் கொண்டாடும் அன்பர்கள்

— அருணாசலம் ரவிவர்மன்

கலை, இலக்கியப் படைப்பாளிகள் ஆகட்டும், பொழுது போகவில்லை என்று பத்திரிகை, வானொலி, எப்போதாவது பெரும் பணச் செலவில் தொலைக்காட்சி பார்ப்பவர்களாகட்டும் ஒன்றை வசதியாக மறந்துபோய் விடுகின்றார்கள்.

நாங்கள் தமிழ் மக்கள் என்றோ இந்த மண்ணில் சிங்கள அரசின் சகல அரசியல், பொருண்மிய நெருக்கடிகள் தடைகள் மத்தியில் இயல்பு நிலை திரும்பாத வாழ்க்கை வாழ்கிறோம் என்பதையெல்லாம் இவர்கள் கரை யேற்றிவிட்டார்கள் போலும்.

போராளிகளின் உயிர்களைக் காணிக்கையாக்கி இங்கு நடக்கும் விடுதலைப் போராட்டம், இந்த மண்ணின் விடிவுக்காக இன்றுள்ள மக்கள் மாத்திரம் அல்ல, எதிர்காலச் சந்தத்திகூட சகல அரசியல் — பொருண்மியச் சுதந்திரங்களைப் பெற்று முழுமையான சுதந்திர புருஷர்களாக வாழவேண்டும் என்பதற்காகவே முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

தமிழர்களின் அடிப்படை உரிமைகளை ஆழப்புதைத்து விட்டு அதன் மீது சிங்களவர் நலன்களையும் அவர்களுக்கான வசதிகளையும் வாய்ப்புக்களையும் உருவாக்குவதோடு மட்டுமல்லாமல், சகல வழிகளிலும் தமிழ் மக்களின் பாரம்பரியப் பிரதேச வளங்களையும் சுரண்டி சூறையாடுவதிலும் தமிழரின் விழுமியங்களை அழிப்பதிலுமே சிங்கள அரசுகள் குறியாக உள்ளன.

இன்னும் சொல்லப்போனால் இச்செயற்பாடுகள், தம் இருப்புக்காக கொழும்பு போன்ற வசதியான இடங்களில் வாழ்பவர்களும் (அங்கு வாழ்வது பிழை என இங்கு குறிப்பிடப்படவில்லை.) சிங்கள அரசின் செயற்பாடுகளுக்கு விசுவாசமான தோன்றாத்துணையாக இருந்து, தமிழர்களின் நலன்கள் காக்கப்படுவதாக — மேம்படுத்தப்படுவதாக சிங்கள அரசு பிரச்சாரம் செய்யத்துணை போகிறவர்களுக்குத் தெரியாமல் இருக்கலாம்.

இந்த உண்மைகள் தமிழர்களின் கட்சியாக தன்னை இன்னமும் நினைத்துக்கொள்ளும் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கோ, கொழும்பு வாழ் தமிழ் குழுக்களுக்கோ தெரியாமல் இருக்கலாம். ஆனால், தமிழரின் பாரம்பரிய பிரதேசங்களில் வாழ்ந்து கொண்டு தமிழன் என்பதற்காகக் கஸ்ரப்படும் சாதாரண தமிழ் மக்கள் உணருவார்கள்.

> சிங்கள அரசு, தமிழர்களை அடிமைகள் ஆக்கி இம்சைப்படுத்தும் தனது காட்டுத்தர்பாரை மூடிமறைக்கப் போடும் வேடங்களுக்குத் துணை நடிகர்களாகவே தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க்குழுக்கள், கொழும்பில் உள்ள தமிழ் பிரமுகர்கள், தமிழ் இலக்கியச் சங்கங்கள் என்று தொடங்கி பிரபலத்துக்கு ஏங்கி அதற்காகவே உயிர்வாழும் தமிழ்ப் புத்திஜீவிகள் என்று எல்லாரையுமே பயன்படுத்துகிறது.

உண்மையில் தமிழ்மக்களின் அரசியல், பொருண்மிய உரிமைகளை உறுதி செய்யாத அரைவேக்காட்டு அரசியல் சமையலை அறுசுவை உணவாக உலகுக்குக் காட்டத் துணை போகின்ற கூட்டணியும், தமிழ் அரசியற் குழுக்களும் செயற்படுவதைப் போல அரசாங்கத் துறைகளில் உள்ள தமிழ் உயர் அதிகாரிகளும் வெகுசனத் தொடர்பு சாதனங்களில் பணிபுரியும் தமிழ் உயர் அரச அதிகாரிகளும், தமிழ்ப் பணியாளர்களும், இலக்கிய அமைப்புக்களும் அரசின் பிரச்சாரங்களுக்கு மறைமுகமாகவேனும் துணைபுரிந்து வருகின்றனர். எந்த அரசாங்கம் பதவியில் இருந்தாலும் அந்த அரசாங்கத்தின் போக்கோடு ஒத்துப்போய், சிங்கள அமைச்சர்களை, சிங்கள அரசின் பிரமுகர்களை விழா நாயகர்களாக்கி தமிழ் விழாக்களையும் இலக்கிய மேடைகளையும் அமைத்து வரும் இலக்கிய அமைப்புக்களும் (எப்போக்கு இலக்கிய அமைப்பாக இருந்தாலும்) தத்தமது வயிறுகளை, பைகளை நிரப்புவதிலேயே குறியாக உள்ளன.

இவர்கள் என்னதான் ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாக உள்ள சிங்கள அரசும் அதன் நிர்வாக அமைப்புகளும் ஒருபோதும் இவர்களை நம்பப் போவதில்லை.

> தமிழ்மக்களின் அரசியல், பொருண்மிய உரிமைகளை உறுதி செய்யாத அரைவேக்காட்டு அரசியல் சமையலை அறுசுவை உணவாக உலகுக்குக் காட்டத் துணை போகின்ற கூட்டணியும், தமிழ் அரசியற் குழுக்களும் செயற்படுவதைப் போல அரசாங்கத் துறைகளில் உள்ள தமிழ் உயர் அதிகாரிகளும் வெகுசனத் தொடர்பு சாதனங்களில் பணிபுரியும் தமிழ் உயர் அரச அதிகாரிகளும், தமிழ்ப் பணியாளர்களும், இலக்கிய அமைப்புக்களும் அரசின் பிரச்சாரங்களுக்கு மறை முகமாகவேனும் துணைபுரிந்து வருகின்றனர்.

கொழும்பில் நடக்கும் தேடுதல் வேட்டைகளின் போதும், கைதுகளின் போதும் அவர் எந்தப் பதவி வகித்தாலும் தமிழர் என்றே பார்க்கப்படுகின்றார்கள்.

ஏ.எப்.பி செய்தியாளர் நரேஸ் இளையதம்பி, இந்தியப் பத்திரிகையாளர் சுதா இராமச்சந்திரன், வீரகேசரி படப்பிடிப்பாளர் ஸ்ரீகஜன் ஆகியோர் அண்மைய உதாரணங்கள். சண்டே ஐலண்டடில் பாதுகாப்புத் துறை, ஆய்வாளராக இருந்த (தற்போது சண்டே ரைம்சில்) தராகி–டி. சிவராம் முன்னைய உதாரணம்.

பாதுகாப்பு அமைச்சு அனுமதித்த பட்ங்களையே வைத்திருந்தும் கூட புகைப்படங்கள் பறிக்கப்பட்ட இந்தியரான சுதா இராமச்சந்திரன் தமிழரென்பதற்காகவே அவ்வாறு நடத்தப் பட்டார் என்பது இங்கு குறிப் பிடத்தக்கது.

> போராளிகளின் உயிர்களைக் காணிக்கையாக்கி இங்கு நடக்கும் விடுதலைப் போராட்டம், இந்த மண்ணின் விடிவுக்காக இன்றுள்ள மக்கள் மாத்திரம் அல்ல, எதிர்காலச் சந்தத்திகூட சகல அரசியல் — பொருண்மியச் சுதந்திரங்களைப் பெற்று முழுமையான சுதந்திர புருஷர்களாக வாழவேண்டும் என்பதற்காகவே முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது.

உலக வர்த்தக மைய வளாகத்துள் நடைபெற்ற குண்டுவெடிப்புத் தொடர்பான செய்திகளைச் சேகரிக்கச் சென்ற நரேஸ் இளையதம்பி தடுத்துவைக்கப்பட்டுத் தாக்கப்பட்டார். உலகளாவிய ரீதியில் பிரபல்யமான ஏ.எப்.பி செய்தி ஸ்தாபனத்தின் நிருபர் என்ற பெறுமதிமிக்க பதவியினை விட தமிழர் என்பதே (தமிழ் பெயர் மாத்திரம்தான் — அவருக்குத் தமிழ் தெரியுமோ அடுத்த பிரச்சனை) முதன்மை பெற்றது.

அவ்வாறே ஏனையவர்களுக்கும் ஏற்பட்ட அனுபவங்கள் உள்ளன. சிங்கள அரசுக்கு விசுவாசமாக இருந்தால் என்ன? சிங்கள ஆட்சியாளரின் அடிவருடிகளின் அடிமைகள் என குறிசுடப்பட்டால் என்ன? தமிழர்கள் என்றால் இரண்டாம் பட்சமே.

சிங்கள அரசு, தமிழர்களை அடிமைகள் ஆக்கி இம்சைப்படுத்தும் தனது காட்டுத்தர்பாரை மூடிமறைக்கப் போடும் வேடங்களுக்குத் துணை நடிகர்களாகவே தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழ்க்குழுக்கள், கொழும்பில் உள்ள தமிழ் பிரமுகர்கள், தமிழ் இலக்கியச் சங்கங்கள் என்று தொடங்கி பிரபலத்துக்கு ஏங்கி அதற்காகவே உயிர்வாழும் தமிழ்ப் புத்திஜீவிகள் என்று எல்லாரையுமே பயன்படுத்துகிறது.

அதுமட்டுமல்லாது, சர்வதேச சமூகத்தையும் ஏமாற்ற இவர்களையே சிங்கள அரசு அருங்காட்சியகப் பொருட்களாக்கி உள்ளது.

"அவுஸ்ரேலிய தூதுக்குழு, அமெரிக்க அமைச்சர் முன்னால் அவர்கள் வெளிநாட்டில் போய்நின்று இந்த நாட்டின் தமிழ் குடிமக்கள் நாங்கள் இங்குள்ள சிங்கள மக்களைவிட மேன்மையுற வாழ்கின்றோம்: சிங்கள அரசு எங்களைக் கண்ணுங்கருத்துமாகப் பார்க்கிறது" என்று மெய்யுருகி நின்று சந்தோசங்கொண்டாடத்தானே இவர்கள் உள்ளனர்.

தமிழன் ஒருவன் சிங்கள அரசில், அரச திணைக்களத்தில் முதன்மை பெறுகிறான் என்றால் என்ன அர்த்தம்? என்று இத்தால் சகலரும் அறியத்தெரிவிப்பது யாதெனில், குறிப்பிட்ட அந்த தமிழ்க் குடிகள் சிங்கள அரசின் நம்பிக்கைக்குரிய விசுவாசமான அடிமைகள் என்பதுதான்.

சிங்கள ஆக்கிரமிப்பில் உள்ள யாழ்ப்பாணத்தில் வாழும் கலை, இலக்கியப் படைப்பாளிகள் கொழும்பில் இருந்து வெளியாகும் பத்திரிகைகள், சஞ்சிகைகளுக்கும் வானொலி நிகழ்ச்சிகளுக்கும் படைப்புகள் எழுதுகிறார்கள்.

தெருவில் இறங்கிச் சுதந்திரமாக நடமாடமுடியாதநிலை, எழுதப்படும் அவர்களது படைப்புகளில் மாத்திரம் அது தெரிவதில்லை.

இவர்களது படைப்புகளைப் படிப்பவர்கள் அல்லது கேட்பவர்கள் யாழ்ப்பாணத்தில் இயல்பு வாழ்க்கை நடப்பதாகவும் தமிழர்கள் முதற் குடிமக்களாக, சுதந்திர புருஷர்களாக வாழ்வதாகவுமே நினைப்பார்கள்.

அடிமை வாழ்வுக்கு எதிராக, இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக எழுத முடியாதவர்கள் கடைசி எழுதுகோலைத் தன்னும் வைத்து விட்டுச் சற்றுமௌனம் சாதிக்கலாமே. எழுத்துத் துறவறம் பூண்டுதம் எதிர்ப்பைக் காட்டலாமே.

அதைத்தான் விடுவோம். இந்த வன்னி மண்ணில் ஜெயபுரத்திலும் மல்லாவியிலும் பொத்தல் விழுந்த ஓலைக் குடிசைகளிலும் மரநிழலிலும் வாழ்ந்துகொண்ட வாழ்வியலின் அடிப்படைத் தகுதிகளைக் கூட பெறமுடியாமல் கஸ்ரப்படுகின்றவர்கள் கூட இங்குள்ள யதார்த்த நிலையை வெளிக்கொண்டு வரமுடியாமல் கனவுலக யதார்த்த படைப்புகளைப் படைப்பதும் வானம்பாடிகளின் கவிதைகள் ஒலிபரப்பினால் மாத்திரம் போதும் என நினைப்பதும் எவ்வளவு அற்புதமானது.

அதைவிட தமது சௌந்தர்யம் நிறைந்த பிறந்தநாள் நிகழ்ச்சிகளை இதே வானம்பாடி ஊடாக தெரியப்படுத்திக் கொண்டாடுவதும் எத்தகைய பெருமையானது. ✷

www.tamilarangam.net



# ஜயசிக்குறுயின் கடிவாளம் இராணுவத் தலைமையின் கையிலா!

கடந்த மே 13 அதிகாலை ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையை சிங்களப் படைகள் ஆரம்பித்திருந்தன.

வெசாக்கிற்கு முன்னர் (22.05.1997) முடிக்கப்படும் என்று காலக்கெடு விதித்து ஆரம்பிக்கப்பட்ட ஜயசிக்குறுய் இராணுவ நடவடிக்கையின் கால எல்லை – இறுதியாக சுதந்திரதின பொன்விழாவுக்கு முன்னர் (04-02-98) என்று கால நீட்சி செய்யப்பட்டது.

இராணுவ நடவடிக்கை தொடங்கப்பட்ட நாளில் இருந்து வெசாக் வரையுள்ள 10 நாட்களில் இலக்கை அடைந்து முடிவுபெறும் என்று இராணுவத் தலைமைப்பீடத்தால் கணிக்கப்பட்ட இந்த நடவடிக்கை, இப்போது 270 நாட்களையும் கடந்து தொடர்கின்றது. ஜயசிக்குறுயின் கடிவாளம் இராணுவத் தரப்பிடம் இல்லை என்பதையே இது காட்டுகின்றது.

மன்னார் பாதைவழியே நகர்ந்த 'எடிபல' இராணுவ நடவடிக்கைக்கு எதிராக புலிகள் இயக்கம் கடைப்பிடித்த தந்திரோபாய சமர்த்தவிர்ப்பு, சிங்களத் தலைமைக்கு வேறுவிதமாகத் தெரிந்தது. இந்தத் தவறான புரிதல் ஜயசிக்குறுயிக்கான சமர்த்திட்டத்தை வகுக்கத் துணைபோனது.

இலக்கை அடைந்து நடவடிக்கையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று ரத்வத்த துடிக்கின்றார். இலக்கை அடையாது திரும்பிச்செல்வது சிங்களப்படைக்கு நல்லது என்று களமுனைத் தளபதிகள் ஆலோசனை கூறுகின்றனர். ஆனால், முன்னோக்கிப் பாய்தல் – யாழ்தேவி போன்று திரும்பிச் செல்ல முடியாத ஒரு இராணுவ நடவடிக்கையாக ஜயசிக்குறுய் மாறிக்கொண்டிருக்கிறது.

இப்போது சிங்களதேசத்துப் படைகளில் பெரும்பகுதி ஜயசிக்குறுய் வலையில் சிக்கி – வன்னிச்சமர் முனைகளில் – கட்டுண்டு கிடக்கின்றது.

மொத்தம் மூன்று டிவிசன்கள் (ஒவ்வொன்றும் 9000 பேர்) ஜயசிக்குறுய் சமரில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்த டிவிசன் பிரிப்பிற்குள், இச்சமரில் பங்கேற்கும் பொலிசார் – கடற்படையினர் – கொமாண்டோ படையினர் சேர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

சுமார் 4000 பொலிசார் ஜயசிக்குறுயிக்கென்று ஆயுத பாணிகளாக்கப்பட்டனர் என்று ரத்வத்த அறிவித்திருந்தார். இதேவேளை சிறப்புப் படைகளாக சில ஆயிரம் கொமாண்டோப் படையினரும் சமரில் ஈடுபடுத்தப்படுகின்றனர். கணிசமான அளவு கடற்படையினரும் – தொண்டர் படையினரும் பயன்படுத்தப்படுகின்றனர். இந்தவகையில் பொலிஸ், கடற்படை, கொமாண்டோப்படை, தொண்டர்படை என்று மேலும் ஒரு டிவிசன் படை ஜயசிக்குறுயில் ஈடுபடுத்தப்படுகின்றது.

ஆகவே, மொத்தம் நான்கு டிவிசன்கள் – அதாவது முப்பத்தாறாயிரம் (36,000) படையினர் – வன்னிச் சமரில் பங்கேற்கின்றனர்.

இதேவேளை, இந்த 270 நாள் சமரில் சுமார் 3,000 படையினர் பலியாகியுள்ளனர். 7,000 படையினர் படுகாயமடைந்துள்ளனர். அதாவது, ஒரு டிவிசன் படையினர் ஜயசிக்குறுயில் அழிந்துள்ளனர். நாள்தோறும் அழியும் படையினரது இடத்தை நிரப்பவென, துருப்புக்களைப் புதிதாக அனுப்பும் பணியில் சிங்களப் படைத்தலைமை, பல இடர்களைச் சந்திக்கின்றது. துருப்புக்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய, இராணுவம் சிரமப்படுகின்றது. இந்த ஆட்பற்றாக்குறையையும் அதைப் பெறுவதில் இராணுவம் சந்திக்கும் சிரமங்களையும், கொழும்புப் பத்திரிகைகள் வெளிப்படுத்துகின்றன.

குடாநாட்டிற்குத் தரைப்பாதை அமைப்பது ஜயசிக்குறுயின் இராணுவ இலக்கு. மாங்குளத்திற்கூடாக வவுனியா –கிளிநொச்சி பிரதான பாதையைக் கைப்பற்றுவது திட்டம். ஆனால், இந்தப் பாதை நெடுகிலும் படையினர் சந்தித்த பேரழிவுகளாலும் – புளியங்குளச் சண்டையில் புலிகள் காட்டிய போர்த்திறனாலும் நகர்வுப்பாதையில் மாற்றம் செய்ய வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு சிங்களப் படைத் தலைமை உட்பட்டது. கரப்புக்குத்தி – விஞ்ஞானகுளம் ஊடாக கரிப்பட்டமுறிப்பு வரை ஒரு புதிய மார்க்கத்தில் நகர்ந்து, பழைய கண்டிவீதியில் குந்திக் கொண்டது.

இதன் காரணமாக, தரைப்பாதை என்பது பழைய கண்டி வீதி மார்க்கமாகவா! அல்லது பிரதான பாதை ஊடாகவா என்ற கேள்விகள் – கொழும்பு இராணுவ விமர்சகர்களால் எழுப்பப்பட்டன. ஆயினும், இந்தப் புதிய நகர்வும் – கரப்புக்குத்தி, விஞ்ஞானகுளம் மீது நடந்த விடுதலைப் புலிகளின் பாய்ச்சல்களினால் நிலைகுலைந்தது. புதிய நகர்வொன்றின் மூலம் ஜயசிக்குறுயின் கடிவாளத்தைக் கையிலெடுக்க முயன்ற இராணுவத் தலைமை இயலாமையில் விழ்ந்தது.

இதன் பின்னர், புதூர் சந்திக்கு மேற்காக – மன்னங்குளத்தினூடாக – மீண்டும் ஒரு புதிய நகர்வுப் பாதையைத் திறந்து – கனகராயன்குளத்தைச் சுற்றிவந்து – மாங்குளம் நோக்கி நகர முயன்ற கொமாண்டோப் படையினர், ஒரு பகல் சண்டையில் சின்னாபின்னமாகினர்.



ஜயசிக்குறுயின் கடிவாளம் சிங்களப் படையின் கைகளில் கிடைக்கவேயில்லை. எனினும், நடவடிக்கை தொடரும் என்றும் சுதந்திரதினப் பொன்விழாவுக்கு முன்னர் பாதை அமைப்பு பூர்த்தியாகிவிடும் என்றும் – ரத்வத்த – நம்பிக்கை வெளியிட்டார்.

இறுமாப்பும் – அதீத நம்பிக்கையும் – புலிகள் பற்றிய தவறான புரிதலும்தான் ஜயசிக்குறுய் போர்த்திட்டத்தின் ஆணிவேர். இந்தத் தவறுகளைக் கொழும்புப் பத்திரிகைகள் சுட்டிக் காட்டவும் முனைகின்றன. ஆயினும், தொடங்கியதை எப்படி முடிப்பது என்பதே, இராணுவத் தலைமையின் தற்போதைய பிரச்சனை.

இலக்கை அடைந்து நடவடிக்கையைப் பூர்த்தி செய்ய வேண்டும் என்று ரத்வத்த துடிக்கின்றார். இலக்கை அடையாது திரும்பிச்செல்வது சிங்களப்படைக்கு நல்லது என்று களமுனைத் தளபதிகள் ஆலோசனை கூறுகின்றனர். ஆனால், முன்னோக்கிப் பாய்தல் – யாழ்தேவி போன்று திரும்பிச் செல்ல முடியாத ஒரு இராணுவ நடவடிக்கையாக ஜயசிக்குறுய் மாறிக்கொண்டிருக்கிறது.

ஜயசிக்குறுயின் இலக்கு என்பது பேரினவாதத்தின் இலக்கு என்றாகி விட்டது. இந்த இலக்கை அடைவதா! இல்லையா என்பதில்தான் சந்திரிகா அரசாங்கத்தின் தலைவிதியே தங்கியிருக்கின்றது. ஜயசிக்குறுயின் வெற்றி சிங்களத்தின் வெற்றியாகவும் – அதன் தோல்வி சிங்களத்தின் தோல்வியாகவும் பார்க்கப்படக்கூடிய அளவுக்கு, அங்கே நிலைமை உள்ளது.

எனவே, ஜயசிக்குறுயின் நிலை ஆப்பிழுத்த குரங்கின் கதையாகவே உள்ளது.

இந்த 9 மாதச் சமரில் சிங்களப் படை சந்தித்த இழப்பு பிரமாண்டமானது. 3,000 ஆட்களைப் பலிகொடுத்தும், நடவடிக்கை இடை நடுவில் நிற்கின்றது. 17 ராங்குகள், 4 ஆட்லறிகள், 2 உலங்குவானூர்திகள் உட்பட பெருந்தொகையான வெடிப்பொருட்கள் புலிகளின் தாக்குதலில் அழிந்துள்ளன. அதேவேளை, கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமானமுள்ள ஆயுத தளபாடங்களும், வாகனங்களும் மற்றும் இராணுவ சாதனங்களும் புலிவீரர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இராணுவத்தின் ஒவ்வொரு நகர்வு முயற்சிக்கும், படைத்தலைமை பெரிய விலை கொடுக்க வேண்டியுள்ளது. புலிகள் இயக்கத்தின் மரபுப் போர்பலம் இராணுவத்திற்குப் பாரிய அச்சுறுத்தலாக எழுந்துள்ளது. தாக்குதல் முனைகளில் படையினர் அதிக அக்கறை காட்டும்போது அவர்களின் தற்காப்பு அரண்களைத் தாக்கி, படையினருக்குப் பலத்த சேதத்தை புலிகள் உண்டு பண்ணுகின்றனர். இதனால், கைப்பற்றப்படும் பகுதிகளையும் பாதுகாத்தபடி முன்னேற முயல்வது படையினருக்குப் பாரிய பிரச்சனையாக உள்ளது.

9 மாதச் சமரில் சிங்களப் படை சந்தித்த இழப்பு பிரமாண்டமானது. 3,000 ஆட்களைப் பலிகொடுத்தும், நடவடிக்கை இடை நடுவில் நிற்கின்றது. 17 ராங்குகள், 4 ஆட்லறிகள், 2 உலங்குவானூர்திகள் உட்பட பெருந்தொகையான வெடிப்பொருட்கள் புலிகளின் தாக்குதலில் அழிந்துள்ளன. அதேவேளை, கோடிக்கணக்கான ரூபாய்கள் பெறுமானமுள்ள ஆயுத தளபாடங்களும், வாகனங்களும் மற்றும் இராணுவ சாதனங்களும் புலிவீரர்களால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இந்தச் சவால்களைச் சமாளிக்க பாதையின் இருமருங்கும் 10 கி.மீற்றர் அகல நிலத்தில் நிலைகொண்டபடி,

தொடர்ச்சி 2 ம் பக்கம்.....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இலங்கைத் தீவிலிருந்து பிரித்தானிய காலனித்துவ அரசு விலகி, இம் மாதம் 04ஆம் திகதியுடன் 50 ஆண்டுகளாயின.**

**இதனை இலங்கைத் தீவிலுள்ள அனைத்து மக்களும் சுதந்திரத்தின் பொன்விழா எனக் காட்டுவதற்கு, சிறீலங்கா அரசு பல மாதங்களாக பெரும் பணச் செலவுடனும் ஆட்பலத் திட்டமிடலுடனும் பகீரதப் பிரயத்தன முயற்சி ஒன்றை ஆரம்பித்தது.**

# உலகத் தலைநகர்களில்

## திசை மாறிய பொன்விழா ஏற்பாடுகள்

இதன் உச்சக்கட்டமாக தலதா மாளிகையை சுதந்திரச் சதுக்கமாக மாற்றி, அங்கு



திரு. சைமன் கியூஸ் பா.உ

சுதந்திரப் பொன்விழாவினைக் கொண்டாடுவது என்ற பிரமாண்டமான ஏற்பாட்டினைப் 10,000 படையினரின் பாதுகாப்புடன் சிறீலங்கா அரசு செய்து முடித்தது. இந்த விழாவில் கலந்து கொள்ளும்படி 'கொமன்வெல்த்' நாடுகளின் ஸ்கொட்லாந்து மாநாட்டில் சிறிலங்காவின் ஜனாதிபதி, தென்னாபிரிக்காவின் தலைவரும் சர்வதேச உலகின் நன்மதிப்பை விடுதலை உணர்வுக்காய் பெற்றவருமான திரு. நெல்சன் மண்டேலா அவர்களை அழைத்திருந்தார். ஆயினும் அடக்குமுறைக்கு எதிராக ஒடுக்குமுறைக்கு எதிராகப் பல ஆண்டுகள் போராடி விடுதலை வரலாறு படைத்த திரு. நெல்சன் மண்டேலா அவர்கள், அடக்குமுறையையும் ஒடுக்குமுறையையும் தனது அரசியலாகக் கொண்ட சிறீலங்காவின் பொன்விழாவில் கலந்துகொள்ள மறுத்துவிட்டார். இது சிறீலங்காவின் சுதந்திர தின ஏற்பாட்டிற்கு விழுந்த முதல் அடியாகியது. அடுத்த தோல்வியாக தலதா மாளிகையை அரசியல் சதுக்கமாக மாற்றி சிங்கள பௌத்த பேரினவாதத்துக்கு நெய் ஊற்றி எரிப்பதற்கு சிறீலங்கா அரசு எடுத்த முயற்சிகளும் தலதா மாளிகைக் குண்டு வெடிப்புடன் கைகூடாமல் போயின. இதுவே சுதந்திர பொன்விழா ஏற்பாட்டில் விழுந்த பேரிடியாகும். இதனால் குழம்பிப் போயிருந்த சந்திரிகா அரசு, பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ் அவர்களை அழைத்து, கொழும்பிலாவது ஒரு கண்டி நாட்டிய அணிவகுப்பு மரியாதையை ஏற்பாடு செய்து, பொன்விழாவைக் கொண்டாட வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டது. இதற்காக கொழும்பில் மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்புக் கெடிபிடிகளால் சுதந்திரப் பொன்விழாவையே சுதந்திரமாகக் கொண்டாட முடியாமற் போய்விட்டது. அதாவது 04-02-98இல் இலங்கைத் தீவு முழுவதிலும் மக்களுக்கு மட்டுமல்ல, பொன்விழாவிற்கும் சுதந்திரம் இல்லாத நிலையே இருந்துள்ளது. விடுதலைப் புலிகள் கிளிநொச்சியை மீண்டும் கைப்பற்றி சிறீலங்காவின் பொன்விழாவன்றே, இடம் பெயர்ந்திருந்த தமிழ் மக்களை வரவழைத்து தமிழ்த் தேசியக் கொடியை ஏற்றிய வீரச்செய்தி, பாதுகாப்பமைச்சரும் ஜனாதிபதியுமாகிய சந்திரிகா, பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ரத்வத்தயை மட்டுமல்ல, முழுச் சிங்களப் பேரினவாதிகளையும் ஆட்டங்காண வைத்தது.

## அடிமைத்தனத்தின் 50வது ஆண்டு

பொன்விழா ஏற்பாடுகள் நடைபெற்ற அதேவேளையில், சிறீலங்கா அரச பயங்கரவாதத்தினால் உலகெங்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்கள் தாம் வாழும் நாடுகளின் தலைநகரங்களில், இலண்டன் முதல் கனடா வரை பிரான்ஸ், சுவிஸ், யேர்மன், நோர்வே, இத்தாலி ஈறாக சுதந்திரப் பொன்விழா தமிழர்களுக்கு அடிமையாக்கப்பட்ட வரலாற்றின் பொன்விழா என உலக மக்களுக்கு எடுத்துக் கூறுவதற்கான ஏற்பாடுகளில் வேகமாக இறங்கியிருந்தனர். இதற்கான பிரச்சார ஊடகமாக எழுச்சிப் பேரணிகளையும் விழிப்புப் போராட்டங்களையும் நடாத்த தமிழர்கள் ஒருங்கிணைந்து திட்டமிட்டனர். கனடாவில் 20,000க்கு மேற்பட்ட மக்களும் லண்டனில் 12,000க்கு மேற்பட்ட மக்களும் பேரணியில் கலந்து கொண்டமை குறிப்பிடத் தக்கது.

## புதிய விழிப்புணர்ச்சி

பேரணிகள், விழிப்புப் போராட்டங்கள் மூலம் சிறீலங்காவின் 50 ஆண்டுகால அடக்குமுறைக் கொடூரங்களைச் சர்வதேசங்களுக்கு எடுத்து விளக்குவது தமது வரலாற்றுக் கடமையென ஒவ்வொரு தமிழரும் கருதிக் கொண்டதுடன் புதிய விழிப்புணர்வும் பெற்றனர். இதனால் இந்தப் பேரணிகள் குறித்த தமது கருத்துக்களை, இந்தப் பேரணி நடைபெறுவதற்கு முதற் சில வாரங்களாகவே தமிழர்களின் சர்வதேச வானொலிகளில் தாமாகவே எடுத்துக் கூறத் தொடங்கினர். இச்செய்திகள் புலம்பெயர் தமிழர்களின் அரசியல் விழிப்புணர்ச்சியை மேலும் வளர்த்தன. தங்கள் தேசமும் தங்கள் உடன்பிறப்புகளும் சிறிலங்கா இராணுவச் சர்வாதிகார ஆட்சிக்குள் கேட்பாரின்றி கொல்லப்படுவதை – காரணமின்றி கைதாக்கப்பட்டு வதைக்கப்படுவதை – வயது வித்தியாசமின்றி பாலியல் வன்முறைகளுக்கு உட்படுத்தப்படுவதை – தமிழரின் வழிபாட்டுத் தலங்கள் குண்டு வீச்சுக்கு உள்ளாக்கப்படுவதை – பள்ளிக்கூடம், வைத்தியசாலை என்ற பேதமின்றி எல்லா அத்தியாவசிய சேவை நிறுவனங்களை மூடவைப்பதை உலகுக்கு எடுத்துக்கூறும் நாளாக பெப்ரவரி முதலாம் திகதியை இலண்டன், கனடா, இத்தாலி வாழ் தமிழர்களும் 04ஆம் திகதியை ஏனைய நாடுகளில் வாழும் தமிழர்களும் பயன்படுத்த உறுதிபூண்டு செயற்பட்டனர்.

## நேற்று சமாதான தேவதை இன்று சுதந்திர தேவி

இந்த இராணுவச் சர்வாதிகாரத்தினை அனுமதித்து – ஆணையிடும் சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சராகவும் அதனை மூடி மறைக்கும் ஜனாதிபதியாகவும் சந்திரிகா இரட்டைத் தன்மையுடன் காணப்படுவதை சர்வதேச உலகுக்கு வெளிப்படுத்தும் கறுப்பு நாளாக பெப்ரவரி 04ஐ உலகத் தமிழர்கள் எதிர்கொண்டனர். முன்னர் சமாதான தேவதையாக கோலம் காட்டி – பேச்சுவார்த்தை மாயை செய்து தமிழீழ மண்ணுள் தன் இராணுவக் கொலைஞர்களை நிலைகொள்ள வைத்துவிட்டு எனது சமாதான முயற்சியைப் புலிகள்தான் முறியடித்தனர் என சர்வதேச உலகுக்கு சந்திரிகா பரப்புரை செய்ததை தமிழர்கள் மறக்கவில்லை. தற்பொழுதும் அத்தகைய ஒரு சூழ்ச்சியை சந்திரிகா புதியவழியில் அதாவது தன்னை ஒரு சுதந்திர தேவதையாகவும் தனது ஆட்சியில் சிங்களவர் மட்டுமல்ல, தமிழர்களும் சுதந்திர வானில் சுகவாழ்வு வாழ்வதாகவும் காட்டும் கபட நாடகத்தை 50வது சுதந்திரப் பொன்விழா என்ற புதிய கோசத்துடன் உலகுக்கு காட்ட முற்படுவதை உடைத்தெறியும் பணியை உலகத் தமிழர்கள் ஏற்றனர். இந்தப் பின்னணிகளுடன் இலண்டன், கனடா, இத்தாலி ஆகிய மூன்று இடங்களில் பெப்ரவரி 01ஆம் திகதியும் ஏனைய ஐரோப்பிய நாடுகளான பிரான்ஸ், யேர்மனி, சுவிஸ், நோர்வேயில் 04ஆம் திகதியும் தமிழர்கள் பெருந்திரளாய் ஓரணியில் தமிழீழத் தேசக் கொடி ஏற்றி தம் தேசத் தலைவன் பிரபாகரன் உருவம் தாங்கி தமிழீழ விடுதலையின் தேவையையும் தமிழீழ மக்களின் அடிமை வாழ்வையும் விளக்கும் கோசங்களையும் சுலோக அட்டைகளையும் தாங்கி, கலை நிகழ்சிகளையும் அலங்கார ஊர்திகளையும் கொண்ட பேரணிகளை நடாத்தினர். தமிழ் மக்களின் சுதந்திரப் பறிப்புக்கும் பிரித்தானியாவுக்குமிடையில் ஒரு தொப்புள் கொடி உறவு இருப்பதால் அதை வெளிப்படுத்தும் வகையில் இடம் பெற்ற லண்டன் எழுச்சிப் பேரணி விசேட முக்கியத்துவம் பெறுகின்றது.

## லண்டன் ஊர்வலம்

பல்லாயிரக்கணக்கான மக்கள்



லண்டன் பேரணியின் ஒரு பகுதியினர்

கடுங்குளிரையும் பொருட்படுத்தாமல் இலண்டன் கைபார்க் மைதானத்தில் குழுமத் தொடங்கினர். காலை 11.30 மணியளவில் பேரணி டிரவல்கர் (Trafalgar) சதுக்கம் நோக்கி செல்லத் தொடங்கியது. இச் சதுக்கம் பிரித்தானிய தேச விடுதலை வரலாற்றின் முக்கிய நினைவுச் சின்னம். ஸ்பெயினுக்கு அருகில் உள்ள டிரவல்கர் எனும் இடத்தில் நெப்போலியனுடைய கப்பற் படையினை, அட்மிரல் நெல்சன் 21 அக்டோபர் 1805இல் வெற்றி கொண்டு வீரமரணம் எய்தியதன் நினைவாக அமைக்கப்பட்டது. தமிழீழ மக்களும் வீரமுடன் தேச விடுதலைக்காகப் போராடி வீரமரணம் எய்திய தமது மாவீரர்களதும் தேச விடுதலைப் போரில் பல அர்ப்பணிப்புக்களைச் செய்து உறுதியுடன் நிற்கும் தமிழீழ மக்களையும் நெஞ்சில் நிறுத்தி பேரணியில் இனமான உணர்வுடன்




திரு. ஜெரமி கோபின் பா.உ

கலந்து கொண்டனர்.

## உணர்ச்சிக் கோசங்கள்

தமிழர் தேசம் – தமிழீழம், தமிழீழ விடுதலையே தமிழருக்கு விடிவு தரும், பிரித்தானியாவின் வழிவகுப்பு – தமிழ் மண்ணின் ஆக்கிரமிப்பு, என்பது போன்ற கோசங்களை மக்கள் பேரணியில் எழுப்பியவாறு சென்றனர். ஆங்கிலத்திலும், தமிழிலும் இக்கோசங்கள் எழுப்பப்பட்டன.

## தமிழர் அமைப்புகள் அணிவகுப்பு

பிரித்தானியாவில் உள்ள பல தமிழர் அமைப்புகள், பாடசாலைகள், நிறுவனங்கள் தமது பதாகைகளின் கீழ் அணிவகுத்து வந்தன. வயோதிபர்கள், சிறுகுழந்தைகள், யுவதிகள், இளைஞர்கள் என பல தரப்பினரும் இப்பேரணியில் கலந்து கொண்டு தமது தேசப் பற்றை வெளிப்படுத்தினர்.

## செய்தியாளர் ஆர்வம்

மக்கள் பெருமளவில் பெருகியதைக் கண்ட செய்தியாளர்கள், பத்திரிகையாளர்கள், தொலைக்காட்சி நிறுவனங்கள் (World Television Network உட்பட) பேரணியினை பல கோணங்களில் படம் பிடிப்பதிலும், பேட்டிகள் எடுப்பதிலும் பலத்த ஆர்வம் காட்டின. தமிழர்களின் வானொலிகளான சர்வதேச ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், வானொலி ஆசியா கனடா போன்றவை பேரணியின் நிகழ்ச்சிகள் அனைத்தையும் நேரடி அஞ்சல் செய்தன. தமிழீழ விடுதலைப் புலிகளின் பேச்சாளர் அன்ரன் ராஜா, யாழ். மறை மாவட்ட குரு முதல்வர் வணபிதா எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகள் ஆகியோர் உட்பட பல தமிழர்களை செய்தியாளர்களும் பத்திரிகையாளரும் தொலைக்காட்சி அமைப்புகளும் செவ்விகள் கண்டன.

## தமிழீழத் தேசியக் கொடி ஏற்றப்பட்டது

பேரணி அயர்லாந்து 'பாண்ட்' வாத்தியத்துடன் ஆரம்பித்தது போல், டிரவல்கர் சதுக்கத்தில் ஸ்கொட்லாந்து 'பைப்' இசையுடன் ஆரம்பமான பொதுக்கூட்டத்தில், தமிழீழத் தேசியக் கொடி மாவீரன் கப்டன் நாதன் அவர்களின் தாயார் திருமதி. சிற்றம்பலம் அவர்களால் ஏற்றப்பட்டது. "ஏறுது பார் கொடி ஏறுது பார்" என்ற கொடிப் பாடலுடன் தமிழீழத் தேசியக் கொடி பிரித்தானியாவில் முதன்முதலாக பொதுஇடத்தில் ஏறத் தொடங்கியதும் தமிழீழ மக்கள் ஆனந்தக் கரகோசம் செய்தனர். பிரித்தானிய இளவரசர் சார்ள்ஸ், சிறிலங்காவின் சுதந்திரப் பொன்விழாவில் பங்குபற்றியதுபோல பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர் மூவர் கொடி ஏற்று வைபவத்திலும் பொதுக்கூட்டத்திலும் பங்குபற்றி தமது ஆதரவை தமிழீழ மக்களுக்கு உறுதி செய்தனர்.

அருட்திரு எஸ்.ஜே. இம்மானுவேல் அடிகள், தலைமையில் மாவீரருக்கும் தமிழீழ மக்களது தேச

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழர்களின் எழுச்சிப் பேரணிகள்

அர்ப்பணிப்புகளுக்கும் வணக்க மரியாதை செலுத்தப்பட்டது. தொடர்ந்து பொய்க்கால் குதிரையாட்டம் கலைநிகழ்ச்சி மூலம் தமிழர் கலைத்துவம் வெளிப்படுத்தப்பட்டது. குரு முதல்வராக நீண்டகாலம் பணியாற்றி மக்களின் பாதிப்புக்களின் சாட்சியாகவும் பாதிப்புகளுக்கு உள்ளாகியவருமான இம்மானுவேல் அடிகளார், தமிழ் மக்களது சுதந்திர வரலாறு வளர்ந்த விதத்தையும், தமிழீழத்தின் தேவையின் அவசியத்தையும் மக்கள் இன்று சந்திரிகா அரசால் அனுபவிக்கும் சொல்லொணாத் துன்பங்களையும் அதன் காரணியான சந்திரிகா அரசின் உண்மைக்கு மாறான பரப்புரைகளையும் எடுத்து விளக்கி, தமிழீழ மக்களின சுயநிர்ணய உரிமையும் தேசிய விடுதலைப் போராட்டமும் அங்கீகரிக்கப்பட்டாலே அம் மக்களுக்கு பாதுகாப்பான



திரு. நீல் ஜெராட் பா.உ

அமைதி கிட்டும் என்பதை ஆணித்தரமாகத் தெளிவுபடுத்தினார்.

இவரை அடுத்து, தமிழ்ச் சிறுமி செல்வி கிருஸ்ணி ரமேஸ் தமது இனிய குரலில் தமிழில், "புலி மாமா, புலிமாமா வீட்டுக்கு வாங்க" எனும் பாடலை பின்னணி இசை எதுவும் இன்றி தானே தாளம் போட்டு நன்றாகப் பாடி, கூடியிருந்த மக்களின் பலத்த கரகோசத்தைப் பெற்றார்.

இவரது பாடலைத் தொடர்ந்து, பிரித்தானிய ஆளும் தொழிற்கட்சியைச் சேர்ந்த இரண்டு பாராளுமன்ற உறுப்பினர்களும், ஒரு லிபரல் டெமோகிரட் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினரும் உரையாற்றினர்.

## போரில் சிறிலங்காவால் வெற்றி பெற முடியாது

பிரித்தானியப் பாராளுமன்றத்தின் லண்டன் வோல்தம் பொரஸ்ட் தொகுதி பா.உ திரு. நீல் ஜெராட் உரையாற்றுகையில், "பிரித்தானியா இலங்கையை விட்டு வந்து 50 ஆண்டுகளாகின்றன. இந்த ஐம்பது ஆண்டுகளிலும் தமிழ் மக்கள் நீதியான ஆட்சியையோ அல்லது அவர்கள் எதிர்காலத்தை வளப்படுத்தக்கூடிய ஆட்சியையோ அங்கு பெறவில்லை. "தேச மக்கள் தேச மக்களுடன் பேசட்டும். மக்கள் மக்களுடன் உறவாடட்டும்" என்கிற பதாகை கூட்ட மேடையிலே காணப்படுகிறது. இதுதான் தமிழர்களின் விருப்பு. அங்கு சிங்கள இறைமையாளர்களின் செயற்பாட்டினால் அரை மில்லியனுக்கும் அதிகமான தமிழர்கள் கனடா, ஐரோப்பா உட்பட பல நாடுகளில் அகதிகளாக வாழ்கின்றனர். சிறிலங்காவில் தமிழரின் மனித உரிமைகள் படுமோசமாக வன்முறைப்படுத்தப்பட்டு வருகிறது. விசாரணையின்றி சிறையில் வைத்தல், காரணமின்றி கைதாக்குதல், சித்திரவதைகள் என்பவற்றால் தமிழர்கள் இனத்துன்புறுத்தல்களுக்கு ஆளாக்கப்பட்டு வருகின்றனர். வடக்கு – கிழக்கில் தமிழர்களின் வாழ்வு மிகக் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. வழங்கப்படும் உதவிகள் எதுவும் வடக்கு – கிழக்குக் கிடைக்காதவாறு சிறீலங்காவால் தடுக்கப்படுகிறது. இந்நிலையில் அங்கு மனித உரிமை விசாரணைக் குழு ஒன்றையை சிறீலங்கா அரசு அமைத்தது. ஆனால் மனித உரிமை ஆணைக்குழு இதுவரை ஒரு தனிமனிதனைக்கூட குற்றவாளியாகக் கண்டு தண்டிக்கவில்லை. அப்படியாமின் இவ்வாறான மனித உரிமை குழுக்களால் என்ன பலன்? இதேநேரம் இந்த தமிழ் மக்கள் படும் துன்பங்கள் வெளியுலகுக்கு தெரியாதவாறு செய்தி ஊடகங்கள் அனைத்துக்கும் இருட்டடிப்பு செய்யப்பட்டு வருகிறது. பத்திரிகையாளர்கள், செய்தியாளர்களை தமிழ்ப் பகுதிகளுக்கு சுதந்திரமாகச் செல்ல சிறீலங்கா அரசு அனுமதிப்பதில்லை. ஆயினும், எதைத்தான் சிறீலங்கா செய்தாலும் ஒன்று மட்டும் உண்மை. சிறீலங்காவால் இந்தப் போரில் ஒருபோதும் வெல்ல முடியாது.

இந்நேரத்தில் பிரித்தானியா 50 ஆண்டுகளுக்கு முன்பாக காலனித்துவ அரசாக விளங்கிய காரணத்தினால் மட்டுமல்ல, இங்குள்ள தமிழ் மக்களின் குரலை மதிக்க வேண்டும் என்பதினாலும் பாரிய பொறுப்பு உண்டு. கனடாவில் சுரேஸ் என்பவருக்கு நடந்தது போன்று, அகதிகளைத் திருப்பி அனுப்ப முயற்சிக்கும் சம்பவங்கள் இங்கே நடைபெற அனுமதிக்கக் கூடாது. அதேநேரத்தில் பிரித்தானியா நீதியானதும் சுயநிர்ணய உரிமை ஏற்கப்பட்டதும் உண்மையான சுதந்திரம் கிடைக்கக்கூடியதுமான வகையில் தமிழர்களுக்கு தீர்வு ஏற்படுவதற்கு உதவவேண்டும். மற்றைய நாடுகளைவிட இவற்றுக்காக உழைக்க வேண்டிய பாரிய பொறுப்பு பிரித்தானியாவுக்கு உள்ளது. இதற்காக, தொழிற்கட்சி அரசு அதிக பங்களிப்புக்களை மேற்கொள்ள வேண்டும். எனதும் எமது மக்களதும் ஆதரவு தமிழர்களுக்கு உண்டு" எனக் கூறினார்.

## சுயநிர்ணய உரிமையை அங்கீகரித்தலே தீர்வாகும்

ஆளும் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான திரு. ஜெரமி கோபின் உரையாற்றும் போது, "தமிழர்களுடைய ஒடுக்குமுறையானது, காலனித்துவ அரசுகளான ஒல்லாந்து, பிரித்தானியா காலத்தில் இருந்தே ஆரம்பமாகிவிட்டது.




லண்டன் பேரணிக் கூட்டத்தில் பொய்க்கால் குதிரை ஆட்டம்

அதிலும் குறிப்பாக, 50 ஆண்டுக்கு முன்பாக பிரித்தானியாவால் உருவாக்கப்பட்ட சுதந்திரத்துக்கான அரசியலமைப்பில் தமிழர்கள் மீதான ஒடுக்குமுறை திட்டமிட்ட வகையில் இடம் பெற்றது. இதனால் தமிழர்களுக்கு உரிய தீர்வை வழங்காத இந்த சுதந்திரத்தின் 50வது பொன்விழாவைக் கொண்டாடுவது அர்த்தமற்றது என்பதை உலகு தெரிந்து கொள்ள வேண்டும். 1958ஆம் ஆண்டு இனக்கலவரம் சிறீலங்கா அரசிற்கும் அதனது அரசியலமைப்புக்கும் எச்சரிக்கையாக அமைந்தது. அதேபோல் 1983ஆம் ஆண்டு இனஅழிப்பும் அதன் தொடர்ச்சியாக இன்று வரை நடைபெறும் போரும் அவற்றால் கொல்லப்பட்டுள்ள ஆயிரமாயிரம் மக்களும் உலகுக்கு எச்சரிக்கையாக அமைகின்றன. மக்களை திட்டமிட்ட வகையில் இனஒதுக்கல் செய்து ஒவ்வொருவரையும் பாதிப்படையச் செய்து வருவதை அனுமதிக்க முடியாது என்பதே அவ் எச்சரிக்கை. அதனால் இந்தப் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு காணும் பொறுப்பு உலகுக்கு உண்டு. நான் தமிழ் மக்கள் இந்த நாட்டிலும் மற்றைய நாட்டிலும் அகதிகளாக வாழ்வதற்கு எப்பொழுதுமே உதவி வருபவன். அகதி அந்தஸ்து வழங்குவதும் இந்தப் பிரச்சினையில் தீர்வு ஏற்படுவதற்கான ஒரு கருவியே. பிரித்தானியா அரசு, தமிழர்கள் ஏன் அகதி அந்தஸ்துக்கு விண்ணப்பிக்கின்றார்கள், தமிழர்கள் ஏன் தமது தாயகத்தை விட்டு பலவந்தமாக வெளியேற்றப்பட்டனர் என்பவற்றை கவனத்திற்கு எடுக்க வேண்டும்.

தமிழர் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு, தமிழர்களுடைய சுயநிர்ணய உரிமையை ஏற்காதவரை ஒருபொழுதும் எய்தப் படமாட்டாது. உலகின் மற்றைய பகுதிகளில் நடைபெறுபவற்றை அவதானிக்கும் என்னைப் போன்ற பலர், தமிழர்களையும் தமிழர்களது நிறுவனங்களையும் தடைசெய்வது சிறீலங்காவின் நீதியற்ற போக்கை ஊக்கப்படுத்துவதாகவே அமைகிறது எனக் கருதுகிறோம். இந்தத் தடைகள் சிறீலங்காவை திருப்தி படுத்துவதற்காகவே மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தடை செய்வது ஒருபொழுதும் தீர்வாக அமையாது. தமிழர்களின் உரிமைகளை அங்கீகரித்து அவர்களுடன் அரசியல் பேச்சுவார்த்தைகளை நடாத்துவது ஒன்றினால் மட்டுமே தீர்வை காணமுடியும். உலகின் முதலீட்டாளர்கள் வங்கிகள், வர்த்தகர்கள், சிறீலங்காவில் நிலைமை வழமை எனக் கூறிக்கொண்டு அங்கே நடாத்தும் ஆயுத விற்பனைகள் சிறீலங்காவால் உள்நாட்டு போருக்கே பயன்படுத்தப்படுகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது. எனவே இதனை நிறுத்தும்படி அவர்களை நாம் கேட்க வேண்டியவர்களாக உள்ளோம். நாம் இங்கு தமிழர் அணிநடையிட்டு அரசியல் தீர்வு வேண்டுமென கோசம் எழுப்பியதை கேட்போம். அவர்கள் நீதியானதும்

நேர்மையானதும்மான தீர்வுக்கு குரல் எழுப்பினர். சிறீலங்காவில் தமிழர்கள் இனஒதுக்கலை அனுபவிப்பது தெளிவாகத் தெரிகிறது. இந்நிலையில் அங்கு தமிழர்கள் சுயநிர்ணய உரிமைக்கு கோரிக்கை எழுப்புவது நீதியானதும் சட்டரீதியானதுமான ஒன்றாக உள்ளது. தமிழரின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிப்பதினாலேயே அங்கு நிரந்தரமான அமைதியை ஏற்படுத்த முடியும். இன்னும் இருபது ஆண்டுகளுக்கு போரையும் அழிவுகளையும் இவற்றால் வடக்கு – கிழக்கு பகுதியிலுள்ள ஒவ்வொரு தமிழ் குடும்பங்களும் பாதிப்புறுவதையும் உலகால் அனுமதிக்க முடியாது. இந்த மக்கள் தமது




லண்டனில் தமிழ்த்தேசியத்தின் சின்னமாக தமிழீழத்தேசியக் கொடி

சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட அமைதியை வேண்டி நிற்கின்றனர். இவர்கள் இதை அடைவதற்கு எம்மாலான உதவிகளை செய்யவேண்டும்" என்றார்.

## தமிழரின் சுதந்திரத்துக்கான வெளிப்பாடு அதிக சத்தத்துடன் கேட்கின்றது

அடுத்து லிபரல் டெமோகிரட் கட்சியைச் சேர்ந்த சைமன் கியூஸ் பா.உ. அவர்கள் கூட்டத்தில் மக்கள் முன் மிகவும் விளக்கமாகவும் சுவாரசியமாகவும் பேசினார். "நான் தமிழீழத்தின் வெளிநாட்டுத் தலைமைச் செயலகம் இருக்கும் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர் என்ற உரிமையுடன் இங்கு உரையாற்றுகிறேன். ஆயினும் இதற்கு முன்பாகவே நான் உங்கள் பிரச்சினைகளை நன்கு அறிந்து வந்துள்ளேன். நான் ஒரு மனித உரிமை சட்டத்தரணி. நான் பாராளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டது நான்கு ஆண்டுகளுக்கு மனித உரிமை வேலைகளை முன்னெடுப்பதற்காகவே. அத்துடன் நான் ஒரு சர்வதேசியவாதி. மேலும் நான் ஒரு ஜனநாயகவாதி. இவைகளின் பின்னணியில் நான் உங்கள் பிரச்சினைகளில் என்றுமே ஆர்வம் உள்ளவனாக இருந்து வந்துள்ளேன். இன்று மட்டுமல்ல, கடந்த சில வாரங்களாக மட்டுமல்ல என்றுமே தமிழ் மக்களாகிய நீங்கள் சுதந்திரத்தை அடைய வேண்டுமென்பதில் காட்டிவரும் போரார்வத்தை நான் நன்கு அறிவேன். இதனால் உங்களதுஇதனை நிரூபிப்பதற்காகவே நீங்கள் இங்கு இன்று பெருந்திரளாகத் திரண்டு நிற்கின்றீர்கள். நீங்கள் இலங்கைத் தீவில் மற்றவர்களுக்குச் சமத்துவமான வரலாற்றுப் பெருமை மற்றவர்களுக்குச் சமத்துவமான நீண்டகால கலாச்சாரப் பாரம்பரியத்தை கொண்டுள்ளீர்கள் என்பதை தெளிவாக விளங்கிக் கொள்வேன். நான் இந்த நாட்டில் ஆங்கிலேயரைவிட தமது இனத்துவ தன்மைகள் குறைந்தன எனக் கூறிவாழும் வேல்ஸ், ஸ்கொட்லாந்து இனங்களை நன்கு தெரிந்தவனாகவும் வேல்ஸ் இனத்திலிருந்து வந்தவனாகவும் உள்ளதினால் எனக்கு எல்லா இனங்களதும் பிரச்சினைகளை நன்கு புரிந்து கொள்ள முடியும்.

இனங்கள் அவர்களுக்கு உரிய இடம் கொடுக்கப்பட்டுள்ளது எனக் கருதுவதற்கு முதலில் அவர்கள் தமது தலைவர்களை சுதந்திரமான ஜனநாயக முறைகளில் தமது விருப்பின் பேரில் தெரிவு செய்ய அனுமதித்து, அந்தத் தலைவர்கள் உலகின் சபைகளில் அம் மக்களது குரலாக ஒலிப்பதற்கு அனுமதிக்கப்பட்டாலே இனங்கள் திருப்தி பெறமுடியும். இது மறுக்கப்பட்டதினால்தான் தமிழர்கள் தங்கள் முழு அர்ப்பணிப்புடன் போராடுகின்றார்கள் என்பதை இன்று உலகின் மக்கள் எல்லோரும் நன்கு விளங்கி வருகின்றனர். இதனை விளக்குகின்ற குரலாக உங்கள் ஒவ்வொருவரது குரலும் ஓங்கி ஒலிக்கின்றதினால் உலக மக்கள், நீங்கள்

தொடர்ச்சி மறுபக்கம்.....

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# உலகத் தலைநகர்களில் ........

எந்த வழியை போராட்டத்துக்கு தேர்ந்தெடுத்துள்ளீர்கள் என்பதைவிட எதற்காகக் போராடுகின்றீர்கள் என்ற உண்மையைச் சரிவரத் தெரிந்து வருகின்றனர். இதனை மேலும் தெளிவுபடுத்தக்கூடிய முறையில் நான் மூன்று விடயங்களை இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

## பொதுநலவாய நாடொன்று தமிழர்களைத் துன்புறுத்த முடியாது

முதலாவதும் நாம் எல்லாம் இங்கு கூடியிருப்பதற்கான மிக முக்கிய தேவையாகவும் இருப்பது உங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், நண்பர்கள், குழந்தைகள் இனத்துன்புறுத்தங்களுக்கு – சித்திரவதைகளுக்கு பாலியல் வன்முறைகளுக்கு – இனக்கொலைகளுக்கு உள்ளாக்கப்பட்டு அவர்களின் வாழ்வு, சுதந்திரம், ஒன்றுகூடல் என்பவற்றுக்கு மேல் ஆக்கிரமிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதை எடுத்துக் காட்டுவதற்கே. பொதுநலவாய நாடுகளின் உறுப்பினராக உள்ள ஒரு நாடு, இதனைச் செய்வதை ஒருபொழுதும் பொறுத்துக் கொள்ள முடியாது. இது ஒரு நாள் அல்ல, ஒரு கிழமையல்ல, ஒரு மாதமல்ல, ஒரு வருடமல்ல ஒருபொழுதுமே நடை பெறுவதை அனுமதிக்க முடியாது. மனித உரிமைகளை தமிழர்களுக்கு மட்டுமல்ல, சிறீலங்காவின் பிரசைகளுக்கு மட்டுமல்ல, உலகின் ஒவ்வொரு மக்களும் அனுபவிப்பதை பேண வேண்டிய பொறுப்பு எங்கள் ஒவ்வொருவருக்கும் உண்டு. இந்த அடிப்படையில் நான் இயங்கிவருவதன் நிலையையும், தமிழீழ மக்களின் மனித உரிமைகளுக்காக நானும் எனது தொகுதி மக்களும் உழைத்து வருவதை கேள்விப்பட்ட சிறீலங்காவின் கொழும்பு அரசு அதனது தூதுவரை என்னை அழைத்துக் கதைக்கும்படி கூறியது. நானும் அவரைச் சந்தித்தேன். அப்பொழுது அவர் இவையெல்லாம் முதலாளித்துவத்தின் விளைவு என பூசி மெழுக முயற்சித்தார். நான் எது எப்படியிருப்பினும், தமிழ் மக்களுக்கு அவர்களது சொந்தச் சுதந்திரத்தை அனுபவிப்பதை, அவர்களின் சுயவிருப்பை வெளிப்படுத்துவற்குமான உரிமைகள் நிலைநிறுத்தப்பட வேண்டுமென ஆணித்தரமாக எடுத்துக்கூறினேன். இதன்பலனாக என்னை வடபகுதிக்கு குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு வரும்படி சிறீலங்கா அழைப்பு விடுத்துள்ளது. நானும் இவ்வாண்டு இறுதியில் அங்கு செல்லவிருக்கிறேன். உல்லாச பயணமாக அல்ல. அங்கு சென்று நிலைமைகளை அவதானித்து இந்திய, இலங்கை அரசுகளின் பிரதிநிதிகளுடனும் இங்குள்ள பிரித்தானிய அரசின் பிரிதிநிதிகளுடனும் கதைத்து, தமிழர் பிரச்சினையைப் பொதுநலவாய நாடுகளிலும் உலக சபைகளிலும் ஓரங்கட்டுவதை மாற்றியமைத்து, பொதுநலவாய நாடுகளின் முக்கிய நிகழ்ச்சி நிரலில் ஒன்றாக மாற்றுவதற்காகவே நான் அங்கு செல்கிறேன். தமிழர்களுடைய கோரிக்கை பொதுநலவாய நிகழ்ச்சி நிரலில் முக்கிய நிகழ்ச்சியாக் இடம்பெறல் என்பதை, இரண்டாவது அதிமுக்கிய தேவையாக நான் கூறிவைக்க விரும்புகிறேன்.



ஸ்கொட்டிஸ் வாத்தியத்துடன் லண்டன் பேரணி

மூன்றாவதாக, அரசியல் பிரச்சினைகள் அரசியல் தீர்வுடன் நியாயமானதாகத் தீர்த்து வைக்கப்பட வேண்டும். இது மறுக்கப்படும் பொழுது மக்கள் பயங்கரவாதத்திற்கும் நீதியற்ற இராணுவ நடவடிக்கைகளுக்கும் உள்ளாக்கப்படுகின்றனர். தென்னாபிரிக்காவின் நினைவுகளை நாம் இன்னும் மறக்கவில்லை. இனஒதுக்கலை எதிர்கொள்வதற்கு வன்முறை சிறந்த வழியில்லாவிட்டாலும் அதனையும் பின்பற்ற வேண்டிய நிலைக்கு மக்கள் தள்ளப்படுகின்றனர். நான் எப்பொழுதுமே இனஒதுக்கலுக்கு எதிராகப் போராடி வருபவன். இந்த வகையில், தமிழ் மக்களுக்கு எனது ஆதரவைத் தெரிவிக்க கடமைப்பட்டுள்ளேன். நாங்கள் அவர்களை ஆதரிக்கிறோம் என்பதை அவர்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். தோளோடு தோளாக நாம் அவர்களுடன் நிற்கிறோம் என்பதை வடக்கு – கிழக்கு மாகாண மக்கள் தெரிந்து கொள்ள வேண்டும். உலகம் அவர்களை முழுமையாக ஆதரிக்கிறது என்ற செய்தி அவர்களைச் சென்றடைய வேண்டியது முக்கியமான ஒன்று.

## பிரித்தானியாவின் வரலாற்றுப் பொறுப்புண்டு

இந்தச் சிறீலங்காவின் சுதந்திரப் பொன்விழா கொண்டாட்டமானது உலக மக்களுக்கு, சிறீலங்காவில் சுதந்திரம் கேட்டும் அதை பெற்றுக் கொள்ள முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ள மக்களும் உள்ளார்கள் என்பதையும் சுதந்திரம் அங்கு முற்றுப் பெறவில்லை என்பதையும் எடுத்துக் காட்டியுள்ளது. இதற்கான கூட்டுப்பொறுப்பு காலனித்துவ அரசாகத் திகழ்ந்த பிரித்தானியாவுக்கு உண்டு. யாருமே சொல்ல முடியாது இதில் எங்களுக்கு பொறுப்பு இல்லை என்று. எங்கள்ள இதில் தலையிடக்கூடாது என்று யாருமே சொல்ல முடியாது. ஏனெனில் பிரித்தானிய காலனித்துவ அரசுதான் 1833இல் தமிழர்களதும் சிங்களவர்களதும் தேசங்களை இணைத்து இலங்கை அரசு என்ற ஒற்றையாட்சி அமைப்பினை தோற்றுவித்தது. நாங்கள்தான் அமைப்புக்களை மாற்றியவர்கள். நாங்கள்தான் இந்தத் திருப்தியற்ற அரசியல் அமைப்புக்களைத் தோற்றுவித்தவர்கள். ஆகவே, எமக்கு வரலாற்றுக் கடமையுண்டு. பிரித்தானியா இந்தப் பொறுப்பை உணர்ந்து கொள்ள வேண்டும். நீதிக்காகவும் அமைதிக்காகவும் குரல் எழுப்பும் மனித உரிமைச் சட்டத்தரணியாகிய நான, இந்தப் பணியை இம்முறை இலங்கையின் வடக்கு – கிழக்கு பகுதிகளில் செய்யப் புறப்படுகிறேன். சிறீலங்கா அரசின் முன்னாலேயே அதனுடைய மனித உரிமை வன்முறைகளை எடுத்துக் கூறத் தயங்கமாட்டேன். அத்துடன் பிரித்தானிய அரசிற்கு பொதுநலவாய மாநாட்டிலும் உலக சபைகளிலும் இந்த உண்மைகளை எடுத்துக்கூறும் பொறுப்பு உள்ளது என்பதை இடித்துக் கூறி செயற்பட வைப்போம். உங்களில் பலர் இங்கே நிரந்தரமாக வாழத் தொடங்கி விட்டீர்கள். உங்கள் பலரின் உழைப்பால், அறிவால் இந்தப் பிரித்தானிய தேசமும் வளம் பெறுகிறது. இதனால் உங்கள் சார்பாகவும் எங்கள் வாழ் நாளிலேயே அங்கு அமைதியை – சுதந்திரத்தை உருவாக்க வேண்டிய பொறுப்பு எங்களுக்கும் பிரித்தானிய அரசுக்கும் உண்டு.

2ஆம் உலகப் போரின் பின் எனது தாயார் எனக்கு கூறினார், இலங்கை அழகும் அமைதியும் நிறைந்த நாடு என்று. அந்த அழகு, அமைதி, வளம் இன்று அரசியல்வாதிகளினால் சிதைக்கப்பட்டு காட்சி அளிக்கிறது. இதனால் அதனை மீளவும் மாற்றியமைக்க வேண்டும். இத் துக்கநிலை மாறி, நீங்கள் மகிழ்ச்சியுடனும் அமைதியுடனும் இங்கு மட்டுமல்ல, உங்கள் தாய் நாட்டிலும் வாழ, அமைதி கிட்ட நாமெல்லாம் உழைப்போம். அந்த நன்னாள் வெகுதூரத்தில் இல்லை" எனக்கூறி தனது உரையை நிறைவு செய்தார். இப் பொதுக்கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் பிரித்தானியப் பொறுப்பாளர் சாந்தன், தமிழீழ விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர் தனம் ஆகியோரும் விளக்கவுரை ஆற்றினர். நவாலி குண்டு வீச்சு பற்றி புகழ்பெற்ற வேல்ஸ் இன கிறிஸ்தவ பாடகர் திரு. கரத் கீவிட் பாடிய பாடலை 'கிறிஸ்ரியன் எய்ட்' அமைப்பில் பணியாற்றும் செல்வி. ரபிற்றா, திரு. அஜந்தகுமார் ஆகியோர் மேடையில் இசைத்தனர். தொடர்ந்து ஒலிபெருக்கியில் "நம்புங்கள் தமிழீழம் நாளை பிறக்கும்" விடுதலைப் பாடல் இசைக்கப்பட்டது. இறுதியாக தேசியக் கொடி இறக்கப்பட்டு பொதுக்கூட்டம் நிறைவு செய்து வைக்கப்பட்டது. ✷

## எழுச்சிப் பேரணிகள் - விழிப்புப் போராட்டங்களில் ...........

உலகெங்கும் பரப்புரை செய்வதற்கும் சிறீலங்கா பெரு ஆயத்தங்களைச் செய்து வந்தது.

இதனை இனங்கண்ட உலகெங்கும் வாழும் தமிழீழ மக்கள், தமது தமிழீழ தேச உடன்பிறப்புக்கள் இராணுவ ஆக்கிரமிப்புக்குள் உணவு, மருந்து, இருப்பிடம், கல்விக்குக்கூட தடை விதிக்கப்பட்டு இன்அழிப்புச் செய்யப் படுவதை உலகுக்கு எடுத்துக்காட்டி சுதந்திரப் பொன்விழாவெனும் சிறீலங்காவின் நரித்தந்திரமான பெருமுயற்சியை முறியடிக்க உறுதிபூண்டனர்.

இதனால் கடுங்குளிரையோ, போக்குவரத்து – வேலைக் கஸ்டங்களையோ பொருட்படுத்தாது கனடா, லண்டன், சுவிஸ், யேர்மன், பிரான்ஸ், நோர்வே என உலகெங்கும் வாழும் தமிழர்கள் பெருந்திரளாகத் திரண்டு எழுச்சிப் பேரணிகளையும் விழிப்புப் போராட்டங்களையும் நடாத்தினர். இவற்றின் மூலம், சர்வதேச மக்களுக்கு தமிழீழ மக்களின் நிலையினை எடுத்து விளக்கி, தேசவிடுதலைக்கு சர்வதேச ஆதரவைத் திரட்டி சிறீலங்காவின் "பொன் விழா" பரப்புரையையும் தலைகீழாக்கினர். ✷

## தம்பலகாமத்தில் எட்டு தமிழ் மக்களை............

வீடாகத் தேடுதலைத் தொடங்கிய சிங்களப் பொலிசார், புதுக்குடியிருப்பு தேவாலயத்திற்கு அருகே மேலும் இரண்டு [illegible] வித் தமிழர்களைச் சுட்டுக் கொன்றனர்.

பின்னர் கந்தளாய் பொலிசார், அப்பகுதி மக்களிடம் இவர்கள் விடுதலைப் புலிகள் என கையெழுத்து இடும்படி வற்புறுத்தி உள்ளனர். ஆயினும் பொதுமக்கள் மனஉறுதியுடன் இவ் இனக்கொலைகள் குறித்து குரல் கொடுத்ததினால் மக்கள் கிளர்ச்சியை அடக்குவதற்காக கந்தளாய் பொலிசார் இக்கொலைகளை சிறீலங்காப் பொலிசாரே செய்தனர் என்பதனை உறுதி செய்தனர். ஆயினும் இந்த மனிதக் கொடுமைகளைச் செய்த பொலிசார் வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனரே தவிர, இதுவரை கைதாக்கப்பட்டு விசாரிக்கப்படவில்லையென சர்வதேச மன்னிப்புச் சபை தெரிவித்துள்ளது.

இதேபகுதியில் முன்னர் 13 குழந்தைகள் உட்பட 24 தமிழர்கள் சிறிலங்காப் படைகளினால் இனக்கொலை செய்யப்பட்டதையும் அது குறித்து இதுவரை சிறிலங்கா அரசு எதுவித நடவடிக்கைகளை மேற்கொள்ளாததையும் சர்வதேச மன்னிப்புச் சபை சுட்டிக்காட்டியுள்ளது.மேலும் இந்த இனக்கொலைகளைக் கடுமையாகக் கண்டித்துள்ள சர்வதேச மன்னிப்புச் சபை, இது குறித்து உடன் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு நீதி கிடைக்க உடன் நடவடிக்கை எடுக்கும்படி சிறீலங்கா அரசைக் கேட்டுள்ளது.

கொலைகாரனிடமே கொலைக்கு நீதி வழங்கும்படி கேட்பதைவிட, கொலைகாரனைத் தமது தேசத்தை விட்டு விலக்க உதவும்படி தமிழ் மக்கள் சர்வதேச உலகைக் கேட்டு நிற்கின்றனர். ✷

# ஒட்டவாவில் அமைதி ஊர்வலம்

சிறீலங்காவின் சுதந்திரப் பொன்விழா, தமிழர்களைப் பொறுத்தவரையில் அடக்குமுறையின் 50 ஆண்டு நிறைவு என்பதை உலகுக்குப் பறைசாற்ற, உலகின் பல நாட்டுத் தலைநகரங்களிலும் பேரணிகள் நடைபெற்றன. இந்தவகையில், கனடாவின் தலைநகர் ஒட்டவாவிலும் 04-02-98 அன்று சிறீலங்கா தூதுவராலயத்தின் முன்பாக கனடா வாழ் தமிழ் மக்களின் மாபெரும் அமைதி ஊர்வலம் சிறப்பாக நடந்தேறியது. முற்பகல் 11 மணியிலிருந்து பிற்பகல் 02 மணிவரை கடும் குளிரையும் பொருட்படுத்தாது 1,500க்கும் மேற்பட்ட மக்கள் மிக்க எழுச்சியுடன் கலந்து கொண்டனர். றொரன்ரோ, மொன்றியல் உட்பட கனடாவின் பல பாகங்களிலிருந்தும் தமிழ் மக்கள் வந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. இதில் கலந்து கொண்ட மக்கள் சிறிலங்காவின் சுதந்திரதினக் கொண்டாட்டம் நடைபெற்ற வீதியூடாகச் நடந்து சென்று, பாராளுமன்ற முன்றலூடாகத் திரும்பவும் தூதுவராலயத்தின் முன் வந்ததும் பேரணி முடிவுற்றது.

இது இவ்வாறிருக்க, கனடாவின் தமிழ் மக்கள் வாழும் எல்லா நகரங்களிலும் உண்ணாவிரதங்கள், வழிபாடுகள், பிரார்த்தனைகள் என்பன தமிழரின் அமைதி வேண்டி நடாத்தப்பட்டது.

ஊர்வலத்தினை ஒழுங்கு செய்த ஒட்டவா மனித உரிமைப் பேரவையினர் பலராலும் பாராட்டப்பட்டனர். பெப்ரவரி 02ஆம் திகதியிலிருந்து 04ஆம் திகதி வரை ஒட்டவா, காள்ரன் பல்கலைக் கழகங்களைச் சேர்ந்த தமிழ் மாணவ அமைப்புக்கள் புகைப்படக் கண்காட்சி ஒன்றினை நடாத்தியுள்ளனர்.

சிறீலங்கா அரசினால் தமிழ் மக்களுக்கெதிராக கடந்த 50 ஆண்டு காலமாக மேற்கொள்ளப்பட்ட மனித உரிமை மீறல்களை சித்தரிக்கும் புகைப்படங்கள் கண்காட்சியில் இடம்பெற்றுள்ளன.

இவ் புகைப்படக் கண்காட்சி நிகழ்ச்சியினை பத்துக்கும் மேற்பட்ட பத்திரிகை, தொலைக்காட்சி, வானொலிச் சேவையினைச் சேர்ந்த செய்தியாளர்கள் வந்திருந்து செய்தி சேகரித்தமை குறிப்பிடத்தக்கது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## சிறுகதை




வழமைக்கு மாறாக வீடு கலகலப்பாக இருந்தது. இரண்டு அறை கொண்ட அந்த சிறிய வீடும் முன்னே அமைந்த பெரிய தலைவாசலும் வெள்ளையடித்து இரண்டு நாட்களாயினும் பார்க்க அழகாகத்தான் இருந்தது.

"தம்பி அனிப்பின காசிலை வீட்டைக் கட்டியிருக்கலாம். அதுக்கிள்ளை இந்த கோதாரியிலே போற பிரச்சினை வந்திட்டுது" அம்மா தினமும் புலம்புகிற வார்த்தைகள்தான். அவவிற்கு வெளி நாட்டுக் காசு வந்தும் மற்றவைபோல வீடு இல்லையே என்று ஒரே ஆதங்கம். ஆனால், பூரணிக்கு 38 வருடங்களாகப் பழகிப்போன இந்த நீண்ட தலைவாசலும் அதன் அகன்ற குந்தும் ஏதோ அனுபவங்களையும் ஆதரவையும் கொடுப்பவையாகவே இருந்தன. சோகங்களும் சுமைகளும் அவளை அழுத்தினாலும் நிலவின் தனிமையில் இந்தக் குந்தில அமரும்போது ஏதோ ஒரு சுகம் அவளைத் தொட்டுச் செல்லும்.

சீக்காளியான அம்மா, சிடுசிடுக்கும் தந்தை, தன்குடும்பத்தோடு ஒதுங்கிக் கொண்ட அக்கா, திருமணமாகிவிட்ட இரண்டு தங்கைகள், தாட்சணியம் மிக்க தம்பி, சாதாரண பரீட்சை இரண்டு தடவை தாண்டிவிட்ட குட்டியன் அனைவரினதும் சுமைதாங்கி பூரணி தான். 24 வயதில் ஆசிரியை ஆனபோது சந்தோசத்தில் பட்டுப் பூச்சியாய் பறந்தாள், குடும்பத்தின் வறுமை தீர்ந்துவிட்டது என்ற துடிப்பில்.

ஆனால், சுமையைத் தூக்கி நின்றது சுமைதாங்கிக் கல் என்பது அப்பொழுது புரியவில்லை.

"பிள்ளை பூரணி, கனகம் அக்கா சொல்லுறா இந்தப் பச்சைச் சீலை வேண்டாமாம்" அம்மா சுறுசுறுப்பாகவே இயங்கினாள். பூரணிக்கு சிரிப்பாக வந்தது. கொஞ்சம் முதல் கனகம் அக்காவும் செல்லம் அக்காவும் கிசு கிசுத்தது அவள் காதில ஈட்டியாகப் பாய்ந்தது.

"மெய்ய செல்லம் உவள் பெடிச்சிக்கு முப்பத்தைஞ்சுக்கு மேல வரும் என்ன?"

"பின்னை என்ன, எங்கட பெடியன் பிறக்கேக்கே உவள் நடக்கிறாள். இப்ப அவன்டை பெட்டையள் இரண்டும் குமராயிட்டு"

"ஏன் உவளின்ரை தங்கைமாருக்கே நாலைஞ்சு வயதுப் பெடியள் இருக்கு"

"உந்தக் கலியாணம் இஞ்சு வரியத்துக்கு முந்தி வந்ததுதானே"

"அதுதான் விதி, பின்னை ஏன் இழுபடுது"

ஒரு நல்ல நாளில கூட அவள்மனது பாரமாக இறுகியது. அவர்கள் கூறியதுபோல அவள் வாழ்க்கைக்குக் காரணம் விதியா? விதி. . . . ..யா? விதி... . . .யா? இல்லவே இல்லை. சீதனம் என்னும் பேய்தான் இந்தப் பெண்ணின் வாழ்க்கையையே மாற்றி விதி என்னும் போர்வையால் போர்த்தி விடுகின்றது.

"அக்கா நான் கொண்டை போட்டுவிடுறன்" தயங்கியபடி வந்தாள் சாந்தி.

"அ . . ம் . . மா" எனச் சிணுங்கியபடி அவள் இரண்டு வயதுக் குழந்தை சட்டையை இழுத்தது.

"வேண்டாம் சாந்தி. நான் போடுவன்தானே. நீ இவனைத் தூக்கு" மறுத்தாள்.

"ஏன . . க் . . கா" அவள் தயக்கம் கண்களில் தெரிந்தது. சாந்தி மிகவும் அன்பான தங்கை. அவளின் கல்யாண நாள் நேற்றுப்போல இருக்கிறது.

"அக்கா நீங்கள் என்ன சொன்னாலும் நான் கட்டமாட்டன். நீங்கள் கட்டின பிறகுதான் எனக்குக் கலியாணம். எனக்கென்ன இருபது வயதுதானே. நான் வேலை பார்க்க வேண்டும்"

"சாந்தியம்மா, கடைசிலை ஒருதருமே வாழாமல் இருக்க வேண்டி வருமம்மா"

"அதுக்காக நீங்கள் எவ்வளவு நாள் கஷ்டப்படுவியள்?"

"பார் சாந்தியம்மா தோட்டக் காணியோடை கொஞ்சக் காசு எண்டுதானே கேக்கினம். இப்ப எவ்வளவு சீதனம் வெளியிலை கேக்கிறான்கள்"

(ஓம் பிள்ளை அக்கா சொல்லுறதைக் கேளும்) அம்மாவிற்கு ஏதோ நடந்தால் சரிதான்.

பூரணிக்கோ ஒவ்வொரு சுமையாக இறங்க வேண்டும் என்ற துடிப்பு. ஆனால் சீதனக் காசை அவள் பிரட்டப்பட்ட பாடு. அப்பொழுதுதான், எல்லா நகையையும் அடகுவைத்து தம்பியை வெளிநாடு அனுப்பிமிருந்தாள். உடனே சாந்தியின் திருமணம் கைகூடிவிட்டது. சாந்தியின் கூற்றில் இருந்த நியாயம் அவளுக்குப் புரியாமல் இல்லை. அவளுக்கு வயது இருபது தான். ஆனால் யதார்த்தமாகப் பார்த்தால் இன்னுமொரு திருமணம் கைகூட எவ்வளவு நாள் ஆகுமோ. பூரணி விதியை நம்பவில்லை. ஆனால் வழிகள் எல்லாம் அடைக்கப்பட்டு விட்டன. தம்பி உழைக்க இரண்டு வருடமாவது எடுக்கும். அதற்குள் வட்டி தலைக்கு மேல் ஏறிவிடும்.

கொஞ்சம் வசதியான அக்காவும் மூத்த தங்கையும் கூட கையை விரித்து விட்டார்கள். ஆனால், பூரணி களைக்கவில்லை. எப்படியோ திருமணம் நடந்து முடியவும் "அவள் கடன் சுமை தாங்காமல் தள்ளாடவும் சரியாக இருந்தது. "பிள்ளை கெதிப்பண்ணு. வெளியில் மும்மரமாக ஓடினார்கள்."

(மாப்பிள்ளை வீட்டுக்காரர் கொஞ்சப் பேர் வருகினம்)

"போட்டோக்காரன் வந்திட்டானே"

(தம்பியின்ர தலைப்பா எங்கை)

நேரம் நெருங்க நெருங்க எல்லோரும் அவசரப்பட்டார்கள். தலைவாசல் மூலையில் ரேப் மங்கள வாத்தியம் இசைத்தது. ஜெனரேட்டர் அதை மிஞ்சி ஒலித்தது.

பூரணிக்கு இவை எதுவுமே பாதிப்பை ஏற்படுத்தவில்லை. அவள் மனமும் சிலிர்க்கவில்லை.

கண்ணாடியில் தன்னைப் பார்த்தாள். நடுவகிடு பிரித்தாள். "ஓ உச்சியில் அத்தனையும் நரைமயிர்! ஒருகணம் ஸ்தம்பித்துப் போனாள். இத்தனை நாளும் ஏன் இது தெரியவில்லை. சுமையின் அழுத்தத்தில் இதைக் கவனிக்கவில்லையோ? அவசர அவசரமாக மேவி இழுத்து முடித்தாள். ஒரு பக்கம் தலையைச் சாய்த்தாள்.

"கடவுளே காதோரம் யாவும் நரைத்து விட்டது!"

"ஒரு இல்லறவாசி காதோரம் நரை விழுந்ததும் தன்னைத் துறவறத்திற்குத் தயார் செய்கின்றான்" என்றோ ஒரு பேராசிரியர் கூறிய கருத்து மனதில் ஒலித்தது மட்டுமல்ல, வலியையும் கொடுத்தது.

துறவு நிலைக்குத் தயாராக வேண்டியவள் இல்லறத்திற்குத் தயாராகின்றாளா? சீதனம் அவளைப் பார்த்துக் கைகொட்டி நகைத்தது, "பெண்ணே இதுதான் உன் விதி என்று.

"இல்லை.... இல்...லை...இ...ல்...லை" இது விதியில்லை? மனம் ஓலமிட்டது. நினைவு சட்டென விரிந்தது. கருங்கூந்தல் காற்றில் பறக்க மூன்று




மைல், தொலைவில் உள்ள பாடசாலைக்குச் சைக்கிளில் பறந்தாள் பூரணி.

"மூன்று மைல். ஏழு நிமிடம் இருக்கிறது" எட்டி மிதித்தாள். இரண்டு நிமிடத்தின் பின் சில்லுக்குள் சேலை மாட்டிக் கொண்டது. 87இல் ஆமி நுழைந்தபின் வனாந்தரமாக்கப்பட்ட வீதி கடைகளோ மனித சஞ்சாரமோ இல்லாமல் வெறிச்சோடிக் கிடந்தது.

"என்ன ரீச்சர் நடுறோட்டிலை சேலை சரியே?" குரல் கேட்டு நிமிர்ந்தாள்.

"கொஞ்சம் அப்படியே நில்லுங்கோ. சில்லைக் கழட்டவேணும்."

"ஐயோ இழுத்து அறுங்கோ. நேரம் போட்டுது. ஆரும் வந்தாலும். . . மனம் படபடத்தது."

"அப்ப நிறைய சேலை வைச்சிருக் கிறயள்போல" முறுவலுடன் தொழில் பட்டான் விநாயகம்.

பத்து நிமிடத்தில் சேலை விடுதலை பெற்றது. நன்றி சொல்ல நினைத்தாள். நா எழவில்லை. மனம் சிலிர்த்துக் கொண்டது. சைக்கிளை வேகமாக மிதித்தாள்.

"ரீச்சர் நேற்று எவ்வளவு கஷ்டப்பட்டன். ஒரு தாங்ஸ் சொல்லாமல் போட்டியள்"

மறுநாளும் அதே இடம். பதில் வராமல் முறுவலித்தான். மனம் படபட என அடித்தது. அன்று தொடங்கிய நட்பு, இவ்வாறு நீண்டு சென்றது.

"உங்களுக்கு நிறையச் சம்பளம் போலை. அதுதான் சீலைகளைக் கிழிக்கிறியள்"

"இல்லை"

"எண்டாலும் உத்தியோகம் எண்டா பெருமைதானே"

"ஏன் அப்படி நினைக்கிறியள். உழைக்கிறவர்கள் எல்லாரும் மனிதரே. மனிசன் வாழ பணமும் குணமும் இருந்தால் சரிதான்"

"அப்ப பணம் என்னட்டை இருக்கு. குணம் உங்களிட்டை இருக்கு. நாங்களும் வாழலாம்தானே"

அவள் சட்டென நிமிர்ந்தாள். அவன் கண்கள் பளபளத்தது. அதன்பின் அவர்கள் உறவு நாலுபேரைக் கவரும் அளவிற்கு வளர்ந்தது. அதன்பின்தான் அப்படியும் நடந்தது.

ஒருநாள் மாலை அவள் களைத்து வீடு திரும்பியபோது,

"பூரணி விநாயகம் வீட்டாலை குறிப்பு வந்திருக்கு"

"அம்மா"......

"நல்ல பொருத்தம்"......

"அவையள் நிறையக் கேக்கினம் போல? திடுக்கிட்டு நிமிர்ந்தாள்"

வீடுவேணுமாம். அதோடை காசு ஒண்டு வரை கேக்கினம்".

"பணம் என்னுடையது. குணம் உங்களிட்டை இருக்கு" நினைவில் அதிர மனதில் வலி எடுத்தது.

தொடர்ச்சி 15 ம் பக்கம்.....

www.tamilarangam.net



# தேசமே ஆடிக்கிடக்க சிங்களம் கொடியேற்றியது

சிறீலங்கா பௌத்த சிங்களப் பேரினவாத அரசிற்கு இந்த ஆண்டு, மிக மோசமான ஆண்டாக அமையப்போகின்றது என்பதைக் கட்டியம் கூறும்வகையில் கடந்துசென்ற தை மாதம் தன் வலிமையான தடங்களைப் பதித்துச் சென்றுள்ளது.

1995ம் ஆண்டின் பிற்பகுதியில், சிறீலங்காப் படையினர் யாழ்குடாநாட்டை ஆக்கிரமித்த பொழுதுகளில், மிகவும் திமிர்த்தனத்தோடு, சிறீலங்கா சனாதிபதியும் சிறீலங்கா பிரதிப்பாதுகாப்பமைச்சரும் சொன்னது இன்றைய காலகத்தில் மிகவும் நகைப்புக் கிடமானதொன்றாகவே தோன்றுகின்றது.

விடுதலைப் புலிகளை குடாநாட்டைவிட்டு விரட்டியாகிவிட்டது. அவர்களை அடுத்த ஒரு ஆண்டுக்குள் முழுமையாக முறியடித்து இனப் பிரச்சினைக்கு தீர்வைக் காண்போம் என, அதிகாரமதர்ப்போடு அவர்கள் அன்று உரைத்ததற்கும், அவர்களின் இன்றைய பரிதாப நிலைக்கும் இடையே காலஇடைவெளி குறைவு. ஆனால் காட்சிகளின் பிமாணம் மிகப்பெரிது.

சிறீலங்காஅரசு தன் சுதந்திரநாள் கொண்டாட்டத்தை இங்கும் அங்குமாக காவிச் செல்லவேண்டிய பரிதாபம். திறந்தவெளியில் இலட்சக்கணக்கான மக்கள் திரண்டிருக்க, கோலாகலமாக எழுச்சியுடனும் மகிழ்ச்சியுடனும் கொண்டாட வேண்டிய ஒரு நாட்டின் சுதந்திரதினத்தை, அதிலும் பொன் விழாக்கொண்டாட்டத்தை பூட்டிய வீட்டுக்குள் இருந்தே மக்கள் பார்த்து ரசிக்கின்ற நெருக்கடிநிலை. எதிரிப் படையெடுப்பை எதிர்கொள்ளும் நிலைபோல சிறீலங்காவின் தலைநகரின் தலைவிதியே மாறிப்போய்க்கிடந்தது. கொழும்பிலும் சிறீலங்காப் படையினர் மத்தியில் பதட்டம். மக்கள் மத்தியில் குண்டுவெடிப்புக்கள் பற்றிய நடுக்கம். தேசமே ஆடிப்போய்க்கிடக்க, சந்திரிகா ரத்வத்தை கூட்டு சிறீலங்காவின் சுதந்திரநாளை சுற்றிவளைத்து நின்ற படையினரின் பாதுகாப்பு வேலிக்குள் நின்று கொடியேற்றிக்கொண்டது.

விடுதலைப் புலிகளை வன்னிக்குள் முடக்கியாகிவிட்டது என்ற நின்மதியுடன் மேற்கொள்ளப்பட்ட சந்தோசக் கொண்டாட்டமாக யாரும் இதனை கணிப்பிடவோ கருதவோ நிட்சயமாக முனையப்போவதில்லை.

1997ம் ஆண்டு, சிறீலங்காவின் இராணுவ முனைப்புக்கு பலமுனைகளில் விழுந்த பலத்த அடிகளுடன் நிறைவு பெற்றுக்கொண்டது. விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாக பலப்படுத்திச் சென்ற ஆண்டாக 1997 அமைந்தது. அரசியல் ரீதியாகவும் இராணுவ ரீதியாகவும் அடிவேண்டி நொந்துபோய் இருந்த சிறீலங்கா அரசிற்கு இந்த ஆண்டும் வேதனையோடு விடிந்திருக்கின்றது.

கடந்த ஆண்டு, மேமாதம் ஆரம்பிக்கப்பட்ட ஜெயசிக்குறு பாதை திறக்கும் இராணுவ நடவடிக்கை, வன்னிக்காடுகளுக்குள் சிக்கித் தடுமாறி வந்தவழிமறந்து நின்றது. இந்த ஆண்டு பெப்ரவரி நான்கிற்குள் பாதையைத் திறந்து, யாழ்குடாநாட்டில் இருந்து வெற்றிச்செய்தியைக் காவி வந்து, தான் பிறந்த கண்டியில், பொன்விழாக் கொண்டாட்டத்தை நடத்தி, அங்கு பாதை திறந்த வெற்றிச்செய்தியை வாசிக்க சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தை கனவு கண்டிருந்தார். அவர் கண்ட இருகனவுகளில் எதுவுமே பலிக்கவில்லை என்பதுடன், தான் பதவி விலகுவதாக போலிக்காகத் தன்னும் அறிவிக்கவேண்டிய நிலைக்கு அவர் தள்ளப்பட்டார் என்பதுதான் பரிதாபம்.

இந்தப் பொன்விழாக் களோபரங்களில், தமிழர் பிரதிநிதிகள் என உலகிற்கு அறிமுகப்படுத்த குடாநாட்டில் இராணுவப்பிடிக்குள் நடத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலும் மண்ணைக் கௌவியது. அந்த அரசியல் நாடகத்திலும் சிறீலங்கா அரசு தோல்வியையே சந்தித்துக்கொண்டது.

அடுத்து, சிறீலங்காவின் உயிர்நிலையை உலுக்கியெடுத்த கண்டி தலதாமாளிகை மீதான குண்டுத்தாக்குதல்.

சிறீலங்காவின் மிலேச்சத்தனமான தமிழின அழிப்பு நடவடிக்கையின் அறுவடையாகவே, யாருமே இதுவரை உரிமை கோராத கண்டித்தலதாமாளிகை குண்டுத் தாக்குதலை மதிப்பீடு செய்யமுடிகிறது. புத்தரின் புனிதப்பல் பாதுகாக்கப்படும் இத் தலதாமாளிகைமீது நடத்தப்பட்டுள்ள இத்தாக்குதல் சிங்கள மக்கள் மத்தியில் பெரும் மனஉடைவை ஏற்படுத்தியிருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. தமிழரின் தாயகத்தில் யுத்தம் நடைபெறுவதாக கற்பனை செய்த சிங்களமக்களுக்கு, தமது இதயத்திலேயே குண்டுவெடித்ததாக உணர வைத்துள்ளது.

> சிறீலங்காப் படையினர் மத்தியில் பதட்டம். மக்கள் மத்தியில் குண்டுவெடிப்புக்கள் பற்றிய நடுக்கம். தேசமே ஆடிப்போய்க்கிடக்க, சந்திரிகா ரத்வத்தை கூட்டு சிறீலங்காவின் சுதந்திரநாளை சுற்றிவளைத்து நின்ற படையினரின் பாதுகாப்பு வேலிக்குள் நின்று கொடியேற்றிக்கொண்டது.

தமிழர் நிலங்களில் வீசப்படும் குண்டுகளின் எதிரொலி, தாக்கம் அதிர்வு தம்முள்ளே எதிரொலிக்கும் என்ற பாடத்தை இக்குண்டுவெடிப்பு அவர்களிற்கு போதித்திருக்கக்கூடும். தமிழர்மீது தாக்குதலை நடத்தி, அதுகுறித்துப் பரபரப்புப்பிரச்சாரம் செய்து தென்பகுதியில் தமது அரசியல் ஸ்திரத்தன்மையைப் பேணநினைக்கும் அரசியல் தலைவர்களுக்கு, ரத்வத்தை தனது பதவியை துறப்பதாக அறிவிக்கவேண்டிய சூழ்நிலைக்கு யதார்த்தம் தன் எல்லைகளை விரித்திருக்கின்றது என்ற உணர்வை ஊட்டக்கூடும்.

ஆனால் இந்த குண்டுவெடிப்பை பலதரப்பினரும் கண்டிக்கமுனைகின்றனர் என்பது, அவர்கள் யதார்த்தத்தை பார்க்கமறுக்கின்றனர் என்பதன் அடையாளமே. உலகச்சட்ட விதிகளில், பாதுகாப்புப் படையினராக அங்கீகாரம் பெற்று, அதற்கான சட்டவிதிகளுக்கு கட்டுப்பட்டு நடக்கவேண்டிய சிறீலங்காப் படையினர், உலகநாடுகளால் போசிக்கப்பட்டு வளர்க்கப்படும் சிறீலங்காப் படையினர் வடக்கிலும் கிழக்கிலும் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கைகளால் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட தமிழரின் வணக்கத்தலங்களை சேதமாக்கியுள்ளனர், சிதைத்துள்ளனர். பலவற்றை முழுமையாக அழித்துமுள்ளனர். இந்தப் புனிதத் தலங்கள், வரலாற்றுப் புகழ்மிக்க வணக்கத்தலங்கள், நாயன்மார்களால் பாடப்பெற்ற பிரசித்திபெற்ற தமிழர்களால் போற்றி பாதுகாக்கப்பட்டுவந்த ஆலயங்கள் சிங்களப் படையால் அழிக்கப்பட்டபோதும் சிதைக்கப்பட்டபோதும் அசிங்கப் படுத்தப்பட்டபோதும் கண்டிக்கத் துணியாத குரல்களின் சொந்தக்காரர்கள், தலதாமாளிகைக் குண்டுவெடிப்பிற்கு, குரலைச் சரிசெய்தபடி கண்டிக்க முனைகின்றார்கள் என்றால், அவர்கள் காட்சிகளை கண்ணை மூடிக்கொண்டு தரிசிக்கின்றார்கள் என்றுபொருள்.

இக்குண்டுவெடிப்பிற்கு யாரும் உரிமைகோராத நிலையில், விடுதலைப் புலிகளை நோக்கி சுட்டுவிரல் நீட்டுவது பொருத்தமாகாது. இந்த எதிர்வதிர்வைத் தோற்றுவித்த பௌத்த சிங்களப் பேரினவாதமே இதற்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ளவேண்டும்.

புனிதத் தலங்கள், அந்தந்த மக்களின் நம்பிக்கை ஈடுபாட்டோடு சம்பந்தப்பட்டது. இதில் வலிந்தவர் மெலிந்தவர் என்ற பேதம் இல்லை. மெலிந்தவரின் மனப்புழுக்கம் அப்படியே அழுகி அடக்கி அரவமற்றுப்போகும் என்ற குருட்டுத்தனமான கோட்பாட்டை வலிந்தவர்கள் தழுவிக்கொள்வது அவர்களின் அறியாமையே.

பௌத்த சிங்களப் பேரினவாதிகள் வரலாற்றுரீதியாகப் புரிந்த அநியாயங்கள் அழிவுகளுக்கு பதில் கொடுக்கவேண்டிய காலம் இப்போது விடிந்துள்ளது என்பதில் தமிழர்களிற்கு மகிழ்ச்சியே.

சிறீலங்காவிற்குத்தான் 1998ம் ஆண்டு குண்டுச் சத்தத்துடன், விடிந்திருக்கிறது. என்ன செய்வது தாக்கத்திற்கு மறுதாக்கம் உண்டுஎன்பது விஞ்ஞான ரீதியான துணிபு.

– சுப்பு –

## கிளிநொச்சி மீட்பு.....

மனிதநேயத்துக்கு எதிரான வகையில் தனது படையினரின் சடலங்களைக்கூட அவர்களின் உறவினர்களைப் பார்க்கவிடாது தகனம் செய்து வருகின்றது. கிளிநொச்சி விடுவிக்கப்பட்ட செய்தியைக் கேட்டு மகிழ்ச்சியுற்ற தமிழ் மக்கள், அங்கு சென்று சிறிலங்காப் படையினரால் இடிக்கப்பட்ட தமது நகரையும் வீடுகளையும் பார்வையிட்டு கவலையுடன் ஆத்திரமும் ஆவேசமும் அடைந்தனர்.

இதற்கிடையில் ஆனையிறவு பெருமுகாமுக்கு மிக அண்மையாக அமைக்கப்பட்டிருந்த இராணுவத் தொடர்புகளுக்கான தொலைத்தொடர்பு கோபுரமும் ஐந்து கரும் புலிகளின் தாக்குதல்களினால் முற்றாகச் சேதமாக் கப்பட்டது. இந்த ஐந்து கரும்புலிகளும் தாயக மீட்புக்காய் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர். இதேபோல ஆனையிறவு ஆட்டிலறி பீரங்கி நிலைகளைத் தாக்கியழிக்கும் முயற்சியிலும் ஐந்து கரும்புலிகள் வீரச்சாவடைந்தனர்.

சிறிலங்காவின் பொன்விழா கொண்டாடுவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தவேளை, தாயகவிடுதலையின் வேகத்தை வெளிப்படுத்தி சிறிலங்காவின் அடக்குமுறை ஆட்சிக்கு எதிரான விடுதலைப் போரில் கிளிநொச்சி, பரந்தன், ஆனையிறவுப் பகுதியில் களமாடிய எங்கள் விடுதலைப் போராளிகளில் 14 கரும்புலிகள் உட்பட 150 போராளிகள் தாயக விடுதலையின் வித்தாகி வீரச்சாவு எய்தினர் என ஆரம்பச் செய்திகள் தெரிவித்தன.

இதேவேளை ஆனையிறவு தொலைத்தொடர்புக் கோபுரம் தகர்க்கப்பட்டதினால் சிறிலங்கா இராணுவத்தின் வடபகுதி தொடர்புகள் அனைத்தும் சீர்குலைந்தன. இதனை மீண்டும் ஏற்படுத்த ஆனையிறவு பெருமுகாமில் இருந்து பெரும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## கரடிப்போக்குச் சந்தியில் தொடரும் கடுஞ் சமர்கள்

விடுதலைப் புலிகளால் கிளிநொச்சி முகாம் கைப்பற்றப்பட்ட வேளையில் இறந்தவர்கள் போக உயிர் தப்பியவர்கள் பரந்தன் நோக்கி விரட்டப்பட்டனர். இவ்வாறு ஓட ஓட விரட்டப்பட்ட சிறிலங்காப் படைகள், கிளிநொச்சியை மீண்டும் கைப்பற்றும் நோக்குடன் கரடிபோக்குச் சந்தியிலிருந்து பலமுறை முன்னேற எடுத்த முயற்சிகள் யாவும் இராணுவத்தின் பலத்த இழப்புக்களுடன் விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டன. கிளிநொச்சியில் கொல்லப்பட்ட (300க்கு மேல்) படையினரின் இழப்பை மட்டுமல்ல, இச்சமர்களில் இறந்த படையினரின் இழப்பையும் சிறிலங்கா அரசும் அதன் பாதுகாப்பு வட்டாரங்களும் வழக்கம் போல் பகீரதப் பிரயத்தனம் செய்து மறைத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இச்செய்தித்தாள் அச்சுக்குப் போகும்வரை கரடிப்போக்குச் சந்தியில் கடும்மோதல்கள் இடம் பெறுவதாகத் தாயகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## யாழ். குடாநாட்டிலும் வெற்றித் தாக்குதல்கள்

இதேநேரம், யாழ். குடாநாட்டினுள்ளும் விடுதலைப் புலிகள் வெற்றித் தாக்குதல்களை நடாத்தி வருகின்றனர். யாழ். குருநகர்ப் பகுதி சவக்காலைச் சந்தி, மடத்தடிச் சந்தி ஆகிய பகுதிகளில் இருந்த 25 காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் ஏககாலத்தில் தொடுத்த தாக்குதலில் இவைகள் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டு ஒன்றரை மணி நேரத்துக்கும் மேலாக அவர்களின் பூரண கட்டுப்பாட்டில் இருந்துள்ளது. இந்நேரத்தில் இராணுவத்தின் 5 சிறுபடகுகள் அழிக்கப்பட்டதுடன் சிங்களப் படைநிலைகளும் தீமூட்டி எரிக்கப்பட்டன. இவ் வெற்றிகரத் தாக்குதலின்போது, இராணுவத்தினர் தமது உயிர் காக்க ஓடித் தப்பித்துக் கொண்டனர். ✱

www.tamilarangam.net



# தாயகம் நோக்கிய பயணம்

## முதலாம் பாகம்

### அத்தியாயம் இருபது

(தொடர்ச்சி)

கிடியோன் திட்டம் இறுதிக் கட்டத்தையடைய இன்னும் சில நாட்களேயிருந்தன. இதனால் ஏற்பட்ட பரபரப்பு மார்க்கை மிகவும் பாதித்தது. கிற்றியுடைய புதினமான நடத்தை அவனை இதைவிடவும் பாதித்தது. அவன் கிங் ஜோர்ஜ் ஹோட்டலில் அவளைச் சந்திக்க ஒரு நோ[illegible]ழுங்கு செய்து கொண்டான்.

அவன் பாமாகுஸ்ராவுக்கு வாகனத்தைச் செலுத்திச் செல்லும்போது, அவனது உணர்ச்சிகள் கொந்தளித்துக் கொண்டிருந்தன. எல்லா விடயங்களும் மிகவும் இலகுவாக நிறைவேறியிருந்தன. பென் கானானும் அவனுடைய கள்வர் கூட்டமும் பிரிட்டிஷ்காரரை நன்றாகவே ஏமாற்றிக் கொண்டிருந்தார்கள். பிரிட்டிஷாருக்கு ஏதோ நிகழ்வது புரிந்ததேயொழிய, வெளியாட்களின் வேலை இது வென்று புரியவேயில்லை. பென் கானானின் துல்லியமான காரியங்களைச் செய்யும் முறையையும் திறமையையும் பால்மாக்குகளின் துணிச்சலையும் மார்க் மிகவும் வியந்தான். எக்ஸோடஸ் கப்பலை வேண்டிய விதத்தில் வடிவமைப்பதும், பிள்ளைகளைப் பயிற்றுவதும், சரியான முறையில் நிறைவடைந்தன. இது அவனுடைய தொழிலில் ஒரு முக்கியமான நிகழ்வாக இருந்தாலும், அதனைவிட இந்த நிகழ்வுகளில் அவன் ஒரு முக்கிய பங்கு வகிப்பதனாலும் அவன் மிகவும் கவலையோடிருந்தான்.

கடலைப் பார்த்துக் கொண்டிருக்கும் புற்றரையோடு கூடிய கடற்கரையில் அமைந்திருப்பதால், டோம் ஹோட்டலைப் போலவே தோற்றமளித்த கிங் ஜோர்ஜ் ஹோட்டலின் வெளிப் புறத்தில் தன் வாகனத்தை நிறுத்தினான். கடலைப் பார்த்தபடி மேசையொன்றின் அருகில் அமர்ந்திருந்த கிற்றியைக் கண்டு கொண்டான்.

ஹெலோ மார்க், என்று அவனை வரவேற்ற அவள், அவன் அருகில் வந்தமர்ந்ததும், கன்னத்தில் அன்பாக முத்தமிட்டாள்.

அவன் மதுபானங்களுக்கு உத்தரவிட்டுவிட்டு, தனக்கொன்றும், அவளுக்கொன்றுமாக இரு சிகரட்டுகளைப் பற்ற வைத்துக் கொண்டான். அவள் மிகவும் உற்சாகமாக இருந்தாள். கைரேனியாவுக்கு வந்த நாட்களோடு ஒப்பிடும் போது பத்து வயதாவது இளமையாகத் தோற்றமளித்தாள்.

அவனது கசப்போடு கூடிய மூத்த தோற்றத்தைக் கண்டும் அவள், "நீ, மகிழ்ச்சியின் மறுவடிவம் போல் தோன்றுகிறாய்" என்று கூறத் தோன்றுகிறது என்றாள்.

சொல்லியிருந்த மது வகைகள் வந்து சேர்ந்தன.

அந்த முக்கிய நிகழ்வை எதிர் பார்த்து முள்ளின் மேல் இருப்பது போல் இருக்கிறாய் அல்லவா?

"ஆமாம், அப்படியில்லாமல் இருக்க முடியுமா?" வெடித்தான் அவன்.

தங்கள் தங்கள் குவளைகளின் மேலாக அவர்கள் பார்வைகள் சந்தித்துக் கொண்டன. கிற்றி தன்னுடைய குவளையை விரைவாக கீழே வைத்தாள். "மெத்தச்சரி மிஸ்டர் பார்க்கர், நீ ஒரு பாதையோர அறிவிப்புப் பலகை போல மினுமினுத்துக் கொண்டிருக்கிறாய். நீ வெடிப்பதற்கு முன், ஏதாவது கதைக்கத் தொடங்கி விடு."

"என்ன விஷயம்? என்னில் கோபமா? என்மேல் இப்போ பாசம் ஏதுவும் இல்லையா?"

"ஐயோ, மார்க் நீ, இவ்வளவு மெல்லிய உணர்வுகளையுடையவன் என்று எனக்குத் தெரியாது. நான் மிகக் கடுமையாக வேலை செய்து வந்தேன். நாங்கள்தானே ஒருவரையொருவர் அடிக்கடி சந்திக்கக் கூடாதென்று தீர்மானித்துக் கொண்டோம். அப்படியல்லவா மார்க்?"

"என் பெயர் மார்க் பார்க்கர். நாங்கள் நண்பர்களாயிருந்தோம். நாங்கள் முன்பு விஷயங்களைப் பேசித் தீர்த்துக் கொள்வோம்." புதிதாக ஞாபக மூட்டுவதுபோல் சொன்னான்.

"நீ என்ன சொல்ல முயற்சிக்கிறாய் என்று எனக்குப் புரியவில்லை."

"கரேனைப்பற்றி. . . . . கரேன் கிளமென்ற் ஹான்சன். ஜேர்மனிக்கூடாக டென்மார்க் வந்த அந்த சிறிய அகதிப் பெண்."

"அவளைப்பற்றி விவாதம் செய்ய ஏதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை...?"

"இருப்பதாக நான் நினைக்கிறேன்."

"என் விருப்பத்துக்குரிய அழகான குழந்தை அவள். அவள் என்னுடைய சிநேகிதி. நான் அவளுடைய சிநேகிதி.

"உனக்கு பொய்யைச் சரியாகச் சொல்லத் தெரியாது."

"நான் இதைப்பற்றிக் கதைக்க விரும்பவில்லை."

"நீ, பிரச்சினையை விலை கொடுத்து வாங்கப் போகிறாய். கடைசி முறை கடற்படை வீரனோடு கட்டிலில் இருப்பதில் முடிந்தது. இம்முறை நீயே உன்னைக் கொன்று கொள்ளும் மனோதிடத்தைக் கொண்டிருக்க வேண்டும்."

பார்க்கரின் பார்வையைத் தவிர்த்து அவள் கண்கள் கீழ்நோக்கின. "இந்த சில வாரங்கள்தான் நான் என் வாழ்க்கையில் மிக நிம்மதியாக இருந்தேன்."

"நீ, எல்லாவற்றையும் ஒரேயடியாகச் சரிப்படுத்த முயல்கிறாயா?"

அவள் ஆதரவு தேடுவது போல் தன் கையை அவன் கை மேல் வைத்துக் கொண்டே, "ஏதோ பழைய வாழ்க்கையை மறுபடியும் வாழ்வது போலிருக்கிறது. ஆயினும் இவற்றில் ஏதும் அர்த்தப்படுத்திக் கொள்ள முடியவில்லை. அவள் ஒரு அற்புதமான குழந்தை மார்க்" என்றாள்.



"அவள் எக்ஸோடசில் போனதும் என்ன செய்யப் போகிறாய்? அவளைத் தொடர்ந்து பலஸ்தீனம் போகப்போகிறாயா?"

கிற்றி தனது சிகரெட்டை அழுத்தி அணைத்த பிறகு, தன் கண்களை ஒரு வகையாகக் குறுக்கிக் கொண்டாள். அதன் அர்த்தம் மார்க்கிற்குப் புரிந்திருந்தது.

"நீ என்ன செய்திருக்கிறாய்" அவன் வற்புறுத்திக் கேட்டான்.

"அவள் எக்ஜோடசில் போக மாட்டள். அரி பென் கானானோடு வேலை செய்வதற்கான என் நிபந்தனை அதுதான்."

"நீ ஒரு அடிமுட்டாள்.. அடிமுட்டாள்.. கிற்றி"

"சரி, சரி.. போதும் நிறுத்து! இந்த விடயத்தை ஏதும் மரியாதையில்லாத தனமாக எதையாவது உருவாக்கிவிடாதே. நான் அந்தப்பிள்ளை தரக்கூடிய அன்பை போன்ற ஒன்றிற் காகவும், என்னால் அவளுக்குக் கொடுக்கக்கூடிய இது போன்ற புரிந்துணர்விற்கும் நட்புக்காகவும், நான் பலகாலம் தனிமையில் தவம் கிடந்தேன்."

"நீ, அவளின் சிநேகிதியாய் இருக்கும் நோக்கமில்லை. நீ, அவளுக்குத் தாயாக இருக்க முயல்கிறாய்?"

"அப்படியிருந்தால் கூட என்ன. அதில் கூட ஒரு பிழையுமில்லை."

"இங்கே பார், ஒருவரை ஒருவர் கடிந்து கொள்வதை நிறுத்துவோம். அமைதியடைவோம்.

தொடரும்...

**தங்கள் தாயகத்தை விட்டு அடித்துத் துரத்தப்பட்ட யூத மக்கள் 100க்கு மேற்பட்ட நாடுகளில் குடியேறியிருந்தார்கள். ஆனால் 2000 ஆண்டுகளாக அடுத்த செடார் திருநாளை "ஜெருசலேத்தில் கொண்டாடுவோம்" என்ற வசனத்தை அவர்களது வருடாந்த செடார் பண்டிகையின் போது பிரார்த்தனையின் இறுதியில் கூறி வந்தார்கள்.**

## வாசகர் கவனத்திற்கு !

இங்கு பிரசுரிக்கப்பட்டுள்ள இப்படத்திற்கு பொருந்தக்கூடிய வகையில் எட்டுவரிகளுக்கு மேற்படாமல் கவிதை வரையுங்கள். உங்கள் ஆக்கங்களை **13 - 03 - 1998** இற்கு முன்பாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறு கீழ்தரப்பட்ட முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.



கவிதை அனுப்ப வேண்டிய முகவரி:

**'Kalathil',**

**Eelam House, 202Long Lane, London SE1 4QB.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






## வழியனுப்பும் தாய்

தமிழன்னை வயிற்றில் தவழ்ந்த மறக்கொழுந்தே
நம்குலம் காத்திட மாவேங்கையென எழுந்தனையோ
மணக்கோலம் பூணாது போர்க்கோலம் பூண்டாயோ
முத்தமிழும் பாடாதோ உன் உள்ளக்குமுறலை
பெத்தவளும் வாழ்த்தியனுப்பும் பாக்கியமோ
எத்தவம் புரிந்தேனம்மா உன்னைப் பெற்றிடவே
வெற்றிவாகையுடன் திரும்புவாய் என வாழ்த்தினேனம்மா!

**–தனா, லண்டன்.**

## சென்று வா தாயே!

மகனற்றபோதும் மகனாய் நின்றாய்
துணையற்றபோதும் துணையாய் நின்றாய்
வறுமையிலும் மானமாய் வாழ்வே தந்தாய்
எம்மண் மீட்க செல்லவே துணிந்தாய்
ஈழத்தாயகம் உன்னால் என்றாய்
சென்று வா மகளே சென்றுவா!
சென்று வா தாயே சென்றுவா!

**–அருள், யேர்மனி.**



## என் மகளே!

தமிழ்க்குலப் பெண் வயிற்றில் பிறந்தவளே
மண்ணிற்காய் உயிர்த்தியாகம்
செய்யத்துணிந்தவளே
பெண்ணின விலங்குடைக்க களத்திடை
சென்றவளே
எம் மானம் காக்க புலலென எழுந்தவளே
உன் தாயை எண்ணி கலங்காதே
சீறும் புலியானாய் வரலாற்றை படைத்துவா
மகளே!

**–துஸ்யந்தி சற்குணநாதன், பிரான்ஸ்.**

## காலத்தின் தேவை

மடியில் இட்டுப்பால் ஊட்டி,
நிலவைக் காட்டி சோறு ஊட்டி,
பள்ளிக்குச் சென்றுவரும் பெண்ணை
வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தாய்–அன்று.
அழிக்கவந்த எதிரியை
ஒழித்துவிட்டு வாவென
நெற்றித்திலகம் இட்டு அனுப்புகிறாய் –இன்று.

**–செல்வி. றஜிதா இரகுபதி, யேர்மனி.**

## புலியாகி வந்த புதுயுகமே.

புலியாகி வந்த புதுயுகமே பூமகளே
கலி தீர்க்கப் பிறந்துவந்த கனியமுதே
எங்கெல்லாம் தேடினேன் உன்முகம் காணாமல்
சங்கத்தாய் மரபினிலே எனைச்சேர்ந்த காரிகையே
பாரினிலே புலிவீரம் பறைகொட்டும் நேரமிது
பாவை உந்தன் முகங்காண என்இதயம் மலருதடி
உன்னை வாயார வாழ்த்துதற்கு வார்த்தைவர மறுக்குதடி
என்னைநீ புரிந்துகொள்வாய் என்நிலைமை என்னவென்று!

**–புங்கையூர் சுபாஷனி பாலசுப்பிரமணியம்,
யேர்மனி.**

## காத்திருப்பேன்

கண்ணே என் கண்மணியே
களம் காணப் புறப்பட்டாய்
அகப்பையோடு என்காலம் போச்சு
ஆயுதமின்று உன் கையிலாச்சு
வாழ்த்தி அனுப்புகிறேன் வெற்றி சூடிவா.
சுதந்திரச் செய்தியோடு நீ வரும்வரை
அந்த எமனையும் என்னிடம் வரவிடேன்
இந்த பாட்டி உனக்காக காத்திருப்பேன்.

**–பொன் சிவா, நோர்வே.**

## இவளும் அவளும்

இழப்பதற்கு இனி
எதுவுமின்றி ஏங்கி நிற்கும்
ஈழத்தமிழ்த் தாய்–அவள்.
நெருப்பினை ஏந்தி
நேர்கொண்டு நோக்கி
பகைதன்னைச் சாடி(ப்)
பறித்தவை மீட்கும்
ஈழத்தமிழ் மகள் – இவள்.

**–அமலா ஜெயந்தன், யேர்மனி.**

## அக்கினிப் பூ

பெண்ணினம் தலை நிமிர
பெற்றவள் அகம் மலர
பெருந்தலைவன் படைசேர்ந்து
போர்த்திறனே புலிகள் என
அரக்கனை கொன்றொழிக்க
அக்கினியை உமிழ்ந்து
மண்ணையும் மக்களையும் காக்கின்ற
மங்கை இவள் ஒரு அக்கினிப்பூ.

**–செட்டீஸ், யேர்மனி.**

## மறத்தமிழ் மகளே!

பெண்ணென்று பிறந்துவிட்டால்
பொன், பொருள் சேர்க்க வேண்டும்
என்றெண்ணும் நிலை மாற்றி–தாய்
மண்காக்கத் துணிந்திட்ட மறத்தமிழ் மகளே!
கரங்களில் துப்பாக்கி
கழுத்தினில் சயனைற் குப்பியுடன்
சினங் கொண்டு நீ சீறுகையில்
சிந்தை கலங்கிப் பின் களிக்குதடி.

**–சந்திரவதனா செல்வகுமாரன், யேர்மனி.**

## தமிழ்ப் பெண்ணே!

விடிவொன்று உண்டு விடைகொடுதாயே விலங்
கொடியும் விரைவில் நெடி துயர் தீரும்
முடிவொன்று கிட்டும் முதல்வன் படையாலே!

கொடிதுயர் தீர்க்க வடிவினை எடுத்தாய்–தமிழீழ
கொடிதனை வணங்கும் அடிமனம் கொண்டாய்–தமிழீழ
மடிதனில் தவழும் மறத்தமிழ் பெண்ணே!

**–இராஜ குகன், இத்தாலி.**

## வீரத்தாய்

என்னிடம் குடித்தது வீரப்பால் என்பதனால்
எதிர்படை திணற களமாடு
மாறிக் குண்டு பாயுமானால்
முதுகிலே வேண்டாம் நெஞ்சிலே பாயட்டும்!
என்னிடம் குடித்தது வீரப்பால் என்பதனால்
எரிகின்ற நெருப்பாய் எதிரி சாம்பலையும்
சுட்டுவிடு
காற்றிலே நீகரைந்துபோனால் கலங்கமாட்டேன்
விளக்கடியில் ஒடியலும் குரக்கனும்
நான்படைப்பேன்.

**–மதன், லண்டன்.**

## ஆக்கங்கள் அனுப்பியோர் அனைவருக்கும் நன்றி:

யேர்மனி–சதீஸ், வரன் விஜி, இர. நடா, க. மாலினி, சடாச்சரம் தயாளசேகர், சாலினி, பா. காந்தரூபன், மறவன்புலோ செ. தயா, வே. பிரமிளா, பாலசிங்கம் சுலோமி, கு.சடகோபன், சந்திரன், ஏ. றி. இம்மானுவேல்.
இத்தாலி–ப. நிமலதாஸ், காரை ந. சேகர், சி. பிரதீபன், அல்லையூர் சி. விஜயன், இராஜ குகன்.
டென்மார்க்– த. செல்லம்மா, வீ. கஜன்.
நோர்வே– உடுத்துறையூர் ஜெயந்தி.
அவுஸ்த்திரேலியா–திருமதி. மாலா, துரை.
சுவிற்சர்லாந்து– வி. தில்லையம்பலம், செல்வி தில்லையம்பலம் தேவமதுரா, திருமதி தில்லையம்பலம் பத்மா, க. ஜெயசகுந்தன்.
பிரான்ஸ்– தனம்
அனுசூர்யா இளையவன், வல்வை கித்துள், விஸ்வமடு பற்பன், திரவியராசா பிரகாஸ், நாவற்குழியூர் விஜி.

## விடியலைத் தேடு

உன் ஆத்தாளும் அக்காளும் இல்லையடி
உன் அருமைத் தம்பியும் என் ஆசைமகனும் எங்கோ...
நெற்றித்திலகமிடுவேன் நேரம் உனக்கில்லை.
போய் வருமுன் குழந்தாய் உன்
பட்டுக் கன்னத்தை தொட்டுப்பார்க்கின்றேன்
வீரம் பொறிபறக்கட்டும் களத்தில்
இருளை அழித்து விடியலைத் தேடு.

**–வீ. நாகராசா, பிரான்ஸ்.**

## வென்றுவரும் வரை..

தலைவாரிப் பின்னலிட்டு
சிறுத்தையெனச் சீருடையில்
தாய் மண்ணை மீட்டெடுக்க
சீறியெழுந்த என் மகளே
சென்று வா தாயே
வென்று வா – என்
கூந்தல் அள்ளி முடியேன்
நீ வென்று வரும்வரை.

**–சி. கு. நந்தகுமார், அவுஸ்த்திரேலியா.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இரு வாரத்துக்கொருமுறை கடிதம் மூலம் சந்திப்போம்!

*அன்புத் தமிழ்ச் சகோதரமே!*

பெருந்திரள் பேரணிகள். உலகின் தலைநகர்களில் தமிழீழ மக்களின் எழுச்சியை - விடுதலை உணர்ச்சியை கடந்த வாரங்களில் எடுத்துக் காட்டின. கடுங்குளிரையும் பொருட்படுத்தாமல் பல்லாயிரமாய்ப் பெருகி வந்த உங்கள் ஒவ்வொருவரையும் கண்டு தமிழீழத் தாய் பேரானந்தம் அடைந்தாள் என்பதை நாம் கூறத் தேவையில்லை. ஒவ்வொரு பேரணியிலும் எழுப்பப்பட்ட ஓசைகள். எமது தமிழீழ மக்களின் குரல்களாக உலகின் மனச்சாட்சியை உலுப்பி இருக்குமென நம்பலாம். ஆனாலும். நாம் நினைப்பது போல் உலக அரசுகள் நீதிக்கும் நேர்மைக்கும் செவி சாய்க்கும் அரசுகள் அல்ல. ஒவ்வொரு அரசுக்கும் அதனதன் சார்புநிலைகள். சந்தை உறவுகள். சர்வதேச விரிவாக்கங்கள். இராணுவ நலன்கள் உண்டு. ஆதலால் அவை எப்பொழுதுமே. தமது அரசு ஒழுங்குமுறையைப் பேணும் போக்கினையே கடைப்பிடிக்க முற்படுவது வழமை.

இதனால்தான். இலண்டனில் நடந்த பேரணி முடிவுக்கூட்ட மேடையில் ஒரு வசனம் எழுதப்பட்டிருந்தது. ''தேசமக்களுடன் தேச மக்கள் பேசட்டும். உலக மக்கள் ஒருவரோடு ஒருவர் உரையாடட்டும்'' என்பதே அவ் வசனம். ஆம்! அரசுகள் சந்தை நலன்களைப் பேணட்டும். நாம் உலக சகோதரத்துவத்தைப் பேணுவோம். அரசுகள் ஆயுதங்களை விற்பனை செய்து மகிழ்வதற்கு ஏற்ற சூழ்நிலைகளை வளர்க்கட்டும். நாம் அந்த அரசுகளின் தேசமக்களுக்கு தமிழீழத் தேச மக்கள் என்ற மிடுக்குடன். எமது தமிழீழத் தாயகத்தில் அந்த ஆயுதங்கள் தமிழீழத் தேசத்து உட்கட்டுமானங்களை எவ்வாறு சிதைக்கின்றன. தமிழர்களின் உயிர்களை உடல்களை உடமைகளை எவ்வாறு பலிகொள்கின்றன என்ற உண்மையை எடுத்துரைப்போம். அப்போது தேசங்கள் விடும் தவறுகளை தேசமக்கள் திருத்தும் காலம் வரும்.

நம்பிக்கை வரட்சி என்பது. சத்தியத்திலும் தர்மத்திலும் நம்பிக்கை கொண்டு நடைபெறும் தமிழீழப் போராட்டத்தில் ஏற்பட மாட்டாது - ஏற்படக்கூடாது. ஆதலால் சிறிலங்கா அரசு. காலனித்துவம் வழங்கிய அதிகாரத்தைக் கொண்டு தன்னை இலங்கைத் தீவின் சட்டபூர்வ அரசாகக் காட்டி. தமிழர்களைப் பகிரங்க இனக்கொலை செய்தும் மனிதர்களாகக் கூட மதிக்காது உணவும் மருந்தும் கல்வியும் தொழிலும் மறுத்து. அவர்கள் தம் உழைப்பால் உதிரத்தால் கட்டிய இருப்பிடங்களில் இருந்து விரட்டியும் செய்யும் இனத்துன்புறுத்தல்களை உலக மக்களுக்கு நம்பிக்கையுடன் தொடர்ந்தும் எடுத்துச் சொல்வோம். உலகில் எந்த நாட்டிலாவது தன்னை அந்நாட்டின் அரசு எனக் கூறிக்கொண்டு அந்த நாட்டு மக்களுக்கு மேலேயே விமானக் குண்டை. எறிகணையை வீசிய வரலாறு உண்டா? உலகில் எத்தனையோ நாடுகளில் சுயநிர்ணயப் போராட்டங்கள் நடைபெறுகின்றன. அந்நாடுகளின் அரசுகள் ஒருபொழுதும் அந்த சுயநிர்ணய உரிமையைக் கோரும் மக்கள் அத்தனை பேரையும் அச்சுறுத்தவில்லை - அழிக்கவில்லை - இராணுவ முற்றுகை இடவில்லை. சிறிலங்கா மட்டும்தான் தமிழர்களுக்கு இதனைச் செய்கிறது என்றால். சிறிலங்கா தமிழர்களைத் தனது குடிகளாகக் கருதவில்லை என்ற உண்மையையே அது வெளிப்படுத்துகிறது. சிறிலங்கா இலங்கைத்தீவில் தமிழ் அரசுகளும் சிங்கள அரசுகளும் இருந்த வரலாற்று உண்மையை தனது உளவியலாகக் கொண்டு தமிழ் அரசை அழிப்பதற்குக் காலனித்துவம் கொடுத்த அரசியல் அதிகாரத்தைப் பயன்படுத்துகிறது. ஆதலால்தான் நாம் தெளிவாகக் கூறுகிறோம். இது சிறுபான்மை - பெரும்பான்மை மோதல் அல்ல. பௌத்த - இந்து போரும் அல்ல. ஒருநாட்டின் உள்நாட்டுப் பிரச்சனையும் அல்ல. இது தமிழீழத் தேச மக்களுக்கும் சிங்களத் தேச மக்களுக்கும் இடையிலான முரண்பாடு. காலனித்துவம் உருவாக்கிய பிரச்சனை. நவகாலனித்துவத்தால் வளர்க்கப்பட்ட சிக்கல். 1972இல் சிறிலங்கா பௌத்த குடியரசு பிரகடனப்படுத்தப்பட்டதால் தமிழர் மேல் ஆக்கிரமிப்பு ஒன்று அப்பட்டமாக திணிக்கப்பட்டு வருகிறது. இதற்கு எதிராக தமிழர்கள் சுயநிர்ணய உரிமைக் குரலை எழுப்பலாம் என்பது ஐக்கிய நாடுகள் சபையின் சாசனங்கள் தமிழர்களுக்குக் காட்டும் வழி. அதனைத்தான் தமிழர்கள் செய்தனர் - செய்கின்றனர். அரசற்ற தேச இனமாக்கப்பட்ட தமிழர்கள். தமது அரசியல் எதிர்காலத்தைத் தாமே நிர்ணயித்து தாம் தமது வரலாற்றுத் தாயகமான தமிழீழத் தேசத்தை மீள அமைக்கப் புறப்பட்டனர். 1975இல் சிறிலங்காப் பாராளுமன்றத்தில் இதற்கான காரணங்களைக் கூறி சுயநிர்ணய உரிமைப் பிரகடனம் விடுக்கப்பட்டது. 1976இல் வட்டுக்கோட்டைத் தீர்மானத்தால் தமிழீழத் தேசத்தை மீள நிறுவுவோம் என்ற உறுதிமொழி உலகுக்கு விளக்கப்பட்டது. இதற்கு. 1977 பொதுத் தேர்தலை குடியொப்பமாக மாற்றி மக்கள் அங்கீகாரம் வெளிப்படுத்தப்பட்டது. இந்தக் குடியொப்ப விஞ்ஞாபனத்தில் அத் தேர்தலில் தெரிவாகும் பிரதிநிதிகள் தமிழீழத் தேச அரசமைப்பு சபையாக மாறி தமிழீழத் தேசத்திற்கான அரசியலமைப்பை வகுத்து தமிழீழத் தேசத்தை இயக்குவர். இதனை ஜனநாயக வழிகளில் நேரடி நடவடிக்கைகளில் அடைய முடியாவிட்டால் ஆயுதப் போராட்டத்தால் எய்தப்படும் எனவும் தெளிவாக விளக்கப்பட்டிருந்தது.

இந்த சட்டபூர்வமான ஆயுதப் போராட்டத்தை ஒடுக்கும் இராணுவ நடவடிக்கைகளை சிறிலங்கா பிறப்பித்ததின் விளைவே. இன்றைய தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் ஆகும். ஆனால் இதனை 'பயங்கரவாதம்' எனக் கொச்சைப்படுத்தும் அரச பயங்கரவாதியான சிறிலங்கா. தனது அரச பயங்கரவாதத்தால் தமிழர்களை இந்த நாகரீக உலகில் நாளும் பொழுதும் படுகொலை செய்து மகிழ்கிறது. இவற்றையெல்லாம் கண்டும் காணாமலும் இருக்கும் வல்லாண்மை அரசுகள் இந்த தமிழீழ - சிங்கள தேச இனங்களுக்கு இடையிலான முரண்பாட்டை தமது ஆயுத விற்பனைச் சந்தையாக ஆக்கியும். தனது இராணுவ கேந்திர நிலைகளாக இந்து சமுத்திரத்தை அகப்படுத்தும் சூழ்ச்சி வலைகளை விரித்தும் இன்னும் விபரமாகப் போனால். இந்தியா உட்பட தென்னாசியாவில் தலையீடுகளை மேற்கொள்ளும் களமாகப் பாவித்தும் வல்லாண்மை அரசுகள் சிறிலங்காவுடன் உறவாடுகின்றன. ஆயுதம் வழங்கி பயிற்சியும் அளிக்கின்றன. இவையெல்லாம் தெரிந்தும் எதிரிக்கு சகுனப் பிழையாக வேண்டுமென்பதற்காகத் தன் மூக்கையே அறுத்துக் கொண்டவன் கதையாக சந்திரிகா அம்மையார் தமிழீழக் கொடியை இறக்குவதற்கு சர்வதேச வல்லாண்மைச் சக்திகளிடம் இலங்கைத் தீவையே விற்று வருகிறார். ஆனால். இறக்கப்படப் போவது தமிழீழக் கொடியல்ல. தென்னாசியாவின் சுதந்திரமும் இந்து சமுத்திரத்தின் அமைதியுமாகும். இந்த உண்மைகளை மறந்து தனக்குத்தானே குழிவெட்டும் செயலில் இந்திய மத்திய அரசு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. பாகிஸ்தானும் பங்களாதேசம் மற்றைய தென்னாசியா நாடுகளும். தமிழீழப் போராட்டத்தை முறியடிப்பதற்கு சிறிலங்கா எடுக்கும் ஒவ்வொரு முயற்சியும் சர்வதேச அமைதி - பாதுகாப்புக்கு மட்டுமல்ல. தென்னாசிய அமைதிக்கும் பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக உருமாறி வருவதை உணர முடியாத அல்லது உணர்ந்தும் அக்கறையற்ற நிலையில் உள்ளன.

ஆகவே. இந்த தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டம் உலக நாடுகளின் கவனத்தை ஈர்த்துவரும் தன்மையையும் இதனால் எமக்கும் தென்னாசியாவுக்கும் ஏற்படக்கூடிய பிரச்சினைகளையும் இவை வளர்வதினால் சர்வதேச அமைதிக்கு ஏற்படக்கூடிய பேராபத்துக்களையும் ''தேச மக்களோடு தேச மக்களாக நாம் பேசுவோம்''. தமிழீழத் தேசிய விடுதலைப் போராட்டத்தை அங்கீகரித்தல் ஒன்றினாலேயே இந்த சர்வதேச தலையீடு தென்னாசியாவில் இலங்கைத் தீவினூடாக வளர்வதைத் தடுக்கலாம் என்ற உண்மையை ''மக்களோடு மக்களாக உறவாடி'' விளக்குவோம். விடுதலைப் புலிகள் எதையும் பிரிக்கப் போராடவில்லை. எல்லாவற்றையும் பாதுகாக்கவே போராடுகின்றனர்.

காலனித்துவத்தில் இருந்து சுதந்திரம் பெற்ற சுதந்திரப் பொன்விழா என மகிழும் சிங்கள தேச மக்களுக்கு. சந்திரிகா அம்மையார் மீளவும் காலனித்துவம் ஒன்றுள் இலங்கைத் தீவைத் தள்ளியாவது தனது பதவியைத் தக்க வைத்துக் கொள்ளத் தயங்கார் என்ற எண்ணம் எழுந்துள்ளது. இது நியாயமான அச்சம்தான். தேசமக்கள் தேசமக்களுடன் பேசாவிட்டால். தேசியங்கள் தேசியங்களுடன் சமத்துவமான சகோதரத்துவ உறவை வளர்க்காவிட்டால். அங்கு அடிமைத்துவம் பிறரால் உருவாக்கப்படுவது உலக வரலாறு. சிங்கள மக்கள் தமிழ் மக்களை எதிரியாகக் கருதும் உளவியல். அரசியலாக இலங்கைத் தீவில் வளர்க்கப்பட்ட பின் இனி ஒரு வழிதான் உண்டு. சிங்கள தேச மக்களும் தமிழீழத் தேச மக்களும் தமது வரலாற்றுத் தாயகங்களை தனித்தனியான அரசுகளாக வெளிப்படுத்தி அந்த அரசுகள் இலங்கைத் தீவில் பாதுகாப்பான அமைதி மீள ஆவன செய்தல் என்பதே அவ்வழி. அப்பொழுததான் இலங்கைத் தீவில் உண்மையான சுதந்திரம் சிங்கள மக்களுக்கும் பிறக்கும். இதனால்தான். தமிழீழ விடுதலைப் புலிகள் எல்லாவிதமான ஒடுக்குமுறைகளையும் உடைத்தெறிய இலங்கைத் தீவில் போராடுகிறார்கள் என ஆய்வாளர்களால் வர்ணிக்கப்படுகின்றனர்.

இந்த உண்மைகளை சர்வதேச மக்களுக்கும் தென்னாசிய மக்களுக்கும் சிங்கள தேச மக்களுக்கும் எடுத்துரைப்போம். தமிழீழ விடுதலைப் போரட்டம் வெற்றி பெற உழைப்பது என்பது. இலங்கைத்தீவின் அமைதிக்கும் தென்னாசியாவின் அமைதிக்கும் சர்வதேச பாதுகாப்பிற்கும் செய்யும் பணி என்பதை உலக மக்களுக்கு எடுத்துரைத்து. போராட்டம் வெற்றிபெற இயன்றவை அனைத்தும் செய்ய உறுதி பூணுவோம்.

*அன்பின்*
*ஆசிரியர்.*

## ஒரு மயக்கம் ........
## (சிறுகதை (தொடர்ச்சி)

"வீடும் வயல், காணியும் எண்டாள் மீண்டும் அம்மா."

"அவற்றை தேப்பன், காசு கட்டாயம் எண்டு நிற்கிறார்"

"பேசாமல் விடுங்கோ. எங்களிட்டை என்ன கிடக்கு" குடுக்க. வீட்டைப் பாருங்கோ இன்னும் மேயேலை. மழை வரப்போகுது."

"......"மௌனம் இப்போது அம்மாவின் முறை.

விநாயகம் அப்பா ஒரு மாதிரி எண்டு சொன்னவர்தானே. அவரிட்டை சொல்லி கதைக்க வேனும் என மனதில் நினைத்தாள். ஆனால், மறுநாள் அவன் அவளைக் கண்டு மறுபுறம் திரும்பியதும் துணுக்குற்றாள்.

"ஏன் பேசாமல் போறியள் பூரணி?" "......"

"அப்பா ஒரு லட்சம் வேணும் எண்டாராம்"

"அவர் அப்படித்தான் சொல்லுறார்"

"அவர்தானே சொல்லுறார். நான் நீங்களுமோ எண்டுபயந்...." அவள் முடிக்கவில்லை. "நான் என்ன ரீச்சர் அவரை எதிர்க்கேலுமே. ரீச்சர் பூரணியாகி, பூரணி நீயாகி, மாறிவிட்ட அவர்கள் உறவு—அவன் ரீச்சர் என்றதும் அவள் சுக்குநூறாக உடைந்து போனாள்.

அதுமட்டுல்ல, அந்த உறவும் உடைந்து விட்டது என்ற உணர்வு தோன்றியது.

அ...ப்...ப நீ...ங்...க....ள்...., இதிலை நான் எந்த முடிவும் எடுக்கேலாது" தீர்மானமாக வந்தது பதில். சைக்கிள் வேகமாக பறந்தது. அதன் பின்தான்.

"விநாயகம் வெளிநாடு போட்டானாம்"

"விநாயகத்திற்குப் பேச்சுக்கால் நடக்குதாம்"

"பொம்பிளை அனுப்புகினமாம்.

காலத்துக்குக் காலம் வந்த செய்திகள் அவளை உடைத்துத் தள்ளியது உண்மைதான்.

*"விநாயகத்திற்கு அனுப்பின பெட்டை இடையிலை ஆரோடையோ மாறீட்டாளாம்"*

காலம் எப்படி ஓடுகிறது. இன்று அதே விநாயகத்திற்கும் அவளுக்கும் திருமணம்.

அவள் நினைவுச் சங்கிலியை வெளியை இருந்தவர்கள் உடைத்தார்கள்.

"இஞ்சை அண்டைக்கு ஒரு லட்சம் இல்லை எண்டு போனவரை, இண்டைக்கு மூண்டு லட்சம் குடுத்து தம்பிக்காரன் வாங்கீட்டான் பாத்தியளே"

"அதோடை இந்த வீடும் நகையுமாம்" வீடு திருத்த ஒரு லட்சம் கேட்கலாம்.

"விதி ஆரைத்தான் விட்டது. அவன்தான் எண்டால் அவன்தான்.

"மாப்பிள்ளை கலியாணம் சின்னனாய் இருக்கட்டும் எண்டாராம்"

"ஏன் அவசரப்படுகினம் தெரியுமே, சீதனம் வாங்கக்கூடாது எண்டு பெடியள் சட்டம் கொண்டு வரப்போகினமாம். அதுக்கு முந்தி வாங்குவோம் எண்டுதான்."

"38, 40 தாண்டினதை லட்சம் குடுத்து எண்டாலும் கரை ஏத்திப்போடலாம். சட்டம் வந்தால் அதுகளை என்ன செய்கிறது."

"உந்தச் சீதனக் கொடுமை இல்லாட்டி ஏன் நரை தட்டும் மட்டும் கிடக்குதுகள். என்ன விதியே?

அங்கே வந்த காரின் ஒலி எல்லோர் கவனத்தையும் திசை திருப்பியது.

"அக்கா.. .. - அக்கா...." ஓடி வந்தாள் சாந்தி.

பூரணி நீண்டவகிடு எடுத்து தலையை அள்ளி முடித்தாள். ஒரு பூவினைக் கரையிலே செருகினாள்.

"பொம்பிளையைக் கூட்டி வாங்கோ"

"என்ன எழுத்தோ கலியாணமோ"

"இரண்டும் தானாம்"

"அதார் சாட்சி போட நிக்கிறது?"

இப்பிடிப் பல குரல்கள்.

"எங்கை சொல்லுங்கோ" ரெஜிஸ்ரார்.

"சிறீமான் விநாயகம்பிள்ளை ஆகிய நான் இப்பெண் பூரணியைச் சட்ட ரீதியாக மனைவியாக்கிக் கொள்கிறேன். இன்பத்திலும் துன்பத்திலும் சமபங்கு எடுத்துக் கொள்வேன் இது சத்தியம்."

"எங்கை நீங்கள் சொல்லுங்கோ"

"சிறீமதி பூரணி ஆகிய நான்...."

"சொல்லன் பிள்ளை"

"அவாவுக்கு வெட்கமாய் கிடக்குப் போல" ஏளனமான ஒரு குரல்.

"வெட்கப்படுற வயதுதானே"

"சொல்லன் பிள்ளை"

"சிறீமதி பூரணி ஆகிய நான், இச் சபையில் கூறுவதாவது சீதனப் பேய் பிடித்து மூன்று லட்சம் பணத்திற்காகவும், வீட்டிற்காகவும் திருமணம் புரிய வந்த இவரை இச்சபையோர் சாட்சியாக நான் ஏற்றுக் கொள்ளவில்லை. அது மட்டுமல்ல, இன்று தொடக்கம் நான் இந்த மண்ணின் விடிவிற்காகத் தங்கள் உயிரையும் மதிக்காமல் போராடி, தங்கள் உடல்களில் வீர மறப்புண்களை ஏந்தி அல்லல்படும் போராளிகளுக்குத் தொண்டு செய்யவும் அவர்களைப் பராமரிக்கவும் என் வாழ் நாளைச் செலவு செய்வேன். இது உறுதி" கணீரென்று ஒலித்த அவள் குரல், அனைவரையும் திகைக்க வைத்தது. அவர்களுக்கு மயக்கம் தெளிந்த போது அவள் நிதானமாக நடந்து செல்வது தெரிந்தது. ✳

www.tamilarangam.net



# வெளியில் வராத குரல்களாக விழுங்கப்படுகிறது எம் வாழ்வு

மருத்துவர்களால் கைவிடப்பட்ட தீராப்பிணியனின் சிரிப்புப் போலாச்சு
எம் இருப்பு.
யாரோடு நோகலாம்
யார்க் கெடுத்துரைக்கலாம்.
எந்தத் தெய்வம் சபித்தது எம் தலையில்
தீவொன்றில் தனித்து விடப்பட்டவர்களாக நாங்கள்.
எவரெம் குரல்களை உலகிற்குச் சொல்வாரோ
எம்மை நோக்கிய வைய விழிகள் எப்போது திறக்கும்?
இருபத்தியோராம் நூற்றாண்டுக்குத் தாலிகட்டத் தயாராகிறது உலகம்
பதினாறாம் நூற்றாண்டில் படுத்துக்கிடக்கின்றோம் நாம்.
நிரவமுடியாத அகழி
நினைக்க முடியாத தொலைவு
குறுக்கு வெட்டாகத் துண்டிக்கப்பட்டவனே உயிர்க்கும் போது
நெருப்புச் சுட்ட புண்ணுக்கே எங்களுக்கு மருந்து கிடைக்காது.
உலகெங்கும் அடித்து விரட்டப்பட்ட மலேரியா கூட
ஓடிவந்து இங்கேதான் ஒதுங்கிக் கொண்டது.
தடிமல் மருந்துக்கே தட்டுப்பாடு
இங்கே மருத்துவர்கள் கைபிடிப்பது வைத்தியம் செய்ய அல்ல
வெறும் மனநிறைவுக்கே.
சுக்கும் மிளகும் சுடுநீருமே உயிரைத் தாங்கிக் கொள்கிறது.
எத்தனைக்கென்றுதான் அழுவது நாங்கள்.
ஊற்றடைத்துக் கொண்டது வெளிக்கிணறு.
உலகம் ஏன் ஊமையானது?
பூமிப்பந்தின் பரப்பெங்கும் தமிழன் இருக்கிறான்
எம் குரல்கள் மட்டும் ஏன் கேட்க வில்லை?

உறக்கம் கலைக உலகமே
இங்கே சேடம் இழுத்துக்கிடக்கின்றது மனிதப்பிண்டம்
இதற்காகவும் எவரொருவரெனினும் பேசுங்களேன்
உரிமைக்குக் குரல் கொடுக்கும் ஒரு இனத்துக்கு இதுதானா கதி?
ஆரோகளித்திருக்கச் சிம்மாசனமா கேட்டோம் - இல்லை
கால் மடித்திருக்கக் கதிரைதானே கேட்கின்றோம்.
இதற்காகவா இத்தனை பாரச்சிலுவை
இயக்கர்களாக அவர்களும்
நாகர்களாக நாங்களும்
இல்லையெனில்
அவர்களாக அவர்களும் -
நாங்களாக நாங்களும்
இதுவும் இல்லையெனில்
ஏதோ ஒருவழியில் ஒன்றாக இருந்த வீட்டில்தானே
உரிமை கேட்டோம்.
பாதி வீட்டைத் தந்தால் போதும்
மீதி வீடு அவர்களுக்குத்தான்
இந்தப் பிரிவிடுதலுக்கேன் இத்தனை கொதிப்பு.
மிஞ்சிய சோறுவாங்கிக் கும்பிடுபோடுவதற்கு
நாங்கள் ராப்பிச்சைக்காரர்கள் அல்ல.
தாம்பத்தியம் தள்ளாடும் போது விவாகரத்துத்தான் விமோசனம் அளிக்கும்.
சமாதானத் தூதுவர்கள் தோற்றுப்போன போது
பேச்சுவார்த்தை மேசைகள் பூச்சழிந்த பின்னர்தான்
நாங்கள் போருக்கு எழுந்தோம்.
இடிக்கவந்தது மாடு அடித்தோம்.
மாட்டுக்கு அடித்தல் பாவம் என மனுப்போடுபவர்களே
எங்கள் கூட்டையே குலைத்தது குரங்கு
குரங்கை ஏன் குற்றங்காணவில்லை?
யானை வந்து அழிக்கிறது எங்கள் புலவை
வெடி கொழுத்திப் போடுகிறோம்
கலைக்கும் போது மட்டும் கண்டிக்கின்ற வாய்கள்
மிதிக்கும் போது ஏன் ஊமையாயின.
எருமைத் தோல் உடுத்தவனா தமிழன்
சுரணையற்றுக் கிடப்பதற்கு
உதைத்த கால்களுக்கு முத்தமிட்டுக்கிடந்த
ஓர் இனத்தின் ஓரத்தில்
நெருப்புப் பொறி ஒன்று நீறு பூத்துக்கிடந்தது
அது பிரபாகரன்
கோபம் உரசிய போது தீக்குச்சி பற்றிக் கொண்டது.
இன்று தீச்சுவாலை முளாசி எரிகிறது.
தர்மயுத்தம் என்பதே தமிழீழப் போரானது.
பாய்ச்சல் நடக்கும் போது பாவபுண்ணியக் கணக்கு
கொஞ்சம் கூடும் குறையும்
அதற்கேன் இத்தனை ஒப்பாரி?
மரங்களைத் தறிக்காதே!



சூழலை மாசு செய்யாதே!
மிருகங்களை வதையாதே!
பூக்களைக் கிள்ளாதே!
என என்றெல்லாம் குரல்கள் கேட்கின்றனவே
ஈழத்தமிழனை எரித்து முடிக்காதே! என்று எழும்
உலக முகடை இடிக்கும் குரல்கள் எப்போது எழும்?
அவலக் குரலை எப்போது இந்த உலகம் அறியும்?
எல்லைகளை வேலிகளை வரம்புகளைக் கடந்து
ஈழத்தமிழரைத் தாங்கும் நீளும் கரங்கள் எப்போது எமக்குக் கிட்டும்?
அழியும்வரை போராடுவோம் என்பதில் அர்த்தம் கிடையாது
கிட்டும் வரை எட்டுவோம்
உயிரெனப்படுவது மானம்
அதை இழந்து வாழ்வது என்பது சாவுக்குச் சமானம்
பெரும் புயலில் அல்லாடுகிறது எங்கள் போர்ப்படகு
கரையேறக் கயிறெறியுங்கள்
உலகத் தமிழினமே - உலகத் தமிழினமே
உன் போரிது - உனக்கான போரிது
முழக்கம் இங்காகட்டும்
முரசு உனக்காகட்டும்
எம்மைக் காசுக்கு யாசிக்க விடாதே
வாரி வழங்கு வாரி வழங்கு.
தாங்கும் தோளில் ஒன்று உன்தோளுமாகட்டும்.
மூட்டம் போட்ட மேகங்களைக் கலைத்து
உரிமைப் போருக்கு நீ ஊட்டம் கொடு.
வாழ்ந்தான் தமிழன் என வரலாறு எழுதப்படும்போது
முன்னுரையில் உன்பேர் இருக்கட்டும்.

பரணிக்கு நாயகர்களைப் பாட
உலகம் எங்கிலும் இருக்கும் புலவர்களே எழுக!
பொய்மைத் தீ அணைந்து போக உண்மையை வாயால் ஊதுங்கள்
சத்தியமே ஜெயம். சத்தியமே ஜெயம்
சூரியன் யாருக்கும் சேவகம் செய்து
அவர்கள் கால்களில் பூசைகள் செய்யாது.
போரினிலே பிரபாகரன் சேனைகள் சாவினுக்கு அஞ்சியே ஓடாது
சத்தியமே ஜெயம். சத்தியமே ஜெயம்!

-புதுவை இரத்தினதுரை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்